''லக்ஷ்மி''யின்

பூங்கொடி வெளியீடுகளில் சில...

| | |
|---|---|
| அழகின் ஆராதனை | 52.00 |
| அவள் தாயாகிறாள் | 30.00 |
| அடுத்த வீடு | 145.00 |
| அரக்கு மாளிகை | 170.00 |
| அத்தை | 55.00 |
| அவளுக்கென்று ஒரு இடம் | 56.00 |
| அவன் ஒரு தென்றல் | 42.00 |
| இரண்டாவது மலர் | 130.00 |
| இரண்டு பெண்கள் | 27.00 |
| இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 85.00 |
| இன்றும் நாளையும் | 65.00 |
| உயர்வு | 50.00 |
| ஊன்றுகோல் | 60.00 |
| என் வீடு | 40.00 |
| ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 125.00 |
| ஒரு சிவப்பு பச்சையாகிறது | 90.00 |
| கடைசி வரை | 25.00 |
| கங்கையும் வந்தாள் | 80.00 |
| கதவு திறந்தால் | 95.00 |
| கதாசிரியையின் கதை (முதல் பாகம்) | 60.00 |
| கதாசிரியையின் கதை (இரண்டாம் பாகம்) | 70.00 |
| காஷ்மீர் கத்தி | 30.00 |
| காளியின் கண்கள் | 53.00 |
| கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 24.00 |
| கைமாறியபோது | 80.00 |
| திரும்பிப் பார்த்தால் | 30.00 |
| தை பிறக்கட்டும் | 21.00 |
| நதி மூலம் | 45.00 |
| நல்லதோர் வீணை | 75.00 |
| நாயக்கர் மக்கள் | 120.00 |
| நிற்க நேரமில்லை | 75.00 |


# நிற்க நேரமில்லை!

சிவன்கோயில் முன் வாயிலில், நாதசுர ஒலி உரக்கக் கேட்டது. கூடவே கெட்டிமேளம் கடகடவென்று இடியோசைபோல் முழங்கியது.

கூடத்துத் தூண் மீது சாய்ந்தபடி, நின்றிருந்த ஷண்பகா, தன் காதுகளைக் கரங்களால் இருக மூடிக் கொண்டாள். அவள் நெஞ்சத்தில் எழுப்பி இருந்த இன்பக் கனவுக் கோட்டையை, பொடிப் பொடியாகச் சிதறடித்துவிடும் அந்தக் கெட்டிமேள ஓசையைக் கேட்க விடாதபடி தடை செய்ய முயன்று கொண்டிருந்தாள். ஆனால், அவள் மனம் ஏற்கெனவே ஏமாற்றத்தால் சுக்கு நூறாகிப் போய் விட்டிருந்ததே!

கண்களில் கசியும் நீரை வெளியே வழிய விடாமல் உதடுகளைக் கடித்து உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டாள். இத்தனை நேரம் அந்தக் கோடி வீட்டுக் குப்புசாமி மகள் சுமதிக்கும் அந்த ஆஸ்திரேலியா மாப்பிள்ளைக்கும் திருமணம் முடிந்துவிட்டிருக்கும். தாலி கட்டிய மறுநாளே அவன் வெளிநாடு பறந்து செல்வான். சுமதியும் ஓரிரு மாதங்களில் பறந்து சென்று...

ஷண்பகா இலேசாகப் பெருமூச்செறிந்தாள். மனம் உள்ளூரப் பொறுமியது - குமுறியது. பொறாமையால் அல்ல..., நம்பிக்கையுடன் அவள் நாள்தோறும் எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஓர் ஆசை, கனவு கண்டு

கொண்டிருந்த ஒரு வாய்ப்பு, கடந்த ஒரு வருட காலமாக அதையே எண்ணி எண்ணி, அல்லும் பகலும் கற்பனையில் திளைத்துக் கொண்டிருந்த நினைவு, வெறும் பகற்கனவாய் முடிந்துவிட்டது. கிடைத்த சந்தர்ப்பமும் கை நழுவிப் போய்விட்டது!

''இப்படியே தூணைப் பிடிச்சுக்கிட்டு நின்னுட்டிருந்தா எல்லாம் சரியாயிடும்கிற நினைப்பா? போ! போ! எல்லாத்துக்கும் குடுப்பினை வேணும்'' - சின்னம்மா புவனேச்வரி அடிக்குரலில் உறுமினாள். அவளது கனமான உடலும் கூடவே ஆடியது.

கூடத்து ஈஸிசேரில் சாய்ந்தபடி படுத்துக் கிடந்த அவளது தம்பி சுந்தரம், ''எதுக்கு அக்கா பாவம், அந்தப் பொண்ணைத் திட்டறே? நடந்தது நடந்து போச்சு, அவளுக்குன்னு ஒருத்தன் பிறந்திருப்பான். கவலைப் படாதே'' என்றார் இரக்கத்துடன்.

''நீ சொல்லிட்டே, நான் கவலைப்படாம வேற யார் படுவாங்க, அம்மா இல்லாத பெண்ணாச்சே. சித்திக்காரி கொடுமை செய்தான்னு வரக்கூடாதுன்னு பார்த்தேன். ஹூம் இவ அதிஷ்டம்தான் தெரிஞ்சு கிடக்குதே''...

அவளுக்கு மூச்சு வாங்கியது.

புலம்பியபடி சமையலறைக்குள் நுழைந்து கொண்டாள் சின்னம்மா. அடி வயிற்றிலிருந்து அலை அலையாக எழும் கசப்பை விழுங்க முயன்றவளாய், வேகமாகக் கொல்லைப் பக்கம் ஓடிச்சென்றாள் ஷண்பகா.

அவளுக்கு மெத்தப் பிடித்த அந்த மகிழ மரத்தடியில் தோய்ப்பதற்காகப் போட்டிருக்கும் துணி துவைக்கும்



கல்மீது அமர்ந்தவள் அதற்கு மேல் அடக்க மாட்டா வளாய் விம்மி அழ ஆரம்பித்தாள்.

'கடவுளே! உன் சந்நிதியில் தினமும் வந்து இறைஞ்சி நின்றேனே? எனக்கு இப்படி ஓர் அவ மானத்தைப் பரிசாகக் கொடுத்துவிட்டாயே. ஊரில் இன் எப்படி மற்றவர் முன்னிலையில் தலை காட்ட முடியும் இனி எப்படி நடமாட முடியும்? எப்படி மீண்டும் கோவில், குளம் என்று தலை காட்ட முடியும்?

''ஷண்பகா ரொம்ப அதிஷ்டக்காரி. அவள் அழகுக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து மாப்பிள்ளை பறந்து வரப் போறானாம்' என்று ஊரார் அதிசயித்த காலம் மாற இப்போது...

ஷண்பகா கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் அண்ணாந்து பார்த்தவளின் கண்களில் அந்த மகிழ மரத்து மணமிகுந்த பூக்கள் தென்பட்டன.

''பெண் என்பவள் மகிழம்பூ மாதிரிம்மா. அது வாடிப் போனாக்கூட எத்தனை மணம் வீசுது பாரு. அது போல எத்தனை கஷ்டம் வந்தாலும் குணம் மாறாமல் இருக்கணும் உங்கம்மா மாதிரி'' என்பார் அப்பா பரமசிவம்.

அவர் அந்தக் கிராமத்துப் பள்ளி ஆசிரியர் பதவி வகிப்பவர். உயர்ந்த கற்பனைகள், இலட்சியங்கள் யாவும் நிரம்பியவர். அவரை அந்தக் காலத்திலேயே அம்மா விரும்பி மணந்து கொண்டதாக அவரே பலமுறை கூறக் கேட்டிருக்கிறாள் ஷண்பகா.

அப்பா, பக்கபலம் ஏதுமில்லாத பள்ளி ஆசிரியர் தானே என்று அசட்டை செய்ததே இல்லையாம். அவள்

பிறந்த வீட்டுச் சீதனமாக, இப்போது வாழும் ஓட்டு வீடும், நகைகளுமாகத்தான் வந்தாளாம். ஆனால், தான் செல்வாக்கும் வசதியும் படைத்த குடும்பத்திலிருந்து வந்தவள் என்று ஒருமுறை கூடக் காட்டிக் கொண்டதே இல்லையாம்.

அவளது பெற்றோர் மனமொத்த தம்பதிகளாக வாழ்ந்ததன் அடையாளமாகத்தான் அவள் பிறந்தாள். ஷண்பகா பிறந்த நேரம். அவள் அம்மா பிரசவ ஜன்னியில் போய்ச் சேர்ந்து விட்டாள்.

பரமசிவம் சாதாரண மனிதர்தான். குழந்தையை வைத்துக் கொண்டு, அவரால் சிரமப்பட முடியவில்லை என்ற அடிப்படைக் காரணம் காட்டி, எளிய குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று புவனேச்வரியைக் கைப்பிடித்தார்.

''எளிமையான குடும்பம். பற்றாக் குறையில் வாழ்ந்தவள். அதனால் ஷண்பகாவையும், அவரையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டு விடுவாள் என்ற நம்பிக்கையில் கொஞ்சம் கொஞ்சமாக மண் விழுந்தது.

புவனேச்வரியின் கண்ணும் கருத்தும் அந்த ஓட்டு வீட்டின் மேலும், காலஞ்சென்ற மூத்தாளின் நகைகளின் மீதுமே இருந்தன.

''கஞ்சிக்கு வழியில்லாம கஷ்டப்பட்ட குடும்பம் தான், ஒப்புக் கொள்கிறேன். அதனால்தானே இவருக்கு இரண்டாந் தாரமாகக் கட்டிக் குடுத்தாங்க. அதுக்காக, இருக்கிற நகைநட்டெல்லாம் மூத்தவ பொண்ணுக்குன்னு வச்சால்... என் கதி'' கூச்சலிட்டு தன் பங்காக, அவள் அம்மாவின் இரண்டு வடம் சங்கிலி, இரண்டு ஜதை வளையல் என்று சுரண்டிக் கொண்டு விட்டிருந்தாள்.



ஷண்பகா அதைப் பற்றியெல்லாம் கவலைப் பட்டதே இல்லை. சின்னம்மாவிற்குப் பிறந்த இரண்டு ஆண் குழந்தைகளையும் அவள் ''சித்தியின் குழந்தைகள் தானே'' என்று அலட்சியம் காட்டியதில்லை. சதா கடுமையாக வேலைகள் செய்யும்படி சித்தி ஏவுகிறாளே என்று கோபித்துக் கொண்டதேயில்லை. அப்பா இப்படி அவளின் கைப் பொம்மையாக மாறிவிட்டிருக்கிறாரே என்று அவள் கவலைப்பட்டதே இல்லை. அவளது கவலையெல்லாம் ஒன்றே ஒன்றுதான்... அவளுக்கு இயற்கையில் ஏற்பட்டிருக்கும் அந்தப் பலவீனத்தைப் பற்றியது. அதை ஊனம் என்று உறுதியாகக் கூற முடியாது: பிறவிக் கோளாறு என்று ஒதுக்கவும் முடியாது.

ஷண்பகா படிப்பில் கெட்டிக்காரிதான். உள்ளூர்ப் பள்ளியில், முதலாவதாகத் தேறியபோது, அவள் மேற்படிப்பிற்கு முதல் முட்டுக் கட்டை அவளது குறை, இரண்டாவது முட்டுக்கட்டை சின்னம்மா.

ஷண்பகா, ஒடிய ஒடிய பொன்னிற மேனியும், காந்தம் போன்ற கண்களும் கொண்டவள்தான். அந்த சிறிய உதடுகள், கூர்மையான மூக்கு, கவர்ச்சியான தேகவாகு எல்லாம் இருந்தும் பேசும்போது இடை யிடையே திக்கும் அந்தக் குறை, அவளைப் பிறருடன் அதிகம் பேசவிடாமல், பழக விடாமல் செய்து விட்டிருந்தது.

சின்னஞ் சிறுமியாக இருந்த காலத்தில், இந்தக் குறை அவளுக்கு எத்தகைய அவமான உணர்வையும் ஏற்படுத்தவில்லை.

கோடி வீட்டுக் குப்புசாமி மகள் சுமதி அவளது பள்ளித் தோழி அவ்வப்பொழுது நேரும் மனஸ்தாபங்

களின் முடிவில், ''வெவ்வே! திக்குவாச்சி'' என்று பல முறை அவளைப் பரிகசித்திருக்கிறாள். அப்போதெல்லாம் அந்த ஊனம் ஒரு பெரும் குறை என்றே அவள் கருதியதில்லை.

காலம் செல்லச் செல்ல, அவள் வளர்ந்து வந்தாள். மன உணர்வுகளும் புதுமையும், மென்மையுமாக வளர்ச்சி பெற்ற சமயத்தில் அவளுக்குள்ளேயே அடிக்கடி ஒரு தாழ்வுணர்ச்சி உறுத்த ஆரம்பித்துவிட்டது.

நாலுபேர் சேர்ந்து இருந்தால், ஷண்பகா பேச மறுத்துவிடுவாள். உணர்ச்சி வசப்படும் பொழுது அவளுக்கு அதிகமான நாத்தடுமாற்றம் ஏற்பட்டுவிடும். முக்கியமாக, உயிரெழுத்துக்கள் கலந்த வார்த்தைகளைப் பேசும்போது வாய் கோணிக் கொண்டு பார்ப்பவர்களுக்கு அருவருப்பாக இருக்கும். அழகிய சிற்பத்தில் ஒரு சிறு மூளி போல, இந்த ஊனம் அவளை வாழ்க்கையில் முள்ளாய் நெருடிக் கொண்டிருந்தது.

சின்னம்மா வேறு அதை அடிக்கடி குத்திக் காட்டிக் கொண்டிருந்தாள். என்னவோ ரெண்டெழுத்துப் படிக்கணும்னு படிக்க வச்சாச்சு. இதுக்கு மேல் எதுக்குப் படிப்பு? எவன் கழுத்திலியாச்சும் கட்டிவிட்டா பாரம் தீர்ந்தது. ''இந்தத் திக்கு வாயை ஒருத்தன் கட்டிக்கிட ஒப்புக் கொள்ளணுமே!''

அப்பா வாயே திறக்க மாட்டார். வாழ்க்கையிலே மேலும் மேலும் தவறு செய்து கொண்டே போய் விட்டவர் அவர். முதலில் அவளைப் போல ஒரு குறையுள்ள மகள். இரண்டாவது சின்னம்மா. மூன்றாவது, மேலும் இரண்டு குழந்தைகள். ஒரு கிராமத்துப் பள்ளி



ஆசிரியர் எதையெல்லாம் சுமக்க முடியும்? கற்பனைகளையும் இலட்சியங்களையும் தவிர!

ஷண்பகாவிடம் அவர் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அதற்காகவே புவனேச்வரியிடம் கூட ஒரு முறை வாதாடி இருக்கிறார்.

''புவனா! எப்படியாச்சும் ஷண்பகாவைக் காலேஜில் சேத்துடணும். அவ வாங்கி இருக்கிற மார்க்குக்கு உபகார சம்பளம் குடுப்பாங்க. ஹாஸ்டல் செலவு மட்டும்தானே, சமாளிக்கலாம்.''

''சமாளிப்பீங்க! வயசுக்கு வந்த பொண்ணைப் பக்கத்து டவுனுக்கு அனுப்பறதாம். ஹாஸ்டலாம் - மண்ணாங்கட்டியாம் நல்லா அலையறீங்க, அப்பாவும் பொண்ணும்! ஏதாச்சும் கட்டிக் குடுக்க வழி இருக்கான்னு பாருங்க. இவ திக்கித் திணறிப் படிச்சு முடிக்கறதுக்குள்ளாற வந்தவனெல்லாம் ஓடிப் போயிடுவானுங்க, தெரிஞ்சுக்குங்க'' பிடிவாதத்துடன் சீறினாள்.

ஷண்பகா, வீட்டிற்குள்ளேயே முடங்கிப் போனாள். 'நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ' என்ற பாரதியின் வாக்குப்படி, மகளின் அறிவை மக்கிப் போக விடவில்லை பரமசிவம். பள்ளியில் மாணவர்களுக்கு போதித்த நேரம் போக வீட்டிலும் மகளுக்கு உலக அறிவைக் கரைத்துப் புகட்டி விடுவார்.

ஷண்பகாவிற்கு நன்றாக நினைவிருக்கிறது அந்தச் சம்பவம். ஒரு முறை. காலை நேரத்தில் வாயிற்புறம் கோலம் போட்டுக் கொண்டிருந்தவள், சட்டென நிமிர்ந்தாள்.

பரமசிவத்தின் மனம் பாகாய்க் கரைந்தது. மகளின் தலையை ஆதரவுடன் வருடியபடி, ''மன்னிச்சுக்கோம்மா அப்படி மூணா மனுஷனுக்கு நேரா, உன்னைப் பெத்த நானே சொல்லியிருக்கக் கூடாது. என்னை மன்னிச்சிடு குழந்தே'' என்றார் தடைப்பட்ட குரலில்.

ஷண்பகா, சிறு குழந்தைபோல் தேம்பி அழுதபடி அவர் கைகளைப் பற்றிக்கொண்டாள். ''அ... அதுக்கில்லை அ... அப்பா...''

''ம்? போதும், போதும். சமாதானமாயிடுச்சில்லே. இனி சாப்பிடற வழியைப் பாருங்க'' அதட்டலாகக் கூறிவிட்டு, புவனேச்வரி பரிமாற ஆரம்பித்தாள்.

## 2

அன்று முதல் பரமசிவம் மகளது உச்சரிப்பில் மிகக் கவனம் செலுத்தலானார். உயிரெழுத்துக்களை அதிகமாக உபயோகிக்காமல் பேசுவதற்குக் கற்றுக் கொடுத்து வந்தார்.

''இது மாதிரி குறைகளை எல்லாம் வெளி நாட்டில் சீர் செய்திடுவாங்களாம். அதுக்குன்னே ஒரு தனி இடம் இருக்குதாம் 'ஸ்பீச் தெரபி சென்டர்னு பேரும்மா. நம்ம நாட்டிலும் இருக்காம். விசாரிச்சுப் பார்க்கணும். பட்டணத்தில் இருக்குன்னு கேள்விப்பட்டேன்...'' என்றார்.

திக்கு வாயைப் போக்குவது எப்படி?

வார்த்தைகளைத் திக்காமல் பேசுவது எப்படி? உலகத் திக்குவாயர்களில், வெற்றி பெற்ற பேச்சாளர்களின் உண்மைக் கதை, வாழ்க்கை வரலாறு... கூழாங் கற்களை வாயில் போட்டுக்கொண்டு, பேசிப் பயின்று வெற்றி கண்ட ஒரு திக்குவாய் வீரரின் கதை, இத்யாதிகளை மகளுக்குக் கரைத்துப் புகட்டி விட முனைந்தார்.



புவனேச்வரிக்கு அவரது முயற்சிகள் யாவும் கேலிக் கூத்தாகவே பட்டன. இரவும், பகலும் இதே வேலையாய் அவர் இருப்பதைப் பார்த்து அவளுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. ஊரிலிருந்து சென்ற வருடம் அவளது தம்பி சுந்தரம் வந்தபோது அது பன்மடங்காகி விட்டது.

சுந்தரம், சென்னையில் வியாபாரத் தரகராக வாழ்ந்து வந்தார். வீடு வாங்க, விற்க மட்டுமல்லாமல் கல்யாணச்சந்தையிலும், மாப்பிள்ளை வாங்க, விற்க வல்லவராக விளங்கினார் என்பது அவரது அட்டகாசமான சிரிப்பிலும், பேச்சிலும் தெரிய வந்தது. கிராமத்தில் சிறிது காலம் அக்காவிடம் சீராடிப் போக வந்தவர், ஷண்பகாவைப் பார்த்ததும் அசந்து போய்விட்டார்.

''ஷண்பகாவா இது! ரொம்ப அழகான குட்டியா வளர்ந்துட்டுதே.'

''அழகு மட்டும் இருந்திட்டா போதுமா? அதிஷ்டம் வேணாம், கட்டிக்க வர்ரவனெல்லாம் இவ பேச்சைப் பாத்தா ஓடிட மாட்டானா?'' நொடித்தாள் தமக்கை.

''ஏன் தம்பி! நீதான் கல்யாணத் தரகன்னு பெருமையடிச்சுக்குறே. இவளை எப்படியாச்சும் ஒருத்தன் தலையில் தள்ளிவிடப் பாரேன்.'' அக்காவின் பொறுமலைக் கேட்ட சுந்தரம், தமக்குள் யோசனையில் ஆழ்ந்தார்.

''அக்காவாச்சே, கமிஷன் கெடைக்காதுன்னு பயமா?'' புவனேச்வரி கிண்டலாகக் கேட்டதும் ''சேச்சே! அப்பிடி இல்லே. ஒரு நல்ல எடம் இருக்கு. சரிப்படுமான்னு பார்க்கறேன்...'' தயங்கினார், ''சொல்லு சொல்லு.'' தமக்கை பிடுங்கி எடுக்காத குறையாக, சுந்தரத்தை துளைத்தெடுத்து விட்டாள்.

பையனுக்கு தகப்பனார் இல்லை. தாய் மட்டும் தான். ஒரே மகன். ஆஸ்திரேலியாவில் மேல் படிப்பு படித்து அங்கேயே விவசாயப் பண்ணை ஆராய்ச்சிப் பட்டம் வாங்கியவன். அங்கேயே பல வருடங்களாக வேலையில் இருப்பவன்.

''பையன் தங்கமானவன். ஒவ்வொரு முறையும், இந்தியா வரச்சே அவங்கம்மா என்கிட்ட, ஏதாச்சும் நல்ல பொண்ணா இருந்தா சொல்லுங்கன்னு கேட்பாங்க. நானும் எத்தினியோ எடம் பார்த்துக் குடுத்தேன், ஆனா வேளை வரல்லே.''

''அப்ப, பையன் எப்ப வரானாம்? நம்ம ஷண்பகாவைப் பாத்தா பிடிக்கும்?'' அக்கறையுடன் மேலும் தூண்டிக் கேட்டாள் சின்னம்மா.

மாலை பள்ளியிலிருந்து திரும்பிய அப்பாவிடம் ஆஸ்திரேலியா பையனைப் பற்றிய புள்ளி விவரங்களைக் கண் காது மூக்குகளுடன் விவரித்து விட்டிருந்தாள் சின்னம்மா.

''அங்கேயெல்லாம் கார், வீடுன்னு வசதியாக இருக்கலாமாம். அப்படிக் கஷ்டப்பட வேணாமாம். நம்ம ஷண்பகாவைப் பாத்தா, அப்படியே மயங்கிப் போயிடுவான் பையன்னு தம்பி சொல்லுது.''



சின்னம்மாள் சொல்லாமல் விட்டுவிட்ட சில விஷயங்களை, ஷண்பகாவின் மனம் அசை போட்டது. ஷண்பகா ஆஸ்திரேலியாவிற்குப் போனால், அவளது தம்பிகளைப் படிப்பதற்காக அழைத்துக் கொள்ளலாம். ஷண்பகாவிற்குப் பேறு காலம் வந்தால் உதவிக்கு என்று சின்னம்மாவைக் கூப்பிடலாம். அந்தச் சாக்கில் சின்னம்மா ஏரோப்ளேனில் பறந்து 'நானும் ஆஸ்திரேலியா போனேன்' என்று பெருமையடித்துக் கொள்ளலாம். இதற்கு மிக முக்கியமாக ஷண்பகாவின் குறை குறுக்கே நிற்குமே!

அதற்கும் ஒரு வழி கூறிவிட்டிருந்தார் சுந்தரம். கூடுமானவரை ஷண்பகா பேசாமல் சமாளிக்கட்டும்; மற்றதெல்லாம் அவர் பார்த்துக் கொள்வார்!

பரமசிவம், பையனின் வயதைப் பற்றிக் கேட்டார். ''கொஞ்சம் வயசு அதிகம். ஷண்பகாவுக்கு இருபது முடியப்போவுது அவனுக்கு முப்பத்தொன்பது வயது! ம்...!!' இழுத்தார் ஆரம்பத்தில்.

''அதனால் என்ன? ஆம்பிளை வயது ஒரு வயசா? இப்ப உங்களை நான் கட்டிக்கலையா? மேலும் இது மூத்த சம்சாரம்தானே' மனைவி போட்ட போட்டில் அடங்கிப் போனார் அவர்.

''ஒரு கோவில்ல வச்சுத் தாலி கட்டிட்டாக் கூடப் போதுமாம். சிக்கனமா திருமணம், உடனடியா மனைவியை அழைச்சுட்டுப் போயிட ஏற்பாடு, அவ்வளவு தான்'' சுந்தரம் மாமா அடித்த வேப்பிலையில் அவள் மனமும் ஆடத் தொடங்கியது.

ஆரம்பத்தில் ஷண்பகாவிற்கு, இந்தக் கல்யாண விவகாரம் பிடித்தமில்லைதான். ''அடிக்கடி ஏரோப்ளே

னில் பறக்கலாம். ராணி மாதிரி இருக்கலாம். அங்கே போய் உன் குறையை நிவர்த்தி செய்து கொள்ளலாம்'' என்று சுந்தரம் முடித்ததும் அந்த வலையில் விழுந்தாள்.

''ஊருக்கு போய், பையன் போட்டோவை அனுப்பி வைக்கிறேன். நம்ம ஷண்பகா போட்டோ ஒண்ணு எடுத்து அனுப்புங்க'' சொல்லிவிட்டு விடைபெற்றார் சுந்தரம்.

## 3

''ஏய் திக்குவாய்ப் பொண்ணு, அந்த மரத் தடியிலே என்ன செஞ்சிட்டிருக்கே. இங்கே அடுப்படியில் என் உசிரே போவுது'' உரக்கக் கூப்பாடு போட்ட சின்னம்மாவின் குரல் அவளைத் தூக்கி வாரிப் போட வைத்தது.

''இ... இ... இதோ வந்திட்டேன்'' ஒரே ஓட்டமாக, சமையலறைப் பக்கம் வந்தாள்.

''ஒரு பொட்டுத் தண்ணி கிடையாது, நம்ப கொல்லைப் பக்கமாப் போயி கோட்டை மேட்டு தெருக் கெணத்திலே தண்ணி எடுத்து வா...ம்!'' விரட்டினாள்.

''நா நா நானா?''

''எல்லோரும் கல்யாணச் சோறு கொட்டிக்கப் போயிருப்பாங்க. நீ கொல்லைப் பக்கமா போ. எவனும் பார்க்க மாட்டான்'' புகையும் அடுப்பின் எரிச்சலுடன் கத்தினாள் சின்னம்மா.



அவசரமாகக் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தாள். குற்ற உணர்வுடன், மீண்டும் கொல்லைப் புறம் வந்தாள்.

''இன்றைக்கு ஒரு நாளாவது இந்தச் சித்தியே போய்க் குடிநீர் எடுத்து வரக் கூடாதா?'' பெருமூச்சு விட்டபடி, கொல்லைக் கதவைத் திறந்தவள், மெல்லச் சுற்று முற்றும் பார்த்தபடி பதுங்கி நடந்தாள்.

நல்லவேளை! கிணற்றடியில் யாரையும் காணோம். எல்லோரும் கல்யாணத்தில் இருப்பார்கள். வேகமாக ராட்டினத்தில் சுற்றியிருந்த கயிற்றைக் குடத்தில் சுருக்கிட்டு, நீரை முகர்ந்தவள் அவசரமாகத் திரும்பி நடந்தாள்.

''ஷண்பகா!'' பின்னாலிருந்து ஒரு குரல், அவளுக்குப் பழக்கப்பட்ட குரல் - கதிரேசன்தான் நின்று கொண்டிருந்தான்.

''ரொம்ப வருத்தமா இருக்குது ஷண்பகா. உன்னை நேரே பார்த்துப் பேசணும்னு துடிச்சிக்கிட்டிருக்கேன்.''

வெடுக்கென்று தலையை நிமிர்த்தினாள் அவள், ''எ... எ... எனக்குத் தெரியும். இ... இ...ப்ப சந்தோஷமாச்சில்லே... போங்க...'' அதற்குமேல் பேச முடியாமல் உதடுகள் கோணிக் கொண்டன.

திக்பிரமையுடன் நின்று விட்டான் கதிரேசன்.

பொடி நடையாக, தண்ணீர்க் குடத்துடன் கொல்லைக் கதவு வழியே உள்ளே நுழைந்தாள் ஷண்பகா. அவளுக்கு மூச்சு வாங்கியது. நெஞ்சும் மார்பும் படபடக்க, கதவைப் படக்கென்று காலால் மூடினாள். ஆனால், மனக் கதவு பட்டெனத் திறந்து கொண்டது.

சிவன் கோவிலுக்கு அவள் வாரம் தவறாமல் போவது உண்டு. பக்தி சிரத்தையுடன், தனக்கு ஒரு வளமான வருங்காலத்தை வேண்டி அவள் அங்கே போய்விடுவாள்.

ஒரு வெள்ளிக்கிழமை என்று நினைவு. அவர்கள் வீட்டிற்கும், சிவன் கோவிலுக்கும் குறுக்கு வழியாக வயல் வரப்பின் மீது விரைந்து கொண்டிருந்தவள். காலடியோசை கேட்டுச் சட்டெனத் திரும்பினாள்.

புன்னகையுடன் கதிரேசன் நின்று கொண்டிருந்தான், இடையில் மடித்துக்கட்டிய வேஷ்டி, மேலே அரைக்கை பனியன்.

''கோவிலுக்கா?''

''ம்!'' முகத்தைத் திருப்பியபடி மேலே நடந்தாள்.

''தனியே போறியே ஷண்பகா! உனக்குப் பயமா இல்லியா?'' கனிவோடு கேட்டபடி பின்னால் வந்தான் அவன்.

''எ... எ... எனக்குப் பயமே இ... இல்லையே'' ஷண்பகா சுடச் சுடப் பதிலளித்து விட்டு வேகமாக நடந்து விட்டாள்.

அன்று மட்டுமல்ல. பலமுறை அவளிடம் பேச முயன்ற போது, கன்னத்தில் அறைவது போல் அவள் பதில் கூறிவிட்டிருக்கிறாள்.

அதுவும் சுந்தரம் மாமாவிடமிருந்து அந்த ஆஸ்திரேலிய மாப்பிள்ளையின் போட்டோவும் விளக்கங்களும் வந்த பின்பு அவள் அடியோடு மாறித்தான் போனாள்.



கலர் போட்டோக்கள், பெரிய காருடன் பெரிய வீட்டின் முன் பக்கம். அழகான புல்வெளியில், படுத்த படி, அலங்காரமான வரவேற்பறைப் பின்னணியில் ''குக்கிங் ரேன்ஜ்'' வைத்திருக்கும் சமையலறை எனப் பல்வேறு கோணங்களில், விதம் விதமான உடைகளில்... ஏயப்பா குபேரபுரி என்றால் இதுவாகத் தானிருக்குமோ!

பூர்வாங்கமாக, ஷண்பகாவின் போட்டோவை அனுப்பியாயிற்று. பையன் நாகரத்னம், ஒப்புதல் தெரிவித்துத் தாய்க்குக் கடிதம் எழுதி விட்டிருந்தான்.

சுந்தரம் மாமா பரபரப்பாக மீண்டும் ஊருக்கு வந்தவர் ''எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சிடுங்க; முகூர்த்தத் தேதி வச்சிட்டா, பையன் லீவுல வருவான். தாலி கட்ட வேண்டியது, அவ்வளவு தான் வேற எதுக்கும் அவனுக்கும் நேரமில்லை'' என்று அவசரப்படுத்தினார்.

பெண்ணை நேரில் பார்க்க வேணாமா?'' பரமசிவம் சற்றுத் தயங்கத்தான் செய்தார். வெளி நாட்டிலே வாழ்பவன் பெண்ணை நேரே பார்த்து பேச வேணுமென்று விருப்பப்பட மாட்டானா? அப்போது ஷண்பகாவின் குறை தெரிந்து விட்டால்...

''அவங்கம்மா கிட்ட எல்லா விவரமும் சொல்லிட்டேன். எப்படியாச்சும் சரிக் கட்டிப்பாங்க பையனை. இந்தவாட்டி கல்யாணம் செய்துக்காது மகனைத் திரும்ப வெளியூர் அனுப்பறதாக இல்லையாம் கவலைப்படாதீங்க. தாலி கட்டிட்டா சரியாகிவிடும்.''

''தமிழில பேசினாத்தானே தெரியப் போவுது'' சின்னம்மா தீர்மானமாகக் கூறிவிட்டாள்.

பையன் ஆஸ்திரேலியாவிலிருந்து இதே வருகிறான் அதோ வருகிறான் என நாட்கள் மாதங்களாய்

நகர்ந்தன. அடிக்கடி சுந்தரம் மாமா வேறு நம்பிக்கை தெரிவித்துக் கடிதம் போடுவார்.

மீண்டும் ஒருநாள், எதிர்பாராத விதமாக வயல் வரப்பினருகில், கதிரேசனை நேருக்கு நேராகச் சந்தித்து விட்டாள் ஷண்பகா. அவனைப் பாராதவள் போல் மேலே நடக்க முயன்றாள்.

''கல்யாணம் வருது போல இருக்கு?''

அவள் சட்டெனத் திரும்பி நின்றவள், ''ஆ... ஆமாம்; ஆ... ஆஸ்திரேலியாவிலிருந்து வராரு'' என்றாள் கர்வம் தொனிக்கும் குரலில்.

''அங்கே போயும், நான் இங்கே செய்யற வேலை தான் செய்யறானாம்.'' உரக்கச் சிரித்தான் அவன்.

அவளுக்கு ஒரே எரிச்சல். எரித்து விடுவது போல அவனையே பார்த்தாள்.

''ஷண்பகா! நிசம்மா சொல்லு நீ ஆசைப்பட்டுத் தான் இந்த கல்யாணத்துக்குச் சம்மதிச்சியா?'' அவன் குரலில் வேதனை தோய்ந்திருந்தது.

''ஆ... ஆ... ஆமாம்,''

''ஒண்ணே ஒண்ணு சொல்லிட விரும்பறேன். நானும் அவனைப் போலப் படிப்புப் படிச்சவன்தான். ஆனால் என்னோட படிப்பு என் சொந்த மண்ணிலேதான் பலன் தரணும்னு இங்கே வந்திட்டேன். ஆனா, அவன் பணம் பெரிதுன்னு அயல் நாட்டிலே உழைக்கிறான். போகட்டும் உன்னை நான்... கட்டிக்கிடணும்னு ஆசைப்பட்டேன். ஸார் கிட்ட நேரே வந்து கேட்கணும்னு இருந்தேன். ஆனால் ஏனோ என்னோட நல்ல நினைப்பை நீ தவறாகவே புரிஞ்சுக்கிட்டே. இப்ப என் ஆசையில்



தோத்தும் போயிட்டேன். பரவாயில்லே. உனக்கு என்னோட வாழ்த்துக்கள். இனிமே தொந்தரவு செய்ய மாட்டேன்'' கூறியவன் குரல் கரகரத்தது. மறுவிநாடி அவன் வரப்பின் எதிர்த் திசையில் இறங்கி நடந்து விட்டான்.

இதுகாறும் ஏற்படாத ஒரு சிறு வேதனையும், அதே சமயம் ஒரு வகையான சினமும் ஒருமிக்க எழுந்து அவளது நெஞ்சை அழுத்தியது. அவள் ஆஸ்திரேலி யாவிலே வசதியாக வாழப் போகிறவள். அதை விட்டு, இவனுடன் இந்த மண்ணில் - ஏறும் கலப்பையுமாக... வெறுப்புடன் வேகமாக நடந்தாள் ஷண்பகா.

மாதங்கள் நகர்ந்தன. நாகரத்னத்திற்கு லீவு கிடைக்கவில்லை. என்று ஒரு கடிதம் மாமாவிடமிருந்து வரும். சின்னம்மா கோபத்தில் சொற்களை அள்ளி வீசுவாள். பிறகு திடீரென ஒரு நாள் நாகரத்னம் வரப் போவதாகக் கடிதம் வரும். மழையும், வெயிலும் போல மாறி மாறி கடிதங்கள் வந்தன.

பரமசிவம் இந்த விளையாட்டில் அலுத்துப் போய், நம்பிக்கை இழந்துவிட்டிருந்தார். ஆனால் ஊர் முழுவதும், லேசு பாசாகச் செய்தி பரவி கிசுகிசுக்க ஆரம்பித்தனர் அக்கம் பக்கத்தவர்.

''திக்கு வாச்சிக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தியா?'' கோடி வீட்டுக் குப்புசாமி மனைவி பெறாமைப் பட்டாள்.

திடும்மென்று ஒருநாள் சுந்தரம் மாமா வந்து குதித்தார். வந்தவர் வெறும் கையோடு வரவில்லை. சுவையான செய்தியோடு வந்தார்.

''நாகரத்தினம் இந்தியாவிற்கு வந்து விட்டான். தாயும் மகனும் இரண்டு நாளில் இங்கே வருகிறார்கள்.

கொட்டடா மேளம், கட்டடா தாலிதான் எல்லாம் தயார் செஞ்சுடுங்கன்னு என்னை முன்னாடி அனுப்பிட்டாங்க. நம்ம ஊர் சிவன் கோவில்லேயே வச்சுக் கல்யாணத்தை முடிச்சிப்புடுவோம். ஏன்னா பையனுக்கு உடனே திரும்பணுமாம், நேரமே இல்லையாம்.''

மிகத் துரித கதியில் பரமசிவம் செயல்பட்டார். அடுத்த முகூர்த்தத் தேதியில் கோவிலில், திருமணம் நடத்த என்று பணத்தைக் கட்டிவிட்டு வந்தார்.

''அக்கம் பக்கம் தெரிஞ்சவங்களைக் கூப்பிட்டு விருந்து வைக்க வேணாமா? செஞ்சுபிடுங்க'' சின்னம்மா அதிகாரம் செய்தாள்.

கோவில் மண்டபத்தில் திருமணம் பரமசிவத்தின் வீட்டில் களை கட்டியது. அவருக்கு உற்றார் உறவினர் என்று இல்லாவிட்டால் என்ன? ஊரார் இல்லையா?

திருமணத்திற்கு இரண்டு நாள் முன்னதாகவே ஊர்ப் பெரியதனக்காரர் வீட்டில் மாப்பிள்ளையும், அவன் தாயும் வந்து தங்க ஏற்பாடு செய்தாகி விட்டது.

''இத்தனை முன்னேற்பாடும் செய்து விட்டு, மாப்பிள்ளையைக் கண்ணாடியில் கூடப் பார்க்காமல்...'' காரணமில்லாத ஒரு பயம் மனத்தை வாட்ட, பரமசிவம் கடவுள் தலையில் பாரத்தைப் போட்டுவிட்டு, அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்.

நாகரத்தினம் வந்து இறங்கிவிட்டிருந்தான். பளபள வென்ற புத்தம் புதிய அம்பாஸிடர் காரில் அவன் வீட்டு வாயிலில் வந்திறங்கியபோது, கிராமத்தின் பல தலைகள் ஆவலுடன் எட்டிப் பார்த்தன.

வாயெல்லாம் பல்லாக சுந்தரமும், புவனேச்வரியும் காருக்கருகில் ஓடிச் சென்று வரவேற்றார்கள்.



அவசரத்திற்குச் சம்பந்திகளை உபசரிக்க என்று தயாராக வரவழைத்திருந்த நாற்காலிகளைக் கூடத்தில் போட்டு விட்டு, வாயிற்புறம் விரைந்தார் பரமசிவம்.

சின்னம்மா தயார் செய்திருந்த ரவா கேசரியையும், பஜ்ஜியையும், தட்டுக்களில் வைத்தபடி இருந்த ஷண்பகாவின் மேனி பயத்தால் நடுங்கியது. மெல்லக் கூடத்துப் பக்கம் எட்டிப் பார்த்தாள்.

உள்ளே நுழைந்த அந்த வயதான அம்மாள்தான் அவளது வருங்கால மாமியாரா? பார்த்தால் பதவிசாக இருந்தார்கள். பின்னால் வருவதுதான்... ஷண்பகாவின் நெஞ்சம் படபடத்தது.

''இதென்ன? போட்டோவில் பார்த்ததைவிட வயது அதிகமானவர்போல்... தலையில் லேசாக முன்புறம் வழுக்கையான கிராப், காதோரம் நரைக்கத் தொடங்கிய கிருதா, பட்டையான மூக்கு, பரந்த முகமும்... அரைக் கிழவன் ஒருத்தன் கோட்டும் சூட்டுமாக வந்திறங்கியது போல...''

ஷண்பகா மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளானாள். அவளது இன்ப எதிர்பார்ப்புகள் ஒரு புறம் அவளை உந்த, மறுபுறம் அடி மனதிலிருந்து எதிர்ப்புக் குரல் மேலோங்கப் பார்த்தது.

''ஷண்பகா! காப்பி பலகாரம் எடுத்திட்டுவாம்மா'' சின்னம்மா உற்சாகம் ததும்பிய குரலில் உரக்கக் கூறியதும், ஷண்பகா தன் மனக் கிலேசத்தை உதறிவிட்டு வேகமாக வெளியே வந்தாள்.

''பெரியவங்க கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கம்மா'' என்றுமில்லாத கனிவு பொங்கச் சின்னம்மா கூறினாள்.

''இருக்கட்டுங்க. முதல்ல பொண்ணுகிட்ட தன்னைப் புடிச்சிருக்கான்னு கேட்கணும்னு தம்பி ஆசைப்படுது'' நாகரத்தினத்தின் தாயார் ஆரம்பித்தாள்.

பரமசிவம் வெல வெலத்துப் போனார். இருப்பினும் சமாளித்தபடி, ''இங்கிலீஷ் நல்லாவே பேசுவா'' என்றார் அசடு வழிய.

''இருக்கட்டும் இந்தக் காலத்துப் பசங்க நேராகவே பேசணும்னு ஆசைப்படறது சகஜம் தானே?''

மறு பேச்சின்றி, பக்கத்து அறையில் அவர்களது கருத்தைப் பகிர்ந்து கொள்ள ஏற்பாடு செய்துவிட்டனர். ஷண்பகா மெய் பதற உள்ளே நுழைந்தவள், அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. அவளது அழகையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த நாகரத்னம், மெல்ல முறுவலித்தான்.

''என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?''

சுத்தமான தமிழில் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டவளாய் நின்றாள் ஷண்பகா.

''ம்.''

''பேசமாட்டியா என்ன? அப்புறம் ஆஸ்த்ரேலியா வந்தால் நிறையப் பேச வேண்டி இருக்குமே?'' அவன் வற்புறுத்தினான்.

'எ... எ... எனக்கு உ... உங்களை'' சகிக்க முடியாமல் உதடுகள் கோணிக் கொண்டன. முகம் கோணியது. உதடுகள் துடிக்க, கண்களில் நீர் முட்டியது. எந்தக் குறை தன்னைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று வாய் மூடி மௌனம் சாதிக்க விரும்பினாளோ, அதே குறை அவளைத் தலைகுப்புற விழச் செய்துவிட்டது.



தூக்கி வாரிப் போட்டது அவனுக்கு. சற்று முன், அவளது அழகில் சொக்கிப் போய் நின்றவனது முகத்தில் முதலில் திகைப்பும், தொடர்ந்து வெறுப்பும் மேலோங்கி நின்றன.

பதில் கூறாமல் 'பரக்'கென்று வெளியே பாய்ந்தான். அம்மா, புறப்படுங்க! இனி இங்கே நமக்கு வேலை இல்லே.'' சர சரவெனத் தாயும் மகனும் வெளியேறி, கார் கதவைப் படாரென்று சாத்திக்கொண்டு கிளம்பிவிட்டனர்.

ஒரு கணம் யாவரும் அதிர்ந்து போய் விட்டனர். என்னடி ஆச்சு? நீ என்ன சொன்னே? வலிய வந்த சீதேவியைக் காலால உதைச்சித் தள்ளிட்டியா? எனக்குத் தெரியுமே! நீ அவனை வேண்டாம், பிடிக்கலைன்னு சொல்லியிருப்பே'' சின்னம்மா பொரிந்து கொட்டினாள்.

''இ... இ... இல்லே...'' அதற்கு மேல் பேச முடியாமல் துக்கம் தொண்டையை அழுத்தியபடி, 'ஓ'வென்று அழுதாள் ஷண்பகா.

பரமசிவத்திற்கு நிலைமையை ஊகிக்க முடிந்தது. 'மகளின் குறையை மறைத்துக் கல்யாணம் செய்ய முற்பட்டோம்' என்று மாப்பிள்ளை கோபித்துக் கொண்டு போய்விட்டான். இனி எப்படி அவர் ஊரார் முகத்தில் விழிப்பார்? கண்கள் கலங்க, மகளை அருகே அழைத்து அணைத்தார்.

''அழாதேம்மா, நான் ஒரு படிச்ச முட்டாளா யிட்டேன். ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்ன்னு சொல்வாங்களே, நாம் ஒரே ஒரு பொய்தானே சொல்லப் போறோம்னு தவறா நினைச்சிட்டேன். எனக்கு ஆண்டவன் சரியான தண்டனை குடுத்திட்டானம்மா'' குழந்தைபோல் அவர் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

''அப்பாவும் பொண்ணுமா இப்படி ஒப்பாரி வச்சிட்டா சரியாப்போச்சா? போயி, அவங்க கையில கால்ல விழுந்து, காரியத்தை முடிக்கப் பாருங்க'' அதட்டினாள் சின்னம்மா.

பரமசிவம் பிடிவாதமாக மறுத்துவிட்டார். புவனேச்வரியின் காளி போன்ற கூச்சல் அவரை அசைக்க முடியவில்லை.

முடிவாக சுந்தரம் கால் தேயாத குறையாக மாப்பிள்ளை தங்கி இருந்த வீட்டிற்கு நடையாக நடந்தார்.

''இவ்வளவு பணத்தையும் செலவழித்துக்கொண்டு என்னை வரவழைத்து ஏமாற்றப் பார்த்தீர்கள். திக்கு வாய்ப் பெண்ணை எவன் கட்டுவான்? எனக்கு இனி நிற்க நேரமில்லை. நான் திரும்பப் புறப்பட்டுக் கொண்டே இருக்கிறேன்'' ஆணித்தரமாக அபிப்ராயம் தெரிவித்து விட்டான் நாகரத்னம்.

ஊரார் கண்களில் அவன் ஓர் ஆண் மகன். அதிலும் வசதியானவன். ஷண்பகா இல்லாவிட்டால் இன்னும் எத்தனையோ பெண்கள் மாலை சூடத் தயாராக இருப்பார்களே! கோடி வீட்டுக் குப்புசாமி காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தவர் போல் அந்தக் காலி இடத்தை நிரப்பத் தன் பெண் சுமதியைத் தள்ளி விட்டார்.

காலமும், நேரமும் யாருக்காகவும் காத்திருப்ப தில்லை. ஷண்பகாவின் விஷயத்தில் அது உண்மையாகி விட்டது. அதே முகூர்த்தத்தில் அவளது இடத்தில் சுமதி அமர்ந்து விட்டாள்.

ஷண்பகா நெஞ்சை அமுக்கிக் கொண்டாள். வாய்க்குள் எழுந்த விம்மலை அடக்கியபடி சமைய



லறைக்குச் சென்று தண்ணீர்க் குடத்தை இறக்கி வைத்தாள். கண்களில் நீர் வழிந்து விட்டால் நிச்சயம் சித்தி கடுமையாகத் திட்டுவாள்.

வெளியே வந்தவள், கூடத்து ஈஸிசேரில் சாய்ந்திருந்த சுந்தரத்தை விரக்தியுடன் பார்த்தாள்.

வரப்போகிற அறைக் கிழவனுக்காக, அடுத்த வீட்டிலிருக்கும் கதிரேசனை உதறிவிட்டாளே! இனி எந்தக் காரணத்தோடு, அவனிடம் பேச முடியும்? அவனை எத்தனை உதாசீனம் செய்திருக்கிறாள்? அசட்டை யாகப் பதில் சொல்லியிருக்கிறாள். சின்னம்மாவிற்கு இது விஷயம் தெரிந்தால்... அவளைக் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டு விடுவாள். தன்னிடம் ஒரு குறையை வைத்துக் கொண்டு இவ்வளவு கர்வம், அவளுக்குக் தேவைதானா? எண்ணி எண்ணி மனம் குமைந்தாள் அவள்.

''எதுக்கம்மா அழுவுறே. இவன் இல்லாட்டி இன்னொரு மாப்பிள்ளை. விடு'' சுந்தரம் ஆறுதலாகக் கூறினார்.

அவரருகில் வந்தவள், கண்களைத் துடைத்தபடி ''மாமா! எ... எனக்குக் கல்யாணமே வேணாம்'' என்றாள் திடீரென.

திகைப்புடன் அவளைப் பார்த்தவர், ''ஏம்மா அலுத்துக்கறே. உங்கிட்ட ஒரு சின்னக் குறை இருக்கு. அது என்ன பெரிய வியாதியா? சரிப்படுத்திட்டாப் போவுது, விடு, நீ மனசைப் போட்டு அலட்டிக்காத. நான் பட்டணம் போயி...''

''வேண்டாம். நா... நா... நிச்சயம் கல்யாணமே செய்துக்கப் போறதில்லை. எ... எ... எனக்குப்

பட்டணத்திலே வேலை வாங்கித் தந்திடுங்க மாமா'' பிடிவாதமாகக் கூறி முடித்தாள் அவள்.

வீடு திரும்பிய பரமசிவம் மிக்க மனச்சோர்வுடன் காணப்பட்டார். அவரும் ஷண்பகாவைப் போல வீட்டினுள் ஒளிந்து கொள்ள முடியாதே? எல்லா வற்றிற்கும் மேலாக வயிறு என்று ஒன்று இருக்கிறதே!

பள்ளி வேலை செய்யாவிட்டால், வீட்டில் சமையல் பானை காலிதான். ஏற்கனவே, கடனை உடனை வாங்கி சாமான்களை வாங்கிப் போட்டாயிற்று. இதையெல்லாம் அடைத்தாக வேண்டும். மேற்கொண்டு இரண்டு பிள்ளைகளைப் பெரியவர்களாக்க வேண்டும்.

வாழவேண்டிய நிர்ப்பந்தத்தின் கடமைக்காக அவர் வெளியே சென்று வந்தார். ஊரார் முகங்களில் தென்பட்ட ஏளனப் பார்வைகளைத் தாங்க முடியலையே! பாவம் ஷண்பகா என்ன செய்வாள்!

மனத்திற்குள் சலித்தபடிதான் வீடு திருப்பி இருந்தார். இரவுச் சாப்பாட்டின்போது, வீடே மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. என்னமோ நிகழ்ந்து விட்டது போன்ற புழுக்கமான சூழ்நிலை மௌனமாக அருகில் உட்கார்ந்திருந்த மகளைக் கனிவுடன் பார்த்தார் பரமசிவம்.

தட்டில் போட்டிருந்த சோற்றை விரல்களால் அளைந்தபடி, தலையைக் குனிந்தவாறு இருந்த மகளைக் கண்டதும் அவர் மனம் துணுக்குற்றது.

''சாப்பிடும்மா நடந்தது நடந்தாச்சு, விடு'' சமாதானம் கூற முயன்ற அவர் மனம் துணுக்குற்றது.



''ஒரு பெண்ணுக்குத் துப்பு வேணாமா? பேசறச்சே கவனமாகப் பேசுன்னு நூறு வாட்டி சொல்லிக் குடுத்தேன். சமயத்தில் காரியத்தையே கெடுத்திட்டா'' புலம்பியபடி சாம்பாரை ஊற்றினாள் புவனேச்வரி.

''எ... எ... எனக்குக் கல்யாணமே வேண்டாம். அ... அ... அ...ப்பா... எ-எ...எ... ன்னை விட்டுடுங்க... விட்டுடுங்க'' விசும்பியபடி கையை உதறிவிட்டு எழுந்தாள் ஷண்பகா.

கூடவே எழுந்த பரமசிவம், மனைவியை உறுத்துப் பார்த்தார். ''நீ செஞ்ச தப்பெல்லாம் போதாதுன்னு அதை இன்னும் ஏன் வார்த்தையாலே சித்திரவதை செய்யறே. வாயை மூடு!'' என்று சீறினார்.

சாதுவாக இதுநாள்வரை இருந்த கணவர், திடீரெனப் புலிபோல் வெகுண்டெழுந்ததைக் கண்ட புவனேச்வரி பயந்து போனாள்.

என்ன ஆயிற்று இந்த மனிதருக்கு?

''அக்கா! நீ தொண தொணக்காதே. ஏற்கெனவே மனசு புண்ணாகி அந்தப் பொண்ணு கஷ்டப் படுதில்லே?'' சுந்தரம் தன் பங்குக்கு வேறு சொல்லவும் அவளுக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை.

''ஊருக்கு இளிச்சவாயன் பிள்ளையார் கோயில் ஆண்டி. என்னமோ, இந்தப் பொண்ணுக்கு ஒரு நல்ல வாழ்வு கிடைக்கட்டும்னு பாத்தா...''

சுந்தரமும் மேற்கொண்டு பேச விரும்பாதவராய், ஒரே வாயாகச் சோற்றை அள்ளிப் போட்டுக் கொண்டு எழுந்துவிட்டார்.

கூடத்துப் பக்கம், கையைக் கழுவிக் கொண்டு மகளைப் பின் தொடர்ந்தார் பரமசிவம். ''அ... அ...ப்பா!

எ...எ... எனக்கு வேலைதேடித்தாங்க. எ...எ....எதுக்காக எ... எ... என்னை இப்பிடி அ... அ... அ... அவமானப் படுத்தறீங்க. நான் எ... எ...என்ன பாவம் செஞ்சிருக்கேன் அ... அப்பா...?'' அவரது மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறி அழுதாள்.

அவரது உள்ளம் பாசத்தினால் பொங்கியது. கண்கள் கலங்கின. ''அழாதேம்மா. உன் இஷ்டப்படியே ஏதாச்சும் வேலை தேடித் தரேன்'' மகளின் முன் நெற்றி மயிரை ஆதரவும் அன்புமாக ஒதுக்கியபடி கூறினார்.

''இ... இ... இந்த ஊர்ல வேணாம்பா'' பிடிவாத மாகக் கூறினாள் திணறலாக.

''வேற எங்கம்மா என்னால முடியும்?'' அவர் திகைத்துப் போனார்.

பின்னால் வந்த சுந்தரம், ''நீங்க ஏன் அத்தான் கவலைப் படறீங்க? நான் மெட்றாஸ்கு அழைச்சுக் கிட்டுப் போறேன். அங்கே இந்தப் பத்தாம் கிளாஸ் படிப்பு மட்டும் பத்தாது அத்தான். கொஞ்சம் ஷார்ட் ஹாண்ட், டைப்பிங் எல்லாம் படிக்கட்டும் நல்ல வேலை கிடைக்கும்.

ஷண்பகாவிற்கு மனசு ஆறுதலா இருக்கும் கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம்'' என்று கூறினார்.

புவனேச்வரியும் இதற்குச் சம்மதம் அளித்து விட்டாள். கொஞ்ச காலம், ஊரார் வாயிலிருந்து மீண்டால் போதும் என்றாகிவிட்டது அவளுக்கு, பரமசிவமும் அதையே விரும்பினார்.

ஷண்பகாவிற்கோ...? ஒரு புது வாழ்வைத் தொடங்குவது போன்ற உணர்வு. கசப்பான உணர்வை



உதறிவிட்டு ஒளிய முயல்வது போன்ற ஆத்திரம். ஓர் அவமானச் சூழலிலிருந்து, தப்பித்து வெளிவந்து விட்டது போன்ற அவசரம். பல்வேறு உணர்ச்சிகளுடன் அவள் சுந்தரம் மாமாவுடன் சென்னைக்குப் பயணமானாள்.

## 4

**ஷ**ண்பகாவிற்கு சென்னை மாநகரம் புதிதுதான் என்றாலும், ஓரிரு முறை ஊரில் நடக்கும் திரைப்படங்களில் பார்த்துக் கவனம் செய்துகொண்ட ஊர். அப்பா சொல்லிக் கொடுத்த பாடப் புத்தகங்களின் வழியாக அறிந்து கொண்ட ஊர்.

சென்னையின் பரபரப்பு அவளுக்கு மெத்தப் பிடித்திருந்தது. சுந்தரம் மாமா, திருவல்லிக்கேணியில் ஒரு சிறு சந்தில் குடியிருந்தார். அவரது மனைவியும், மகள் சரோஜாவும் அவளிடம் அன்பாக நடந்து கொண்டனர்.

சென்னையில் காலடி எடுத்து வைத்ததும் முதல் வேலையாக அவளைச் சுந்தரம், திருமதி குணசேகரம் வீட்டிற்கு அழைத்துப் போனார்.

மாம்பலத்தில் அவர்களது பங்களாவிற்குள் மாமாவுடன் நுழைந்த ஷண்பகா அசந்து போனாள். தலை எது, வால் எது என்று விளங்க முடியாதபடி ரோமம் அடர்ந்த நாய்க்குட்டி ஒன்றுடன் கொஞ்சிக் கொண்டிருந்த திருமதி குணசேகரம் உற்றுப் பார்த்துவிட்டு, ''யாரது? சுந்தரமா? வாங்க'' என்றாள்.

அந்தக் காலை வேளையிலும், உயர்ரக 'ஸில்க்' சேலையில் உதட்டில் சாயப் பூச்சும், நகப் பூச்சுமாக இருந்தாள். கன்னங்களில் செல்வத்தின் செழிப்பு. உடலிலும் அதன் வளமை தெரிந்தது. கூந்தலைக் கழுத்து வரை வெட்டி விட்டிருந்தாள்.

இந்தச் சேலைக்கும், அந்தக் குட்டைக் கூந்தலுக்கும் பொருத்தமாக இல்லையே? சிந்தித்தபடியே ஷண்பகா வியப்பினால் கண்கள் விரிய அந்தம்மாளையே பார்த்தாள்.

''யாரு இந்தப் பெண்ணு?'' - அவள் வினவினாள்.

சற்று நேரத்தில் திருமதி குணசேகரம், நாயைக் கீழே இறக்கிவிட்டு ஷண்பகாவின் அருகில் வந்தாள்.

''நீங்க சொன்னதைக் கேட்டதும் எனக்கு ரொம்ப மனசு கஷ்டப்படுது. எதுக்கும் அவர் கிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டுச் சொல்றேன். நாங்க ஒரு சமூக சேவை நிலையம் திறந்திருக்கிறோம். அதில் இவளைப் போல் வருகிற பெண்களுக்கு இனாமாகவே பயிற்சி அளிக்கிறோம். ஷார்ட் ஹாண்ட், டைப்பிங் இன்னும் எவ்வளவோ... எங்க சங்கத்தின் பிரஸிடெண்ட் கிட்டச் சொல்லி சிபாரிசு செய்யறேன். இரண்டு நாள் பொறுத்து வாங்க'' என்றாள் இனிமையான குரலில்.

ஷண்பகா பூரித்துப் போனாள். எத்தனை கருணை உள்ளம் கொண்டவள் இந்த அம்மாள்! இனி அவள் நிச்சயம் வாழ்வில் முன்னேறுவாள். தானாகவே, தன் காலில் உறுதியாக நிற்பாள்.

சரோஜா அவளைக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டாள்.



''அந்தம்மாள் அங்கே நிச்சயமா சேத்துடறேன்னு சொன்னார்களா? அந்தச் சேவா மந்திர்ல பெண்கள் தங்க வசதி இருக்கா? இல்லாட்டி நீ இங்கேயே எங்களோட இருந்திடு ஷண்பகா.''

ஷண்பகா, சரோஜாவின் அன்பில் திணறித்தான் போனாள். ஆனாலும் ஆயுள் பூராவும் பிறருக்குப் பாரமாக வாழ முடியாதே. எப்படியும் அவளுக்கு ஒரு வழி வகுத்துக் கொள்ள வேண்டுமல்லவா? மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். ''சரோ! நான் இந்த ஊர்லதானே இருப்பேன். அடிக்கடி உன்னை வந்து பாக்கறேன்'' என்றாள் மெல்ல.

இரண்டு நாளில் ஷண்பகா முள் மேலிருப்பதைப் போலத் தவித்துப் போனாள். எப்படியாவது திருமதி குணசேகரம் மனமிறங்க வேண்டுமே என்கிற திகிலில் அவள் வெந்து கொண்டிருந்தாள்.

நான்கு நாட்களுக்குப் பின் ஒருநாள் மாலை, சுந்தரம் மாமா உற்சாகத்துடன் வீடு திரும்பினார்.

''ஷண்பகா, உனக்கு, அந்தச் சேவாமந்திர்ல இனாமாகக் கத்துக் குடுக்க ஏற்பாடு செய்து விட்டாங்களாம்!''

ஷண்பகா, சந்தோஷ மிகுதியுடன் ''தாங்க்ஸ் மாமா'' என்று அவரைப் பாராட்டினாள்.

''ஆனா... ஒரு சங்கடம்...''

''எ... எ... என்ன மாமா?' பீதியுடன் அவரைப் பார்த்தாள் அவள்.

''அங்கே ஹாஸ்டல்ல தங்க இடம் கிடையாதாம்.''

''தினமும், இங்கே இருந்து அவ்வளவு தூரம் போகணுமேப்பா'' சரோஜா கவலை தெரிவித்தாள்.

''அதுக்கும் அந்தம்மாளே ஒரு வழி தெரிவிச்சாங்க. அதாவது பயிற்சி முடியறவரை அவங்க வீட்லயே தங்கிக் கொள்ளட்டும். அவங்க தினசரி அங்கே போகும்போது கொண்டு விட்டுடுவாங்களாம். திரும்பி வந்திட்டாப் போதும். பயிற்சி முடிந்த பிறகு அவங்களே வேலை வாங்கித்தரவும் ஏற்பாடு செய்யறதாச் சொன்னாங்க.''

நன்றிப் பெருக்கால் ஷண்பகாவிற்கு வார்த்தைகள் வர மறுத்தன. கண்களில நீர் பனிக்க, ''அ அ... அவங்க வீட்ல சும்மா எ... எ... எப்படி...'' என்று திணறினாள்.

''ஏதாச்சும் கூடமாட உதவி செய்து உன் நன்றியை தெரிவியேன்'' சரோஜா கூறி வைத்தாள்.

மறுநாள் மாம்பலம் பங்களாவிற்குள் ஷண்பகா நுழைந்தபோது திரு. குணசேகரம் வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தார். மனைவியின் ஆடம்பர அலங்காரத் திற்கு நேர் எதிரான ஒரு தோற்றம்.

வெள்ளை வெளேரென்ற வேட்டியும், சட்டையும் நெற்றியில் திருநீறுமாக, தினசரித் தாளில் மூழ்கி இருந்தார். கனத்த மூக்குக் கண்ணாடி, தலை முழுதும் வழுக்கை, முகத்தில் எந்தவிதமான சலனமும் இல்லை.

''வணக்கம் ஐயா!'' சுந்தரம் மாமாவை நிமிர்ந்து பார்த்தவர், ''இதபாரு, உன்னைத்தானே! நம்ம சுந்தரம் ஐயா வந்திருக்காரு'' என்றவர் - மீண்டும் தினசரியில் ஆழ்ந்துவிட்டார் அந்தக் கவலையில்லா மனிதர்!

திருமதி குணசேகரம் உள்ளிருந்து வந்தவள், 'வாங்க வாங்க! வீட்ல சமையல் ஆள் இல்லை. அவசரமா எங்க கிளப் மீட்டிங் வேற, ரொம்ப வேலையாக இருந் திட்டேன்.'' என்றாள்.



''குழந்தையை அழைச்சுக்கிட்டு வந்திட்டேன்'' சுந்தரம் சுருக்கமாகக் கூறினார்.

''இனி அவ எங்க குழந்தை மாதிரி. எங்களுக்குத் தான் அந்தப் பாக்கியமே இல்லியே'' தழுதழுத்த குரலில் கூறி முடித்த திருமதி குணசேகரம் ஷண்பகாவினருகில் வந்து, ''உள்ளே போம்மா. காப்பி டிபன் சாப்பிடு'' என்றாள்.

''அடிக்கடி அப்பாவுக்குக் கடுதாசு போடும்மா. நானும் வந்து பாக்கறேன்'' சுந்தரம் விடைபெற்றுக் கொண்டார்.

ஷண்பகா மெல்ல அந்தப் புதிய சூழ்நிலையில் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டாள். அவளுக்கு என்று சமையலறையருகில் இருந்த ஒரு சிறு அறையை அந்த அம்மாள் ஒழித்துக் கொடுத்திருந்தாள். ''பெரிய மனசு இந்தம்மாளுக்கு!'' என்று எண்ணி வியந்தாள் அவள்.

காலம் வேகமாகச் சென்றது. இப்போதெல்லாம் ஷண்பகாவிற்குப் பேசக்கூட நேரம் இருப்பதில்லை. அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு, சமையலறைக் குள் புகுந்து விட்டால், ஒரே மூச்சாக அன்றைய சமையலை முடித்துவிட்டுத்தான் வெளி வருவாள்.

பிறகு அவசரம் அவசரமாக இரண்டு வாய் சோற்றை அள்ளிப் போட்டுக் கொண்டு, சேவா நிலையத்திற்குப் போய் விடுவாள். அவள் திரும்பும்பொழுது பிற்பகல் ஆகிவிடும். மீண்டும் டிபன், இரவு சாப்பாடு என்று பம்பரம் போன்ற வாழ்க்கை. இந்த வீட்டு வேலைகள் அவளுக்குப் புதிய விஷயங்களல்ல. அதிலும் கிராமத்தில்

விறகு அடுப்பும், தண்ணீர் எடுக்கக் கிணறு தேடிப் போகும் பழக்கமும் உள்ளவளுக்கு நவீன வசதியடங்கிய சமையலறை வேலைகள் பெரிய விஷயமல்ல. ஆனால் அவளை மெல்ல மெல்ல தன் வீட்டு வேலைக்காரியாக்கிக் கொண்ட திருமதி குணசேகரத்தின் சாமர்த்தியத்தை எண்ணி அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் அவளை, ''கொஞ்சம், அந்தக் 'கியாஸ்' அடுப்பைப் பாரேம்மா' என்பாள் கொஞ்சலாக.

''இப்பத்தான் 'கிளப்' மீட்டிங்லேருந்து வந்தேன். ஒரே தலைவலி. அப்பப்பா! சமையல் ஆளே கிடைக்க மாட்டேங்குது'' என்று அலுத்துக் கொள்வாள்.

''அதுக்கென்னங்க. நான் இருக்கேனே'' ஷண்பகா ஓடிச் சென்று காபியுடன் வந்து நிற்பாள்.

ஷண்பகாவிற்கே தெரியாமல், படிப்படியாக சமையல் வேலை அவள்மீது சுமத்தப்பட்டு விட்டிருந்தது.

''நீ செய்யறது நல்லாவே இல்லே லல்லி, (திருமதி குணசேகரம்) பாவம்; படிக்கறதுக்கு வந்த பொண்ணு. அதைப் போய் இப்பிடி சக்கையா வேலை வாங்கறே'' ஒரு நாள் சாப்பாட்டு மேஜையருகே அமர்ந்த குணசேகரம் மனைவியைக் கடிந்து கொண்டார்.

''உஸ்? சும்மா இருங்க. இதோட எத்தனை சமையல் ஆள் வச்சிட்டேன். இவளைப்போல் சாமர்த்தியமா, அழகா, யாரு சமையல் செய்தாங்க. வாய்க்கு ருசியா இருக்குன்னு அன்னிக்கு உருளைக் கிழங்குப் பொறியல் சாப்பிட்டீங்களே நினைவிருக்குதா?'' மனைவி மிரட்டினாள் அடிக்குரலில்.



மேஜைமீது உணவு பரிமாற வந்த ஷண்பகாவின் காதுகளில் அந்த வார்த்தைகள் தெளிவாக விழுந்தன. 'சாப்பாடு ஒழுங்காக வேண்டுமானால் மரியாதையாக வாயை மூடிக்கொண்டு அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுங்கள் என்று லல்லி கணவரை மிரட்டுகிறாள். சட்டெனச் சமையலறைக்குள் சென்றுவிட்டு அப்போதுதான் வருபவள் போல் ஷண்பகா சாப்பாட்டு மேஜையருகே சென்றாள்.

''இன்னிக்கு 'குருமா' ரொம்பப் பிரமாதம்'' உளறினார் குணசேகரம்.

ஷண்பகா பதில் பேசவில்லை. அவளுக்கு நிலைமை நன்கு புரிந்து விட்டிருந்தது. ஆனால் ஊரில் இருக்கும் அப்பாவிற்கு மட்டும், குணசேகரம் தம்பதிகளை வானளாவப் புகழ்ந்து கடிதம் எழுதத் தவற மாட்டாள். ஆயிற்று, இன்னும் இரண்டே மாதங்கள். பல்லைக் கடித்துக் கொண்டு தள்ளிவிட்டால் பயிற்சிப் பரீட்சை முடிந்து கையில் அத்தாட்சிப் பத்திரத்துடன் வேலையும் கிடைத்துவிடும். பிறகு என்ன?

ஷண்பகாவின் பொறுமையையும் சோதிக்கும் காரியம் ஒன்று அன்று நடந்துவிட்டது.

திருமதி குணசேகரம் வாரம் ஒருமுறை அவர்களது 'கிளப்' அங்கத்தினர்களுடன் தன் வீட்டிலேயே கூடி விவாதிப்பது வழக்கம். அன்று அவர்களது 'கிளப் பிரஸிடெண்ட்' ஞானாம்பாளும் வந்து சேரவே, காரசாரமான விவாதங்களும், தீர்மானங்களும் நடை பெற்றன.

அவர்களது சேவா:மந்திரின் பயிற்சிக் கால முடிவின் போது நடத்தவேண்டிய விழா விவரங்கள் அலசப்பட்டன.

ஞானாம்பாள் அம்மையார் முடிவில் கூறினார்: 'ஒரு சந்தோஷ சமாசாரம் கூற விரும்புகிறேன். இந்தச் சேவா நிலையம் சம்பந்தமாக வெளிநாட்டுப் பயணம் ஒன்று போகத் திட்டமிட்டிருக்கிறேன். அப்போது, இதே போன்று உலகம் முழுவம் பல்வேறு நாடுகளில் நடைபெறும் சேவா நிலையங்கள் எப்படி இயங்கு கின்றன என்பதை, அறிந்து வரப் போகிறேன். இதற்கு அரசாங்க அனுமதி உதவி யாவும் வாங்கியாகிவிட்டது. என்னுடன் வருவதற்கு இன்னும் இரண்டு பேரைத் தேர்ந்தெடுக்கப் போகிறேன்.'' பலத்த கைத்தட்டலும், மகிழ்ச்சியுமாகக் கூட்டம் ஆரவாரித்தது.

''திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்ப்போம்'' ஒருத்தி ஆலோசனை கூற அனைவரும் ஆமோதித்தனர்.

வெளிநாட்டுப் பயண வாய்ப்புக்கு, திருமதி குண சேகரம் - மற்றும் ஒரு பெண்மணி - என்று வந்தது.

கை தட்டலும், பாராட்டுதல்களுக்குமிடையில் திருமதி குணசேகரம் தடுமாறிப் போய்விட்டாள். ஆனந்த மிகுதியால் உரக்க ''ஷண்பகா! எல்லோருக்கும் காப்பி, டிபன் கொண்டு வா. அப்படியே ஸ்டோர் ரூமில் இருக்கிற எவர்சில்வர் தூக்கில் மைசூர் பாகு வச்சிருக்கேனே கொண்டு வா'' என்று கத்தினாள்.

''நீங்க ஒரு 'ட்ரீட்' குடுக்கணும், வீட்ல செஞ்சு வச்சிருக்கிற 'ஸ்வீட்'டைக் குடுத்து ஏமாத்தாதீங்க'' ஒருத்தி கீச்சுக் குரலில் கூவ 'கொல்'லென்று சிரிப்பு அலைமோதியது.

ஷண்பகா, சிறு சிறு காகிதத் தட்டுகளில் சிறிது மிக்சரும், மைசூர் பாகுமாக எடுத்து, மரத் தட்டில் வைத்தபடி அங்கே வந்தாள்.



''இது... இந்தப் பெண்...'' ஞானாம்பாள் நினைவைக் கசக்கிக் கொள்ளுமுன், ''ஆமா, பாவம்! நான்தானே உங்க கிட்டே சிபாரிசுக்குக் கொண்டு வந்தேன். ரொம்ப நல்லா ஷார்ட்ஹேண்ட், டைப்பிங் கத்துக் கிட்டா.''

தங்க எடம் இல்லேன்னா, எங்கிட்டேயே இருக் கட்டும்னு வச்சுக்கிட்டேன்' லல்லி முந்திக் கொண்டாள்.

''நீங்க எப்பவுமே ரொம்ப தாராளம்'' ஒருத்தி முகஸ்துதி செய்தாள்.

ஞானாம்பாள் ஷண்பகாவின் அழகிய முகத்தையே பார்த்தாள். ''ஏம்மா! உனக்கு அம்மா, அப்பா யாருமே இல்லையா?''

''இ... இ... இருக்காங்க அ... அம்மா இ... இல்லே... அ... அ அப்பா இ... இ...ருக்காரு. ஊ... ஊர்ல...

உதடுகள் விகாரமாகக் கோணிக் கொண்டன. வார்த்தைகளை முழுதாகப் பேச அவள் படும் சிரமம் அந்த அம்மாளுக்குப் புரிந்துவிட்டது.

''பாவம்! இது ஒரு குறைங்க, அதனாலதான் இந்தப் பொண்ணுக்கு கல்யாணமே நின்னிடுச்சாம்'' லல்லி விவரிக்க ஆரம்பித்ததும், மேற்கொண்டு நிற்கப் பிடிக்காமல் சமையலறைக்குள் காப்பி எடுத்து வர மரத்தட்டுடன் ஓடினாள் ஷண்பகா.

காப்பிக் கோப்பைகளுடன் அவள் திரும்பியதும், அங்கே திக்கு வாய்க்கான சிகிச்சை முறைகளைப் பற்றிப் பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

''இது ஒரு பெரிய குறையா? என் நாத்தி மகன் இவளை விட பெரிய திக்குவாயன். அவனுக்குப் பத்தாயிரம் ரூபாய் வரதட்சிணை கொடுத்துக்

கல்யாணம் செய்து கொண்டார்கள்.'' என்றாள் ஒருத்தி அலட்சியமாக.

''அவன் ஆண் பிள்ளை! இவள் பெண்ணாச்சே! இந்தத் தாழ்வு மனப்பான்மையை நாமெல்லாம் ஒதுக்கித் தள்ள வேண்டும்'' ஞானாம்பாள் சினத்துடன் மொழிந்தாள். அனைவரும் மௌனம் சாதித்தனர்.

''இப்ப இவளையே எடுத்துக்கொள்ளுங்க. இவளுக்கு 'ஸ்பீச் தெரபி' கொடுத்துக் குணப்படுத்த முடியும்'' ஞானாம்பாள் விடாமல் கூறினாள்.

''இதோ பாரம்மா ஷண்பகா! பரீட்சை முடிந்து என்னை வந்து பார். அந்த மாதிரி பயிற்சி முகாமைப் பத்திக் கேட்க உன்னை அழைச்சுப் போக ஏற்பாடு செய்யறேன். இது ஒரு குறை இல்லே. ஒரு குறிப்பிட்ட வார்த்தை அல்லது எழுத்தைப் பேசும்போது உனக்குத் திக்குது. நாக்குப் புரள மறுக்குது. இல்லியா.''

ஷண்பகா கண்ணீர் துளிர்க்கத் தலையை ஆட்டினாள்.

''பயப்படாதே அப்படி வரும் வார்த்தைகளை மாத்திப் பேசும்படி பழக்குவாங்க. இல்லே, வேற ஏதானும் சமிக்ஞை செய்து அந்தத் தடுமாற்றத்தை மத்தவங்க புரிந்து கொள்ள முடியாதபடி செய்துடுவாங்க. அப்படி நீயும் செய்யலாம். எங்களைப் போலவே பேசலாம். கவலைப்படாதே'' ஞானாம்பாள் கருணை பொங்கும் குரலில் கூறினாள்.

''எப்படிங்க?'' லல்லி ஆவலுடன் கேட்டாள்.

''எனக்குத் தெரிந்த ஒரு பெண், இப்படித்தான் பேச்சுத் திக்கிக் கொள்ளும். அப்படியே பேச்சுத்



திணறுவோம் என்று தோன்றும் சமயம் சட்டென நிறுத்தி, தன் கைகளில் ஒருவித ஓசை செய்வாள். கேட்பவர் கவனம் அதன்மீது திரும்பும், மேலே அவள் பேச்சைத் தொடர்வாள். இந்த 'ஸ்பீச்... தெரபி' முறையை அவள் கற்று வந்திருந்தாள். ஷண்பகாவிற்கும் ஏன் அந்த மாதிரிப் பயிற்சி அளிக்கக் கூடாது? பிறகு அவளைப் போன்ற பல பெண்களுக்கு நமது சேவை நிலையத்திலும் ஒரு வகுப்பு நடத்தலாமே.''

ஞானாம்பாள் அம்மாளும் மற்றவர்களும் விடை பெற்றுப் போய் வெகு நேரம் ஆகியும் ஷண்பகா பிரமை பிடித்தவள்போல் நின்றிருந்தாள். நிச்சயம் அவளுக்கு ஒரு எதிர்காலம் இருக்கிறதா?

சரோஜா அவளைப் பார்க்க ஒரு நாள் சுந்தரம் மாமாவுடன் வந்திருந்தாள். ஷண்பகா ஞானாம்பாள் அம்மாளின் கருணையைப் பற்றி விவரித்தவுடன் உணர்ச்சி மிகுதியால், கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. மேலே விவரமாகப் பேசமுடியாமல் நாக்குத் தடுமாறியது.

''எனக்கு ரொம்ப சந்தோசமாக இருக்கு ஷண்பகா! நீ திரும்பி ஊருக்குப் போறதுக்குள்ளே ஒரு நல்ல வேலை மட்டும் இல்லே; நல்லபடியே பேசவும் வேணும்'' சரோஜா நாத் தழுதழுக்கக் கூறினாள்.

''அ... அ... அப்பாவுக்கு எ... எழுதி...''

''எழுதிட்டியா? ரொம்ப சந்தோஷப்படுவாரு'' சுந்தரம் மாமா கூறினார்.

''சர்டிபிகேட் குடுத்தாங்கன்னா என்னை நினைவு வச்சிக்க. எங்கிட்ட நேர கொண்டு வந்து காட்டணும், என்ன?'' சரோஜா சிரித்தாள்.

# 5

**நா**ட்கள் ஓடிச் சென்றன. பரீட்சை நடந்து கொண்டிருந்தது. அவள் நன்றாகவே பரீட்சையில் செய்திருந்தாள். கடைசிப் பரீட்சை அன்றுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

லல்லி, தனது வெளிநாட்டுப் பயணத்திற்காக அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தாள். விஸா, பாஸ்போர்ட் இன்னும் என்னென்னவோ விவரங்கள், வெளிநாட்டில் அவள் பேச வேண்டிய பேச்சின் பிரதிகள், இத்யாதி.

அன்று காலை, பரீட்சைக்காக அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்த ஷண்பகாவிடம், ''இதபாரு; இந்தச் சொற்பொழிவை அப்பிடியே ஒரு நாலு காப்பி 'டைப்' செய்துட்டுவா'' என்றாள் லல்லி.

ஷண்பகா திகைத்துப் போனாள். கடைசிப் பரீட்சை இப்போதுதான். சமையலறையிலிருந்து வெளிப்பட்டு வந்திருந்தாள். இதைத் தயார் செய்துவிட்டு எப்போது அவள் போவது?

அழுகையும், துக்கமும் பீறிட்டது. எதையாவது சொன்னால் அந்தம்மாள் சீறி விழுவாள். நடுக்கத்துடன் வாயிற்பக்கம் வந்தாள்.

குணசேகரம் வரவேற்பறையில் அமர்ந்திருந்தவர் அவளைக் கண்டதும், ''இன்னும் நீ போகலையாம்மா? நேரமாகுதே!'' என்று கேட்டார்.

பின்னாலேயே வந்த அவர் மனைவி மழுப்பலாக, ''எனக்கு அவசரமா சில கடுதாசிகளை 'டைப்' அடிச்சுக்



குடுக்கச் சொன்னேன். அதுதான் -'' என்று அசடு வழிந்தாள்.

''நல்லா இருக்குது நீ செய்யறது. முதல்லே அந்தப் பொண்ணை அனுப்பிவை. சாயங்காலம் அடிச்சு வைக்கச் சொல்லு. என்னவோ ஏழைப் பொண்ணு பேசமாட்டாம உங்கிட்ட மாட்டிக்கிச்சுன்னு வேலை வாங்கறே'' கடிந்து கொண்டார் அவர். பிறகு ஷண்பகாவின் பக்கம் திரும்பி ''அதெல்லாம் இப்படி வச்சிட்டு, முதல்ல பரீட்சைக்குப் போ!ம்!'' விரட்டினார்.

தப்பினோம், பிழைத்தோம் என்று ஷண்பகா அந்தத் தாள்களை வரவேற்பறை மேஜைமீது வைத்துவிட்டு வெளியே இறங்கினாள்.

''எங்கியோ கிடந்ததுகளைப் பிடிச்சிட்டு வந்து இருக்க எடம் குடுத்தேன். இப்ப நன்றி கெட்டதுங்க, என் வேலையை முடிக்கக் கூட நேரமில்லை அதுங்களுக்கு. நீங்க வேற அதுக்கு பக்க பலமா?'' உரக்க ஆவேசமாக லல்லி கத்தியது ஷண்பகாவின் காதுகளில் மோதி, அவளைப் பின்னும் வேகமாக வெளியேறச் செய்தது.

பரீட்சையை நன்கு முடித்து விட்டோம் என்ற திருப்தியுடன் வீடு திரும்பியவளுக்கு, திருமதி லல்லி குணசேகரம் பெரிய அதிர்ச்சி வைத்தியம் செய்து விட்டாள். குணசேகரம் வெளியே சென்றிருந்தார்.

''இத பார்; உனக்கு முன் கூட்டியே சொல்லி வைக்கிறேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் எங்க 'கிளப்' பிரஸிடண்ட் வரப் போறாங்க. அன்னிக்குச் சொன்ன 'ஸ்பீச் தெரபி' விஷயமா உங்கிட்ட பேசப் போறாங்க ளாம்'' அவளுக்கு மூச்சு வாங்கியது.

ஷண்பகா ஆவலுடன் அவளைப் பார்த்தாள். ''அந்தம்மாள் வந்து உன்னைக் கூப்பிட்டா நீ போகக் கூடாது. வர முடியாதுன்னு சொல்லணும். புரியுதா?'' அதட்டினாள்.

ஷண்பகா... அதிர்ந்து போனாள். ''ஏ ஏ ஏன் அ... அ... அப்படிச் சொல்லணும்?''

''ஏன்னா? இத்தனை நாள் உன்னை வச்சிச் சோறு போட்டேனே அந்த நன்றிக்காக. நான் மூணு வாரம் வெளி நாடு போறேன். இந்தச் சமயம் பாத்து நீ போயிட்டா இந்த வீடு என்ன ஆகறது? ஐயாவை யார் கவனிக்கிறது?'' உறுமினாள் அவள்.

இத்தனை நாளும் நீ சும்மாவா சோறு போட்டே? நான் இல்லாதபோது நீங்களும் உங்க ஐயாவும் என்ன செய்திங்க? எனக்கு நல்வாழ்வு வரப்போகிற வேளையில, அதுவும் வலிய வரும் சமயம் அதற்கு நிற்க நேரமில்லை உங்களுக்கு. வாயில் வார்த்தைகள் ஆத்திரமாக, ஆவேசமாகப் புரண்டன. ஆனால் நாக்கு செயலற்றுப் போய் விட்டது அவளுக்கு. கண்களில் கசிந்து வெளிவரப் பயமுறுத்தி நிற்கும் நீரைப் பற்களைக் கடித்து அடக்கிக் கொண்டாள்.

மாலை வரவேற்பறையில் ஞானாம்பாள் அம்மையாரின் குரல் கேட்டது. ''நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்திட்டேன். ஒரே பிடிவாதமா ஊருக்குப் போகணும் என்கிறா. இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கிறது ரொம்பக் கஷ்டம்னு சொல்லிப் பார்த்தேன். ஊஹூம்!'' அழகாக கோவையாகப் பொய் சொல்லிக் கொண் டிருந்தாள் லல்லி குணசேகரம்.



''நிசம்மாவா? இவளை நம்பி, நான் சகல ஏற்பாடு களையும் செய்ய இருந்தேனே!'' நம்ப முடியாதவராய் அந்த அம்மையார் கேட்டதும் தெளிவாக ஷண்பகா விற்குக் கேட்டது.

''வேணுமானால் நீங்களே கூப்பிட்டுக் கேளுங்க ளேன். ஏ ஷண்பகா! இங்க வா! கொஞ்சம் 'டீ' எடுத்திட்டு வா. அப்படியே உன் வாயாலேயே விவரமா சொல்லு'' அன்பு பொங்கும் குரலில் அழைத்தாள் லல்லி.

மரத் தட்டில் 'டீ' கோப்பைகளைச் சுமந்து வந்த ஷண்பகா, ஞானாம்பளை நிமிர்ந்து பார்க்கத் துணி வில்லாமல் தலையைக் குனிந்துகொண்டாள். லல்லி அவளையே உறுத்துப் பார்ப்பது தெரிந்தது. 'எங்கே தன்னையும் அறியாமல் உண்மை வெளிவந்துவிடுமோ' என்ற பயம் அவளுக்கு. 'டீ' கோப்பையைக் கையி லெடுத்த ஞானாம்பாள், ''நிசம்மாவே உனக்கு இந்த 'ஸ்பீச் தெரபி'யில் நம்பிக்கையில்லியா? ஏன் மாட்டேங்கிறியாம்'' என்று கேட்டாள்.

''அ...அ....அ...ப்பாவைப் பாத்திட்டு பிறகு வரேன் ஊ... ஊருக்குப் போய்ட்...'' முடிக்காமல் உள்ளே சென்று விட்டாள் ஷண்பகா. அதற்குமேல் கண்ணீரைக் கட்டுப் படுத்த முடியாமல் அவள் சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதாள். உலகில் எல்லோருமே சந்தர்ப்ப வாதிகள்தானா? சுயநலம் மிக்கவர்கள் தானா?

மறுநாள் காலை, வழக்கம்போல் சமையலை முடித்து விட்டு வெளியே வந்தவளின் முகத்திற்கு நேராக, இரு புடவைகளை விட்டெறிந்தாள் லல்லி குணசேகரம்.

''அவசரமா இதுகளைத் தோய்த்து 'இஸ்திரி' போட்டுவை. அந்தப் பேப்பர்களை 'டைப்' அடிச்சிடு. நான் வெளியே போய்ட்டு வரேன்.''

அவமானத்தால் முகம் சிவக்க, ஷண்பகா நெடுநேரம் அந்தக் கசங்கிய சேலைகளையே பார்த்தபடி நின்றிருந்தாள்.

அவளை வெறும் கொத்தடிமையாக வேலை வாங்க லல்லி குணசேகரம் முயலுகிறாள். இனி, அவளை எங்கும் வெளியே போகவிடாமல் வீட்டுக்குள்ளேயே முடக்கிப் போட முயல்வாள். சமையல், வீட்டு நிர்வாகம் யாவும் தெரிந்த ஒரு திறமையான அனுபவசாலி, அவளைப் போன்ற ஊர் சுற்றும் சோம்பேறிகளுக்கு மிகவும் தேவைதான். சே! சே! இந்தச் சூழ்நிலையிலிருந்து விடுபட வேண்டும்.

ஷண்பகா, அன்றிரவே ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டிருந்தாள். மறுநாள் காலை மாமா வீட்டிற்குச் சென்று வருவதாகக் கூறிச் சம்மதம் வாங்கிவிட வேண்டும். சரோஜாவிடம் கலந்து ஆலோசித்து, இந்த ராட்சதப் பிடியிலிருந்து விடுதலை அடையவேண்டும்.

மறுநாள், அரை மனதாக லல்லி குணசேகரம் ஒப்புதல் அளித்ததும், முதல் வேலையாகத் திருவல்லிக் கேணி போய்ச் சேர்ந்தாள் ஷண்பகா.

''என்ன இது ஷண்பகா! ஏன் இப்படி பதட்டமாக இருக்கே?'' சரோஜா விசாரித்து முடிப்பதற்குள் திக்கித் திணறி உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டி முடித்து விட்டாள் ஷண்பகா.

சரோஜா ஆத்திரத்தில் துடித்துப்போனாள். ''பெரிய சமூக சேவை செய்றவங்களாம். பசுத்தோல் போர்த்திய புலிங்க. இவங்களை'' பல்லைக் கடித்தாள்.



''மாமா எ... எ... எங்கே சரோ?'' ஷண்பகா கேட்டாள்.

''அப்பா, ஏதோ தரகு விஷயமா ஹைதராபாத் போயிருக்கார். அப்பா வர வரைக்கும் காத்திருக்காதே. நீ இப்பவே அந்த வீட்டை விட்டு புறப்படு. இனி அங்கே அரை நிமிஷம் கூட நிக்கக்கூடாது'' பிடிவாதமாகக் கூறினாள்.

''அப்படித் திடீர்னு வந்திட்டா, இவ மேலே அவங்களே ஏதாச்சும் திருட்டுக் குத்தம் சுமத்திட்டாலும் அதிசயப்படறதுக்கில்லே. இப்படிபட்டவங்க என்ன வேணாலும் செய்வாங்க. சரோ! அவசரப்படாதே. மெள்ள நாமே போய், ஒரு இரண்டு நாள், எங்களோடு அழைச்சிட்டுப் போறோம்னு சொல்லிட்டுக் கூட்டி வருவோம். இப்பப் போகட்டும்'' அவள் அம்மா யோசனை சொன்னாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் ஷண்பகா. ''அது... அ... அதுதான் சரி. நா... நாளன்னிக்கு வந்திடுங்க. விடைபெற்றுக்கொண்டாள்.

வரவேற்பறையில் வந்து நின்ற சரோஜாவின் பேச்சை மறுதளிக்க முடியாதபடி, குணசேகரம் வேறு உடன் இருந்து தொலைந்து விட்டார்! லல்லி குணசேகரத்திற்கு பற்களைக் கடிப்பதைத் தவிர வேறு வழி இல்லை!

''போய்ட்டு வ...டும், பாவம்! அவங்க மனுஷங்க கூட இருந்திட்டு வரட்டுமே!'' அவர் அனுமதியளித்து விட்டார்.

''அம்மாகிட்ட, உன் பெட்டியைக் காட்டிட்டு எடுத்திட்டு வா. கழுத்தில் அவளோட மைனர் செயின்

போட்டிருக்கா பாத்துக்குங்க. பெட்டியில் அவளோட துணிமணி.'' படபடவென சரோஜா பெட்டியைத் திறந்து காட்டிப் பேசியதும் லல்லி குணசேகரம் அசந்து போனாள்.

இந்தப் பெண் ஏன் இப்படிக் குரோதமாகப் பேசுகிறாள்! ஒரு வேளை ஷண்பகா பூனை மாதிரி இருந்து கொண்டு எல்லாவற்றையும் சொல்லி இருப்பாளோ! அவளை உறுத்துப் பார்த்து விட்டு, ''ம் சரி! சரி! அவ மேல எங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கு. இதெல்லாம் எதுக்காக? அதட்டியபடி வழியனுப்பினாள்.

திருவல்லிக்கேணி வந்ததும், சரோஜா சொன்னாள், ''முதல் வேலையாக அப்பாவுக்குக் கடுதாசு எழுது. எங்கப்பா வந்ததும், ஊருக்கு அனுப்ப வழி செய்வாரு.''

இரண்டாம் நாள் ஹைதராபாத்திலிருந்து சுந்தரத்தின் கடிதம்தான் வந்தது. 'போன இடத்தில் வேலை முடியாததால் வருவதற்கு இன்னும் ஒரு வார காலம் ஆகும். கவலைப்படவேண்டாம்' என்று எழுதி விட்டிருந்தார்.

'இ... இ... இப்ப எ... எ... என்ன செய்வது? திரும்பிப் போகலைனா அ... அ.. அந்தம்மா கோவிப்பாங்க.''

சரோஜா தீவிரமாகச் சிந்தித்தாள். ''பேசாம நீ ஊருக்குத் திரும்பிப் போயிடு. இல்லாட்டி, அந்தம்மாள் உன்னைச் சக்கையா வேலை வாங்கிட்டுத்தான் வெளியே அனுப்புவாங்க'' என்றாள்.

''தனியாவா?'' ஷண்பகா பயத்துடன் மெல்லக் கேட்டாள்.



''தன்னந்தனியா அதை அனுப்பிட்டு உங்கப்பாரு கிட்டப் பாட்டு வாங்கப் போறே'' சரோஜாவின் தாய் பயமுறுத்தினாள்.

''பிற்பகல் மூணு மணிக்கு, அந்தப் புறநகர்ப் பகுதி பஸ் புறப்படுது. சாயங்காலம் ஆறு மணிக்குள்ளார ஊருக்குப் போயிடுவா. படிச்சவ. கூடப் பயணம் செய்யறவங்களும் மனுசங்கதான். தவிர சதா ஒரு துணை தேடறதுங்கற வழக்கத்தையும் நம்ம பெண்கள் நிறுத்தணும்'' சரோஜா சூடாகப் பேசினாள்.

ஷண்பகாவிற்கு வேறு வழி இருக்கவில்லை. அந்தப் புலிக் குகைக்குள் நுழைவதைவிட, தனிமையில் பயணம் செய்வதுமேல்.

## 6

மறுநாள் பிற்பகல் மாமியிடம் ஆசிபெற்றுக் கொண்டு எஸ்பிளேனேட் பக்கம் பெட்டி சகிதம் சரோஜாவுடன் வந்து சேர்ந்தாள் ஷண்பகா. மனதில் தாங்கவொணாத பயம் வாட்டியது.

''அதோ நிக்குது பாரு. அந்தப் பஸ்தான். டிக்கட் வாங்கி வரேன். இங்கேயே நில்லு'' சரோஜா சொல்லி விட்டுச் சற்று தொலைவில் நின்ற தொலைதூரப் புறநகர் வண்டிப் பக்கம் சென்றாள்.

''ஷண்பகா!'' தூக்கிவாரிப் போட்டவளாய் நிமிர்ந்து பார்த்தாள். கதிரேசன்!

''நீ எங்கே இருக்கே! ஊருக்குப் புறப்பட்டுக் கிட்டிருக்கியா? அட! நானும் அதே பஸ்லதான் போறேன்'' படபடத்தான் அவன்.

சட்டென முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள் அவள். வாழ்க்கையில் எங்கேயும் ஒதுங்க முடியாமல் ஓடிக் கொண்டிருக்கிறாள் அவள். இந்தச் சமயத்தில் கேலி செய்வதுபோல் இவன் வந்து சேர்ந்துவிட்டானே?

''ஷண்பகா! பஸ் புறப்படப் போவுது. வா, வா'' சரோஜா அவசரப்படுத்தியவள் கையில் டிக்கட்டைத் திணித்தாள். அப்போதுதான் அருகில் நின்ற கதிரேசனை பார்த்தாள் அவள்.

''நானும் அவங்க ஊருதான்'' அடக்கமாகச் சிரித்தான் அவன்.

''அப்ப துணை தேட வேணாம்; என்ன ஷண்பகா!'' சரோஜா ( ட்டதும், ஷண்பகா பலமாக மறுப்புத் தெரிவித்தபடி முன்னால் நடந்தாள். ''இ... இந்த மனுசர் வேணாம்.''

''ஏன்?''

இப்பிடி வாங்க நா சொல்றேன்.'' கதிரேசன், சரோஜாவைக் கூப்பிட்டான். விடுவிடென முன்னால் நடந்தவள், வேகமாக ஜன்னலோர சீட்டைப் பிடித்து அதில் அமர்ந்தாள். அருகில் அமர்ந்திருந்த ஒரு பெண் மணி, தனியாவா போறே'' என்று கேட்டாள்.

ம்!'' ஷண்பகா பெட்டியை மடிமீது வைத்துக் கொண்டாள். மெல்ல ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

சரோஜாவும், கதிரேசனும் பலமாகக் கையை ஆட்டியபடி பேசிக்கொண்டு வந்தனர். கதிரேசன் உள்ளே



ஏறினதும், வெளிப்பக்கமாக அவளது ஜன்னல் அருகில் வந்து நின்று கொண்டாள் சரோஜா.

''நீ சுத்தப் பைத்தியம். இவ்வளவு படிச்சவர். கிராமத்திலேயே சேவை செய்யணும்னு உயர்ந்த லட்சியத்தோட பாடுபடறவர். உன் குறையை நிறைவா நினைச்சி உன்னையே அடையணும்னு நினைச்சவர். அவரைப்போய் ஒதுக்கிட்டு வந்தியே! அவரைக் கண்டால் நீ பேசமாட்டியாம். 'நான் துணையாகப் போகத் தயார். ஆனா ஷண்பகா மறுத்துடுவா'ன்னு மனம் ஒடிஞ்சு பேசறார். ஆனாலும் நீ ரொம்ப மோசம். இப்ப எதோ விவசாய சங்கம் விஷயமா மெட்ராஸ் வந்தாராம். தற்செயலாப் பாத்ததிலே ஒரே ஆச்சரியம் பாவம்'' தாழ்ந்த குரலில், அவளைக் கண்டித்தாள் சரோஜா.

ஷண்பகா மௌனம் சாதித்தாள். சட்டெனக் கண்டக்டர் விசிலை ஊதியதும் பஸ், புறப்பட்டுவிட்டது. கையை ஆட்டியபடி ''ஜாக்கிரதை கவனமா இறங்கு'' விடை கொடுத்தாள் சரோஜா. அவ - ஒரு விநாடி ஷண்பகாவின் கையை அழுத்தினாள் அன்புடன். கண்களில் நீர் துளிர்த்தது. ஷண்பகாவும் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நிலையத்தினின்றும் சீறிக்கொண்டு பாய்ந்து, வளைந்து வெளியேறிய பஸ், நெடுஞ்சாலைமீது 'கிர்'ரென்று சப்தத்துடன் சீராகச் செல்ல ஆரம்பித்தது.

தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் பயணியின் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள் ஷண்பகா. மணி நான்கு ஆயிற்று. இன்னும் ஒரு மணி நேரம். ஊர் போய்ச் சேர்ந்து விடுவாள்.

தன்னந்தனியாக வந்து நிற்கும் மகளைப் பார்த்ததும் அப்பா என்ன செய்வார்? சின்னம்மா என்ன சொல்வாள், என்ன நினைப்பாள்?

''பெரிசா வேலை செஞ்சு கிழிக்கற மாதிரி ஊரவிட்டு ஓடினியே. என்ன ஆச்சு?'' என்று கத்தலாம்.

திருவல்லிக்கேணியில் சுந்தரம் மாமா திரும்ப வந்து சரோஜாவைத் திட்டலாம்.

என்ன தைரியமிருந்தா இப்பிடித் தன்னந்தனியா அந்தப் பெண்ணை பஸ்ல ஏத்தி அனுப்பி இருப்பே. எங்க அத்தானுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்!'

ஷண்பகா கண்களை இறுக மூடிக்கொண்டாள். 'டமால்' என்ற சப்தம் காதைப் பிளந்தது. தொடர்ந்து ஐயோ! என்ற கூக்குரல்கள். 'என்னவோ நிகழ்ந்து விட்டது என்ற கிலியில் வண்டிக்குள்ளிருந்து குழப்பமும் கூச்சலும்; குழந்தை பெரியவர் என்று வேற்றுமையின்றி அழுகுரல்கள் கேட்டன. ஷண்பகா முன்புற சீட்டில் முட்டிக்கொண்டாள்.

நடுநடுங்கிப் போன அவள் கண்களைத் திறந்து பார்த்தாள். நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். நல்லவேளை! விபத்து ஏதும் இல்லை. வண்டிச் சக்கரம் வெடித்து விட்டது. டிரைவர் மிகச் சாமர்த்தியமாகப் பஸ்ஸை ஓரமாக நிறுத்த நினைத்திருக்கிறார். நெடுஞ் சாலை ஓரத்தில் நின்ற பெரிய புளிய மரத்தின் மீது இலேசாக ஓர் இடி; ஒரு குலுக்கல். அவ்வளவுதான்.

''ஏய்யா! புறப்படும்போது எல்லாம் சரியா இருக்கான்னு பார்க்கக் கூடாது?'' ஒருவர் கத்தினார்.



இதற்கிடையில் கண்டக்டரும், டிரைவரும் வாக்குவாதம் செய்யத் தொடங்கினார்கள். 'ஜாக்கியை எங்கே வச்சேய்யா?'' காணோமே.''

''நீ பாத்து வச்சுக்காம என்னய்யா ஆளு நீ... இப்ப மறுபடியும் ஏதாச்சும் வண்டி வந்தா நிறுத்தணும். இல்லாட்டி ஆறு மைல் அந்தப் பக்கம் போகணும். பெரிய பேஜாரு பொழப்பு.''

அவர்களைச் சமாதானம் செய்து வைத்தபடி பயணிகள் வண்டியை விட்டுக் கீழே இறங்கினார்கள். வெடித்த டயரைக் கழற்ற 'ஜாக்கி' வேண்டும். எதிரே வந்த லாரியை நிறுத்தி உதவி கேட்டார் டிரைவர்.

''சற்று நேரத்தில் ஆயிடும்'' பேசியபடி ஆங்காங்கே மக்கள் கூட்டம் தேங்கி நின்றது. ஷண்பகாவும் இறங்கி நின்றாள். கதிரேசன் சற்று தூரத்தில் நின்றிருந்தான். அவளுக்கு ஏனோ அவனைப் பார்க்கவே கூச்சமாக இருந்தது. சற்று நகர்ந்து தொலைவில் தெரிந்த ஒரு குடிசை வாயிற் பக்கமாகச் சென்று நின்றாள்.

டயரைக் கழற்றி லாரியில் போட்டுக் கொண்ட கண்டக்டர் போய்விட்டார்.

நேரம் ஊர்ந்து சென்றது. மெல்ல மெல்ல இருள் கவியத் தொடங்கியது ஷண்பகாவைக் காரணமில்லாத பயம் கவ்விக்கொண்டது. நெஞ்சில் திகிலினால் நாக்கு வறண்டது.

திரும்பக் குடிசைப் பக்கம் பார்த்தாள். 'குடிக்க நீர் கேட்டால் என்ன?' சற்றுத் தள்ளி, கவியும் இருளில் நின்று கொண்டிருப்பவர்களைப் பார்த்தாள். மெதுவாகக் குடிசையருகில் சென்று குனிந்தாள்.

''யாரது?'' அதட்டியபடி வெளியே எட்டிப் பார்த்தாள் தடித்த பெண்மணி ஒருத்தி.

''கொஞ்சம் தண்ணி'' தயக்கமாகக் கேட்டவளின் முகத்தை உற்றுப் பார்த்தவள், ''ம்! உள்ளே வா தரேன்'' என்றாள்.

மெல்ல உள்ளே சென்றாள் ஷண்பகா. ''இந்தா தண்ணி!'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டாள் அவள்.

கழுத்திற்கு நேராகக் கூரிய கத்தியை நீட்டியபடி முரடன் ஒருவன் நின்றான் ''சத்தம் போட்டே? ம்; அவ்வளவுதான் முதலில் சங்கிலியைக் கழட்டு.''

ஷண்பகா பயத்தால் உறைந்து போனாள். படக்படக்கென்று நெஞ்சு துடிதுடித்தது. பயத்தால் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. உடல் முழுவதும் குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

''ஆ... ஆ... ஆ'' வாய் குளறியது.

''உஸ்! சத்தம் போடாம சங்கிலியைக் கழட்டிக் குடுத்திட்டு ஓடு... ஏதாவது வெளியே போய் உளறினே?'' மிரட்டினான் அந்த ஆள் பயங்கரமான குரலில்.

ஷண்பகா அப்படி ஏமாந்து போக விரும்பவில்லை. சட்டெனக் கழுத்துச் சங்கிலியைப் பற்றிக் கொண்டாள். ''விடு'' என்று வீறிட்டாள் தன் பலம் முழுவதையும் திரட்டி. அடுத்த கணம் அவன் குடிசையின் மூலையில் எகிறிப் போய் விழுந்தான். ''கும்மென்ற ஒலியுடன் குத்துக்கள் சரமாரியாக விழுந்தன. அடுத்த கணம் அவன் ''ஐயோ! என்னை விடுங்க, விடுங்க'' என்று ஓட யத்தனித்தான்.



கண நேரம் ஒரே குழப்பமும், திகிலுமாக ஷண்பகாவிற்கு ஒன்றுமே விளங்கவில்லை. நிதானத் திற்கு வந்த பிறகு, அருகே கதிரேசன் நின்று கொண்டிருப் பதைப் பார்த்தாள்.

முரடன் கழுத்தில் துண்டைப்போட்டு முறுக்கி வெளியே தரதரவென இழுத்துச் சென்ற கதிரேசன், ''ஷண்பகா! போதும் உன் அசட்டுத்தனம். வெளியே வா'' என்று அதட்டினான்.

ஷண்பகா, பதட்டமாக வெளியே வந்தவள், கிடுகிடுவென உடலெல்லாம் ஆடிப்போனாள். பூமியே தட்டாமாலை சுற்றுவதைப் போல அவளுக்குப் பிரமை தட்டிற்று.

இதற்குள் பயணிகள் யாவரும் சூழ்ந்து கொண்டு அந்த முரடனைப் போலீசில் ஒப்படைப்பதைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர். வழியில் சென்று கொண்டிருந்த சைக்கிள் பயணியை நிறுத்தி, பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செய்தி சொல்லி அனுப்பி வைத்தனர்.

பஸ் கண்டக்டர் திரும்பி வந்து, பஸ் கிளம்பத் தயாராக இருப்பதற்கும், போலீஸ்காரர் வந்து முரடனைத் தள்ளிக் கொண்டு போவதற்கும் சரியாக இருந்து விட்டது.

''வண்டியில் எல்லாரும் ஏறுங்க'' கண்டக்டர் உரக்கக் கத்தினார்.

''ஷண்பகா! இன்னுமா என்மேல் கோபம் தீரலை?'' கதிரேசன் அவளருகில் மென்மையான குரலில் கேட்டான்.

அதற்குமேல் ஷண்பகாவால் அடக்க முடிய வில்லை. அவள் மனம் உடைந்து போனாள்.

எத்தனையோ பேர் அவளை அலட்சியம் செய்தார்கள். அசட்டை செய்தார்கள். ஆனால் அவன் அவளது அலட்சியத்தைக் கவனிக்காமல் புறக்கணிப்பை லட்சியம் செய்யாமல் அவளுக்காக, நெடுந்துணையாக நின்று கொண்டிருக்கிறான்.

''எ... எ... எ... என்னை மன்னிச்சுடுங்க!'' விசும்பலுடன் அவனருகில் வந்து நின்றாள்.

''உ... உ...உங்களை நான் புரிஞ்சுக்காம இ... இல்லே...''

''ஸ்! அழக் கூடாது இனி நான் உன் அருகே இருக்கும்போது அழவே கூடாது. ம்! புறப்படு! அப்பா கிட்ட விவரமாப் பேசுவோம், ஷண்பகா! இதோ என்னைப் பார் கொஞ்சம் சிரி'' என்றான் கதிரேசன்.

இப்போது அருகருகே உட்கார்ந்து அவர்கள் இருவரும் பயணம் செய்தார்கள்.

திருமண வீட்டில் பரபரப்பு களை கட்டியது. மங்கள இசை முழங்கிக் கொண்டிருந்தது. சுந்தரம் மாமாவும் சரோஜாவும் காலில் சக்கரமும் கைகளில் இறக்கையும் கட்டிக் கொண்டது போல் பறந்தார்கள்.

யாருக்கும் நிற்க நேரமில்லை!

★ ★ ★

# உரிமை உறங்குகிறது!

## 1

**மா**லை வேளையின் மஞ்சள் வெயில் மங்கிக் கொண்டு வருவதைக் கௌரி கவனித்தாள்.

எத்தனையாவது தடவை? அவளுக்கே கணக்கு விட்டுப் போயிற்று. உள்ளுக்கும் வாயிலுக்கும் நடந்து நடந்து அவள் கால்கள் ஒய்ந்து போயின. இன்னும் தேவநாதனைக் காணவில்லை.

வழக்கம் போல சமையலை முடித்ததும், முகத்தைக் கழுவிப் பொட்டிட்டு தலையை வாரி முடித்துக் கொண்டாள். அலமாரியில் அடுக்கி வைத்திருந்த சுத்தமான தொரு நூல் சேலையை எடுத்து உடுத்திக் கொண்டாள். பூக்காரியிடம் வாங்கிய கதம்பச் சரத்தில் பாதியைப் பராசக்தி படத்திற்கு சாத்திவிட்டு மீதியைக் கூந்தலில் சுற்றிக் கொண்டாள்.

கண்ணாடியில் ஒருமுறை தன்னை கவனித்துக் கொண்டு முன்னறைப் பக்கம் வந்தாள்.

குழந்தை ரேவதி பாடப் புத்தகத்தைத் தரைமீது வீசிப் போட்டுவிட்டு வாசலில் விளையாட ஒடி விட்டாள்.

நடையில், மகன் சுகுமார் கழற்றிப் போட்டிருந்த பாத அணிகள் மூலைக்கொன்றாகக் கிடந்தன.

வீட்டைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்துக் கொள்ளவேண்டும் என்றதொரு ஆவேசமான ஆசை அவளுக்கு எப்பொழுதுமே உண்டு. பரபரப்புடன் தரையில் கிடந்த புத்தகத்தை எடுத்துத் தட்டி, மூடி மேஜைமீது வைத்தாள். பாத அணிகளை ஒன்றாகச் சேர்த்து அதற்கென்று வீட்டில் சுவரோடு பதித்துக் கட்டியிருந்த அலமாரியில் வைத்து மூடினாள்.

கொஞ்ச நாட்களாகக் குழந்தைகளும் அத்துமீறி நடக்கத் தொடங்கியிருந்ததைக் கவனிக்கத்தான் செய்தாள்.

வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

கேட்டைப் பிடித்துக் கொண்டு முன்னும் பின்னுமாக ஆடிக் கொண்டிருந்தாள் ரேவதி. தோட்டத்திலே ஒரு பக்கம் பம்பரம்விட்டு விளையாடிக் கொண்டிருந்தான் சுகுமார்.

பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததுமே குழந்தைகள் பாத அணிகளைக் கழற்றிப் பத்திரமாக வைத்துவிட்டு குளியல் அறையில் கைகால்களைக் கழுவிக்கொண்டு உடை மாற்றிக்கொண்டுதான் டிபன் சாப்பிட வர வேண்டும். கொஞ்சம் நேரம் விளையாடிவிட்டு உள்ளே வந்து மறுபடியும் கை கால்களைக் கழுவிக் கொண்டு, வீட்டுப் பாடங்களை கவனமாகப் படிக்க வேண்டும். அப்பா வேலையிலிருந்து திரும்பி வந்து, உடைமாற்றிக் கொண்டு சாப்பிடத் தயாரான பிறகுதான் குழந்தைகள் சாப்பிட வரவேண்டும். பின்னர் எட்டு மணிவரை படித்துவிட்டுத் தூங்க வேண்டும்.



அப்பா வீட்டிலிருக்கும் போது சளசளவென்று பேசி சப்தமிட்டு அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது.

இப்படி கண்டிப்பும் கறாருமாக வளர்க்கப்பட்ட குழந்தைகள், அவள் பலமுறை உள்ளே வரச்சொல்லிக் கூப்பிட்டும் கேட்காததுபோல் விளையாடிக் கொண்டிருந்தனர். வேளை தவறி சாப்பிட்டனர். இரவு உறங்காது வெகு நேரம் விழித்துக் கொண்டிருந்தனர்.

எண்ணெயிட்ட சக்கரம் போல ஒழுங்காக இயங்கிக் கொண்டிருந்த குடும்பத்தில் இப்போது எல்லாமே தாறுமாறாகிக் கொண்டு வந்தன.

அவள் சரியாகச் சாப்பிட்டு தூங்கி, ஒரு மாத காலமாயிற்று. தேவநாதன் வழக்கத்திற்கு மாறாக தினமும் நேரம் கழித்து வரத் தொடங்கியதுதான் இவை எல்லாவற்றிற்கும் காரணம்.

ஆனாலும் அவள் ஒரு நாள் கூட அதைப் பற்றி அறிய முயலவில்லை. ஒன்பது வருஷ தாம்பத்திய வாழ்க்கையில் அவள் என்றுமே அவனிடம் சில விஷயங்களைக் கேட்டதில்லை. ''இன்னிக்கு ஏன் இத்தனை நாழி?'' என்று ஒரு நாளும் குறுக்கு விசாரணை செய்ததில்லை. அவனும் ஒரு நாளும் வேளை தவறி வீட்டிற்கு வந்தது இல்லை.

வேலை முடிந்ததும் ஒரு கணம்கூட அவன் அலுவலகத்தில் வீணே நண்பர்களுடன் பேசிக்கொண்டு நிற்க மாட்டான். போக்குவரத்து நெரிசலில் நீந்திக் கொண்டு ஒரே மூச்சாக ஸ்கூட்டரில் வீட்டுக்குப் பறந்து வந்து விடுவான்.

களைத்துச் சோர்ந்து வீடு வரும் கணவனை வாயிலில் நின்றுகொண்டு, சிரித்தமுகத்துடன் வரவேற்க அவளுக்கும் கொள்ளை ஆசை.

''சுகுமார்! அப்பாவுடைய ப்ரீப்கேசை வாங்கி உள்ளே கொண்டு வை. நீ பெரிய பையனாயிட்டியே... அப்பாவுக்கு உதவ வேண்டாமா?'' தனது ஏழு வயது மகனுக்கு உத்தரவிடுவாள்.

''ரேவதி கண்ணு! அப்பாவுக்குக் கை துடைக்க துவாலை எடுத்துக் கொண்டு கொடு'' ஐந்து வயது மகளுக்கு ஆணையிடுவாள்.

பையில் கொண்டுவந்த சாக்லெட் கட்டியின் வெள்ளிக் காகிதத்தை உரித்துவிட்டு குழந்தைகளின் வாயில் அடைத்து அவர்களை இருபக்கமும் வாரி அணைத்துக் கொண்டு அவன் உள்ளே வருவதைக் கண்டு பெருமையில் பூரித்தாலும், ''போதும்! செல்லம் கொடுத்து அவங்களைக் கெடுக்காதிங்க'' என்று அன்போடு கணவனை அதட்டுவாள்.

''உங்களுக்குப் பிடிச்ச பறங்கிக்காய் பால்கூட்டு. நம்ம தோட்டத்திலே காய்ச்சது'' ஆசையோடு பேசிக் கொண்டே அவர்கள் மூவருக்கும் உணவு பரிமாறுவாள்.

''பார்த்தீங்களா உங்க மகளை? அப்பாவை அப்படியே கொண்டு வந்திருக்காள். உணவுப் பழக்க வழக்கங்களிலும் உங்க அச்சுதான் போங்க'' கணவனை மகிழ்ச்சியுடன் பரிகசிப்பாள்.

''உன் மகன் மட்டும் என்ன விதத்தில் குறைச்சல்? அப்படியே உன் அச்சு!'' சாப்பாட்டினின்று நிமிர்ந்து தேவநாதன் அவளைக் கேலி செய்துவிட்டால் போதும்,



உலகத்தையே ஒரு தட்டில் வைத்துத் தன்னிடம் கொடுத்து விட்டது போலப் பூரிப்பில் பொங்கிப் போவாள்.

''என் ஆசைக்கு ஒரு மகன், உங்கள் அன்புக்கு ஒரு மகள். போதும் குந்தைகள் நமக்கு.''

இப்படித் திட்டமிட்டுக் கொண்ட குடும்பம் அவர்களுடையது.

ஆனாலும், எத்தனை நிறைவுகளைக் கொண்ட குடும்பம்!

ஆமாம், இப்போது என்ன வந்துவிட்டது? அவர்களது நிறைவான வாழ்க்கையைக் கண்டு யாரோ கண்போட்டு விட்டது போல?

தேவநாதனிடம் ஏன் இந்த மனமாற்றம்?

நேரம் கழித்து வீட்டுக்கு வருவதைப் பற்றிக்கூட அவள் பாராட்டவில்லை.

முன் போலக் குழந்தைகளிடம் கலகலப்பாகப் பேசுவதை அவன் நிறுத்திவிட்டிருந்தான். அவன் முகத்தில் தெரிந்த கடுமையைக் கண்டு வாய்திறந்து எதுவுமே கேட்க, அவளுக்கும் அச்சமாக இருந்தது.

கணவனது விசித்திரப் போக்கில் உருவான உணர்வுகளின் இறுக்கத்திலே அவளுக்கு மண்டையே வெடித்து விடும் போன்றதொரு வேதனை.

என்ன நேர்ந்துவிட்டது? ஏன் இப்படி இருக்கிறார்? அவளிடம் சொல்லித் தமது கவலைகளைப் பகிர்ந்து கொள்ள ஏன் மறுக்கிறார்? ஏன்? ஏன்? ஏன்?

விடை காண முடியாத கேள்வி சதா நெஞ்சைக் குடைய குழந்தைகளின் பொருட்டுத் தன் உணர்வுகளை அடக்கிக்கொண்டு வளைய வந்துகொண்டிருந்தாள்.

மாலை மங்கி இருள் வேகமாகக் கப்பிக்கொண்டு வந்தது. தெரு விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின.

தெருவின் மறுகோடிவரை கண்களால் துழாவினாள். ஒரு வேளை ஸ்கூட்டர் ரிப்பேராகி விட்டதோ? பஸ்ஸில் வருகிறாரோ?

சிறிது நேரம் கேட் அருகில் நின்று பார்த்தாள். தேவநாதனைக் காணவில்லை.

''அம்மா, பசிக்கிறது!''

ரேவதி, புடவைத் தலைப்பை மெல்ல இழுத்த போதுதான் நினைப்பு வந்தது.

ரேவதி அன்று மாலை டிபன்கூட சாப்பிடவில்லை.

உப்புமா அவளுக்குப் பிடிக்காத உணவு. மேஜை மேல் அம்மா கொண்டு வந்து வைத்த தட்டைக் கண்டதுமே முகத்தைச் சுளித்துக்கொண்டு எழுந்து ஓடி விட்டாள் குழந்தை.

கௌரிக்கு இருந்த மனநிலையில் ஓங்கி அவள் முதுகில் ஒரு அறை வைக்க வேண்டும் போன்ற எரிச்சல். அடக்கிக் கொண்டாள். ஒன்பது ஆண்டு வாழ்க்கையிலே அவளுக்கும் தேவநாதனுக்கும் இடையே பலத்த மனத்தாங்கல் ஏதும் ஏற்பட்டதேயில்லை. சண்டையே இல்லாத ஒரு வாழ்க்கை என்றும் சொல்லி விட முடியாது.

அவர்களிடையே சிறு பூசல்கள் அவ்வப்போது ஏற்பட்டதுண்டு. எல்லாம் குழந்தைகளைப் பற்றித்தான்.

ரேவதி, தேவநாதனின் கண்ணின் கருமணிக்கு ஒப்பானவள். உயிரையே அந்தக் குழந்தைமீது வைத்திருந்தான் என்று கூடச் சொல்லலாம்.



வீட்டுக்குள் நுழையும்முன்பே, 'ரேவதி கண்ணு' என்று கூப்பிட்டுக் கொண்டே வரும் பழக்கம்.

சாப்பாட்டுக்கு முரண்டு செய்த ரேவதிமீது எரிச்சல் பட்டுக்கொண்டு ஒருமுறை அடித்துவிட்டாள் கௌரி. மகளை வாரி எடுத்து அணைத்துக்கொண்டு சமாதானப் படுத்திய தேவநாதன் மிகவும் வெகுண்டு போய் விட்டான்.

''பெண் குழந்தைக்கு அத்தனை பிடிவாதமா?'' என்று பற்களைக் கடித்த கௌரியைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தான்.

''பிடிவாதத்துக்குக்கூட பெண், ஆண் என்று வித்தியாசம் பார்க்கணுமா? பச்சைக் குழந்தையை முரட்டுத்தனமா அடிக்கிறியே. படக்கூடாத இடத்தில் பட்டு விட்டால்...?''

''எனக்கு அத்தனை விவேகம் இல்லையா என்ன?''

''ஆத்திரக்காரங்களுக்கு புத்தி மழுங்கிப் போயிடுமே?''

''உங்களுக்கு ஆத்திரமே வராதாக்கும்?''

''ரேவதி மேலே இனி நீ கை வச்சே, எனக்குக் கெட்ட கோபம் வந்துடும்'' எரிச்சலோடு எச்சரித்தான் அவன்.

''இப்படி நீங்க குறுக்கே பரிஞ்சுண்டு வந்தா குழந்தைகளுக்கு என் மேலே மதிப்பே இல்லாமே போயிடும்.''

''அடியும் உதையும் கொடுத்து அவங்க கிட்டே யிருந்து மதிப்பை வாங்க முடியாது. சின்ன வயசிலே உனக்கு நேர்ந்த அனுபவத்தை ஏன் நினைச்சுப் பார்க்க மாட்டேங்குறே?''

ஓங்கிச் சாட்டையால் அடித்ததுபோல அந்த வார்த்தைகள் தந்த வேதனையில் அவள் துவண்டு போனாள். அவளுக்கு அழுகை பொங்கிக்கொண்டு வந்தது. மேலே பேசாமல் சட்டென்று உள்ளே போய்விட்டாள்.

ஆசைக் கணவனுடன் முகம் கொடுத்துப் பேச மனமின்றி மௌனமாக மூன்று நாட்களை ஓட்டி விட்டாள்.

அவனுக்கும் கோபந்தான். அவனும் பேச முற்படவில்லை. ஒரே வீட்டில் அந்நியர்களைப்போல இருவரும் பேச்சு வார்த்தையின்றி கோபத்தை நீடித்து வைத்துக்கொண்ட முதல் பெரிய சண்டை அது.

முடிவில் அவன்தான் தோல்வியுற்றான்.

அன்று மாலையில் வீட்டுக்கு வந்தபோது குழந்தைகளுக்கு சாக்லெட்டுடன், அவளுக்கு கொஞ்சம் மல்லிகை பூவும் வாங்கிக் கொண்டு வந்திருந்தான்.

''ரேவதி, அம்மா எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான்.

அலுவலக உடைகளைக் களைந்து விட்டு, லுங்கி - பனியனில் சென்று அவன் அடுப்பருகே காபியை சூடு படுத்தினான். அதைப் பார்த்தும் பார்க்காததுபோல அவள் கட்டிலில் திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

''தலைவலி இப்போ எப்படி இருக்கு?'' சூடாக டம்ளரில் காபியுடன் அவள் அருகே படுக்கை விளிம்பில் வந்து அவன் உட்கார்ந்தபோது அவளுக்கு சிரிப்பு வந்து விட்டது.



''தலைவலின்னு யார் சொன்னது?'' சிரிப்பை அடக்கிக்கொண்டு போலியான கோபத்தில் முணு முணுத்தாள்.

அருகிலிருந்த முக்காலிமீது காபி டம்ளரை வைத்து விட்டு, அவளை வாரி எடுத்து உட்கார வைத்தான்.

''உனக்கு உடம்புக்கு முடியாட்டாதான், நான் வந்தது கூடத் தெரியாமெ படுத்திருப்பே. அதனாலேதான் தலைவலின்னு நினைச்சேன். இப்ப புரியுது, இது மனவலின்னு'' செல்லமாக அவள் கன்னத்தை வருடினான்.

குபீரென்று அவள் சிரித்து விட்டாள்.

''அப்பாடா இந்தச் சிரிப்பைப் பார்க்க மூணு நாளாச்சே'' கொஞ்சிக் கொண்டே தான் கொண்டு வந்த மலர்ச் சரத்தை அவள் கூந்தலில் சூட்டினான்.

''நீ வாசலில் வந்து நிக்காட்டா என் வாழ்க்கையே அஸ்தமிச்சு போயிட்டது போல ஒரு திகைப்பு ஏற்பட்டு விடுது. கௌரி, உனக்கு என் மேலே அத்தனை கோபமா? நாமிருவரும் சின்ன விஷயங்களுக்கு இப்படி மனஸ்தாபப்படுவது சரியா? எழுந்து முகத்தைக் கழுவிப் பொட்டு வச்சிட்டு சாப்பாடு போடு.''

''நீங்களும் கோபமா இருக்கிங்களே - அப்படி நான் என்ன சொல்லிவிட்டேன்? பழைய கதைகளை மறக்க விரும்பறேன்னு தெரிஞ்சும் நீங்க அதைக் கிண்டி...''

திடீரென்று அவளது கண்கள் கலங்கின. அவனது தோள்மீது முகத்தை வைத்துக்கொண்டு விம்மினாள்.

அவன் துடிதுடித்துப் போனான்.

''மன்னிச்சுக்கோ கௌரி. தெரியாம, சட்டுனு வாயில் வந்ததைச் சொல்லிட்டேன். அழாதே கௌரி. நம்

வாழ்க்கையிலே அழுகைக்கே இடம் இருக்கக் கூடாது. வேற எந்த வகையிலும் உன்னை நான் இதுவரை சிறுமைப் படுத்தியிருக்கேனா? யோசிச்சுப்பார்.''

'இல்லை' என்று அவள் தலையை அசைத்தாள். கன்னத்தில் வழிந்த அவளது கண்ணீரைத் துடைத்து விட்டு அவன் தன் நெஞ்சோடு அவளை அணைத்துக் கொண்டபோது, அவனது பலம் பொருந்திய கரங்களின் அணைப்பிலே கோபத்தை மறந்து போனாள்.

தேவநாதன் எத்தனை அன்பான கணவன்! அவள் மிகவும் கொடுத்து வைத்தவள். இளமைப் பருவத்திலே அவள் சின்னம்மாவிடம் பட்ட கொடுமைகளுக்கெல்லாம் முடிவுபோல அவனது ஆதரவு - புண்பட்ட மனதுக்கு மருந்து போல, அவனது பேச்சுக்கள் எல்லாம் துணை செய்ய இருக்கையில், அந்த மனத்தாங்கலை அவள் நீடிப்பது முறையல்லவே.

''வாங்க... குழந்தைகள் உங்களுக்காக சாப்பிடக் காத்திருக்காங்க. அவங்களுக்குப் புரிஞ்சு கொள்ற வயசாயிடுச்சு. இனிமேலே நான் மறந்து போய்க்கூட அவங்க முன்னால் உங்ககிட்ட சண்டை போடவே மாட்டேன். சரிதானே?'' மெல்லச் சிரித்தாள்.

''அவர்கள் பின்னால்கூட என்னோடு சண்டை போடக் கூடாது. தெரிஞ்சுக்கோ'' விளையாட்டாகச் சொல்லிவிட்டு, மறுபடியும் அவளை இருக்க அணைத்துக் கொண்டான்.

இப்படி அவள்மீது அவனுக்கு வற்றாத காதல். அவளுக்கும் அவன்மீது உயிர்.



நெருக்கமான அன்புடன் இணைந்து வாழ்ந்து கொண்டிருந்த அவர்கள் இடையே இப்போது என்ன வந்துவிட்டது.

அவள் என்ன தவறு செய்துவிட்டாள்? தேவநாதன் பேசுவதையே நிறுத்திக்கொண்டு விட்டான்.

அவளாக வலிய பேச்சுக் கொடுத்தபோதுகூடச் சட்டென்று பதில் கொடுக்காது, என்னவோ நினைத்துக் கொண்டு, எங்கேயோ பார்த்துக்கொண்டு பித்துப் பிடித்தவன்போல் காணப்படுவதன் காரணம்? சில சமயங்களில் அவளைக் கோபமாகப் பார்ப்பதன் அர்த்தம்!... ஐயோ! ஒன்றுமே புரியவில்லை! விரைவில் அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போல, இதென்ன குழப்பம்?

''அப்பா இன்னும் வரலை. எனக்குச் சாப்பாடு போடுங்கோ. ரொம்ப பசிக்குது'' புடவைத் தலைப்பை மறுபடியும் பிடித்து இழுத்தாள் ரேவதி.

நினைவினின்று திடீரென்று விழித்துக்கொண்டு கௌரி உள்ளே வந்தாள்.

ஊஹூம்! அவள் கவலைப்படுவதைக் குழந்தைகள் தெரிந்து கொள்ளக்கூடாது.

வீட்டிலே பெற்றோர்களின் உறவில் விரிசல் கண்டு விட்டதை இளம்பருவத்து குழந்தைகள் புரிந்துகொள்வது பெரும் தவறு. அவர்களது உணர்வுகளை அது மிகவும் பாதித்துவிடும். அவர்களது குழந்தைகள் ஆரோக்கியமாக வளரவேண்டும். எந்தவிதமான சங்கடமும் சஞ்சலமும் அவர்களது பிஞ்சு உள்ளங்களைக் குழப்பிவிடக் கூடாது.

''அப்பாவுக்கு இப்பவெல்லாம் ஆபீசிலே ரொம்ப வேலை.''

''ஆமாம் அம்மா. அதனாலேதான் அவருக்கு முன் போல எங்களுக்கு மிட்டாய் ஏதும் வாங்கி வர முடிவதில்லை'' சுகுமார் அனுதாபப்பட்டான்.

குழந்தைகள் சாப்பிட்டுவிட்டு, வீட்டுப் பாடங்களைப் படித்துவிட்டுத் தூங்கச் சென்றுவிட்டனர். இன்னமும், தேவநாதனைக் காணவில்லை. தெருவில் எங்கேயோ ஸ்கூட்டர் சத்தம் கேட்டபோதெல்லாம் வாயிலுக்கு ஓடி, கதவைத் திறந்து, வெளியே எட்டிப் பார்த்துச் சோர்ந்து போனாள்.

நேரம் அதிகமாகிவிட்டது, இனி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து நிற்பதுகூட அபாயம்.

அவளுக்கு இந்த விஷயத்தில் அதிக அனுபவமாயிற்றே.

ஓர் இளம்பெண் தன்னந்தனியே தெருவில் நடக்க முடியாதபடி நாட்டிலே அபாயங்கள் மலிந்து கிடக்கின்றன என்பதில் அவள் அனுபவப்பட்டவளா யிற்றே!

கதவை மூடிக்கொண்டு உள்ளே வந்தாள்.

கடந்த காலத்திய அந்த நினைவு நெஞ்சிலே எழுந்த போது... அப்பொழுதுதான் நடந்தது போன்ற ஒரு பயங்கர உணர்விலே மார்பு படபடக்க சுவர்மீது ஒண்டிக் கொண்டு, படுக்கைமீது உட்கார்ந்தாள். குப்பென்று உடல் முழுவதும் வியர்வை கொப்பளித்துக் கொட்டியது.

கனவில் நினைத்தால்கூட அந்தச் சம்பவம் அவளுக்கு இன்னமும் அச்சத்தைக் கொடுத்தது, உடலையும் உள்ளத்தையும் நடுநடுங்கச் செய்தது.



## 2

கர்நாடக மாநிலத்தில் யெஷ்வந்த்பூரில் உள்ள காகிதப் பெட்டித் தொழிற்சாலையில் கௌரியின் தந்தை சோமசுந்தரம் ஒரு தொழிலாளி. மல்லேஸ்வரத்தில் ஒரு பழைய காலத்து வீட்டில் குடியிருப்பு. வளைந்து வளைந்து ஏறி இறங்கிச் செல்லும் தெருக்களைத் தாண்டி பெண்கள் பள்ளி ஒன்றில் அவள் பத்தாவது வரை படித்திருந்தாள். 'தந்தையோடு கல்விபோம்' என்பார்கள். ஆனால் அவளுக்கு அவளைப் பெற்ற தாயோடு கல்வியும் அன்பும் ஒரேயடியாகப் போய்விட்டன.

அவளுக்குத்தான் தாயார் இல்லை. ஆனால் அப்பாவுக்கு அந்த இடத்தை நிரப்ப ஒருத்தி தேவைப் பட்டாள். சின்னம்மாள் சௌபாக்கியா, கர்நாட மாநிலத்திலேயே பிறந்து வளர்ந்த தமிழ்ப் பெண்.

பெயரில் இருந்த சௌபாக்கியம், சின்னம்மாவின் மனத்தில் கிடையாது, கர்நாடகமே அவளது உரிமை என்ற தோரணையில் அடிக்கடி மற்ற மாநிலத்தவர்களை அவள் இறக்கு இறக்கு என்று இறக்குவாள். அவளைப் பொருத்தவரை அவள் உள்ளூர்வாசிதான். கௌரியும் அவள் தந்தையும் அண்டிப் பிழைக்க வந்த வெளியூர் ஆசாமிகள்.

மூத்தாளின் மகளை அவள் கட்டோடு வெறுத்தாள். ஒடிசலாக உயரமாக இளமையின் பூரிப்பில் தாழம்பூ நிறத்திலே வளர்ந்து நின்ற கௌரியைப் பார்த்தபோதெல்லாம் அவள் வயிறு எரிந்தது.

அவளுக்கும் பிறந்தனவே மூன்று பெண் குழந்தைகள், அடுக்குப் படிகள்போல். ஒன்றாவது அப்பனைக்

கொண்டு கௌரியைப்போல் மூக்கும் முழியுமாக லட்சணமாகப் பிறந்து தொலைந்திருக்கக் கூடாதா?

பொறாமையால் குமுறிக் கொந்தளித்த சௌபாக்கியத்திடம் கௌரியின் இளமை படாதபாடு பட்டது. கைப்பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று எதற்கெடுத்தாலும் சின்னம்மா அவளைக் கடுமையாகத் தண்டித்தாள். கொடுமையான வார்த்தைகளால் சுட்டாள். சிறுமைப்படுத்தினாள். பள்ளிக்கூடப் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டுச் சமையல் பொறுப்பைச் சின்ன வயதிலே அவள் தலையில் சுமத்தினாள்.

பள்ளிக்கூடத் தோழி நிர்மலா ஒருத்தியிடந்தான் கஷ்டங்களைச் சொல்லி ஆறுதல் பெற முடிந்தது. அந்த நிர்மலாவின் தந்தைக்கு மாற்றலாகி விட்டது என்ற செய்தி கேட்டு அதிர்ந்து போனாள் கௌரி.

தோழியை இனி எப்போது பார்க்கப் போகிறோம்? கஷ்டங்களைச் சொல்லி அழுது ஆறுதல் பெற இனி அவளுக்கு யார் இருக்கிறார்கள்? ஊருக்குப் போகுமுன் சொல்லிக்கொண்டு போகவந்த நிர்மலா, தாங்கள் சென்னையில் வசிக்கப் போகும் முகவரியை ரகசியமாக ஒரு கடிதத் துண்டில் எழுதிக் கொடுத்தாள். 'சமயம் கிடைக்கும் போது கடிதம் போடு. சந்தர்ப்பம் கிடைத்தால் சென்னைக்கு வா. எங்கள் வீட்டில் தங்கிக் கொள்ளலாம்' என்றும் சொல்லிவிட்டுப் போனாள்.

இங்குள்ள பள்ளிக் கூடத்திற்கே போகக் கூடாது என்று நிறுத்திவிட்ட சின்னம்மா, அவளை சென்னைக்கா அனுப்பப் போகிறாள்.

அப்பா திடீரென்று உடம்புக்கு முடியாமல் படுத்து விட்டார். ரத்த அழுத்தம் அதிகமாக - பாரிசவாயுவினால்



பாதிக்கப்பட்டுவிட்டார். கையும் காலும் விளங்காத நிலை. தொழிற்சாலை, சங்கம், முதலாளி வகையில் இரக்கத்தின் பேரில் கிடைத்த சொற்பத் தொகை யாவற்றையும் சின்னம்மா தன் பெயரில் ஆக்கிக் கொண்டு விட்டாள்.

படுக்கையில் அப்பா. அதிகாரம் சின்னம்மா கையில். கௌரி என்ன செய்யமுடியும்? அவளுடைய உயிர்த்தோழி நிர்மலா எழுதிய கடிதங்களுக்கு பதில் எழுத முடியாமல் மௌனமாகக் கண்ணீர் உகுத்தாள். வறுமையும் கொடுமையும் அதிகரித்தன. சின்னம்மா சதா அழுது புலம்பி ஆர்ப்பாட்டங்கள் செய்து கொண் டிருந்தாள்.

''ரெண்டாந்தாரமா வாழ்க்கைப் பட்டது போதாதுன்னு இவளையும் ஒரு சுமையா என் தலையில் கட்டிட்டு, காலும் கையுமில்லாம மரம்போல சாஞ்சு கிடக்காரே என் புருஷன்! வயசுப் பெண்ணை வீட்டுல வச்சுட்டு நான் என்ன செய்வேன்?''

அனுதாபம் காட்ட சின்னம்மாவுக்கு நிறைய உறவினர்கள் இருந்தனர். அவர்களில் பலர் அடிக்கடி அவர்களது வீட்டுக்கு வந்து போவது வழக்கம் அப்படித்தான் வந்து போய்க் கொண்டிருந்தார் குடும்பத்தில் அக்கறை கொண்ட அனுதாபி கோவிந்தன். வயதில் பெரியவர். அப்பாவைப் போல என்று கௌரி அவரிடம் மரியாதை வைத்திருந்தாள். ஆனால் நாளாவட்டத்தில் அவர் பேச்சு - சிரிப்பு - நடவடிக்கை எதுவுமே அவளுக்கு ஒழுங்காகப் படவில்லை.

ஒரு நாள் சின்னம்மா அந்த முடிவைச் சொன்ன போது கௌரி திடுக்கிட்டுப் போய்விட்டாள்.

இந்தக் கிழவனுக்கு இப்படி ஓர் ஆசையா? அட கடவுளே!

''உங்கப்பா உதவியில்லாம படுத்திட்டார். நாதனில்லாத குடும்பம். இனிமே நம்ம மானம் மரியாதையைக் காப்பாத்திக்கணும்னா உனக்கு ஒரு கல்யாணம் நடந்தாகணும். மாப்பிள்ளையைத் தேடி அலையவாணாம். அந்தச் சிரமம் உனக்கு ஏன்னு, என் அண்ணா கோவிந்தன் தானே உன்னைக் கட்டிக்கிறதாக ஒப்புக் கொண்டிருக்கார். எனக்கு ஒண்ணுவிட்ட அண்ணன் என்கிற உறவு வேறே. வீட்டுக்கு மாப்பிள்ளையா வந்துட்டா ஆதரவா இருப்பார்.''

கெளரி விக்கித்துப் போனாள். கிழவனுக்கு மூன்றாம் தாரம் கேட்கிறதா? ஆதரவு வேண்டுமானால் வேறு நல்ல இளைஞனாகப் பார்த்து அவளைக் கல்யாணம் செய்து கொடுப்பதற்கென்ன?... மனம் ஓலமிட்டது.

''என்னடி பேசாம இருக்கே? சொன்ன பேச்சைக் கேட்டா உருப்படுவே. இந்தப் பணத்தை வச்சுக்கிட்டு, கடையிலே போயி உனக்குப் பிடிச்ச ரிப்பன், வளையல் எல்லாம் வாங்கிக்கச் சொன்னார் அண்ணா. ஏடா கூடமா ஏதாவது செஞ்சே கழுத்தை முறிச்சிடுவேன்.''

உறுமிய சின்னம்மா, தன் இடுப்புச் சுருக்குப் பையிலிருந்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றை உருவிக் கொடுத்தாள். பையின் வயிறு உப்பியிருந்தது. அதற்குள் கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுக்கள். கிழவன் கோவிந்தன் கெளரியைத் தனக்கு மனைவியாக்கிக் கொள்ள சின்னம்மாவிடம் கொட்டிக் கொடுத்த லஞ்சம்.



ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது கெளரிக்கு. சின்னம்மாவிடம் எதிர்த்துப் பேசத் துணிவில்லை. உதடுகள் துடிக்க, நெஞ்சம் பதற அந்த நூறு ரூபாய் நோட்டை வாங்கி, தன் மணிபர்சுக்குள் வைத்துக் கொண்டாள்.

''பணம் கிடைச்சுட்டதுன்னு எங்கேயாச்சும் புறப்பட்டு ஓடிடலாம்னு கனவு காணாதே. பலி வச்சுடுவேன். அப்படி நீ எங்களுக்கு அவமானம் ஏற்படுத்த நினைச்சே பிறகு நீ செத்துட்டேன்னு தலை முழுகிடுவோம். ஏன்னா நாங்க மானம் மரியாதை பார்க்கிற குடும்பம். உங்க மாதிரி இல்லே'' கோபத்தைக் கக்கிவிட்டு உள்ளே சென்று விட்டாள் சின்னம்மா.

பொங்கி வந்த அழுகையை கெளரி சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

இப்போது அழுது என்ன லாபம்? இந்த ஆபத்திலிருந்து தப்பிக்க ஒரு வழி தேட வேண்டும். கட்டிலில் கிடக்கும் அப்பாவினால் எந்தவித உதவியும் செய்ய முடியாது.

பணம் கொடுத்துவிட்ட காரணத்தைக் காட்டி கோவிந்தனும் இனி அடிக்கடி அவளை இம்சிப்பார். அதற்கு முன்...?

கெளரி இரவும் பகலுமாக இடைவிடாது சிந்தித்தாள்.

அவளது மௌனத்தைப் பார்த்து சின்னம்மாகூட ஏமாந்துதான் போனாள். கல்யாணத்தை ஏதேனும் ஒரு கோவிலில் வைத்த நடத்துவது என்று பேசி முடித்தாகி விட்டது. புது மாப்பிள்ளை என்ற தோரணையில்

கோவிந்தன் அடிக்கடி வீட்டை வளைய வரத் தொடங்கினார்.

ஒரு நாள் மாலை கல்யாணச் சாமான்கள் வாங்க சின்னம்மாவும் கோவிந்தனும் கடைக்குப் புறப்பட்டிருந்தனர். சந்தர்ப்பத்தைச் சரிவர பயன்படுத்திக் கொண்டாள் கௌரி. சின்னம்மா கொடுத்த பணத்தை சில்லறையாக மாற்றி வைத்துக் கொண்டிருந்தாள். அவசரமாக ஒரு துணிப்பையில் மாற்று உடையை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

நல்ல வேளை! அப்பா தூக்கிக் கொண்டிருந்தார். முன் பக்கக் கதவை மூடிவிட்டு, கீழே இறங்கினாள். மாலை இருள் நன்கு கவியத் தொடங்கியிருந்தது. நேராக பஸ் நிலையத்துக்குப் போனால் அங்கே அருகில் உள்ள கடைகளில் எங்கேயாவது சின்னம்மாவும் கோவிந்தனும் இருந்து விட்டால்?

திகிலுடன் மெயின் ரோடு அருகில் வந்தவள் கண்களில் ஓர் 'ஆட்டோ' தென்பட்டது.

வேகமாக அதை நிறுத்தி, அதில் ஏறிக்கொண்டாள், ''சிடி ஸ்டேஷனுக்கு போகணும்.''

ஆட்டோ, பெங்களூர் சிடி ஸ்டேஷனில் வந்து நின்ற பிறகும் அவளது படபடப்பு அடங்கவில்லை. அடுத்த தெருவுக்கு விளையாடப் போன தங்கைகள் யாராவது அவளைப் பார்த்திருப்பார்களோ?

ஆட்டோவுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு மணியைப் பார்த்தாள் இரவு மணி எட்டு.

எப்படியாவது சென்னைக்கு போய்ச் சேர்ந்துவிட வேண்டும். நிர்மலா வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து



விட்டால் அவளுக்குக் கட்டாயம் அடைக்கலம் கிடைத்துவிடும். கோவிந்தனுக்கு மனைவியாகும் பயங்கரத்திலிருந்து தப்பிவிடலாம். சின்னம்மாவின் பிடியிலிருந்தும் விடுதலை!

டிக்கெட் விற்கும் க்யூவில் அவசரமாகப் போய் நின்று கொண்டாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். தெரிந்த முகங்களைக் காணோம்.

ரிசர்வேஷன் இல்லாத டிக்கட், சரசரவென்று பிளாட்பாரத்திற்கு வந்தாள். ரயில் புறப்பட பத்து மணிக்கு மேலாகுமே? அதுவரை யார் கண்ணிலும் படாமல் எப்படி இருப்பது?

இந்நேரம் சின்னம்மா அவளைத் தேடி அலுத்துப் போயிருப்பாள். ஒருவேளை ரயில் நிலையத்துக்கு வந்து விட்டால்? திக்கென்ற உணர்வில் தவித்துப் போனாள் கௌரி.

''பெங்களூர் மெயில் பத்தே காலுக்கா? பத்து பத்துக்கா?'' குழைந்தது ஒரு குரல்.

தூக்கிவாரிப் போட கௌரி நிமிர்ந்தாள். மிக அருகில் நடுத்தர வயதான ஒரு பெண்மணி நின்றிருந்தாள். உயரமாக, பருமனாகத் தெரிந்தாள். வசதியானவள் போலத் தென்பட்டாள். காதில் வைரம் பள பளக்க, கையில் ஒரு பெரிய டம்பப் பையைப் பிடித்துக் கொண்டிருந்தாள். கழுத்தில் புரண்ட கூந்தலை 'கிளப்' போட்டு சுருட்டி விட்டிருந்தாள். வலது கையில் அவள் அணிந்து கொண்டிருந்த டிஜிட்டல் கடிகாரம், நேரத்தைச் சிமிட்டிக் கொண்டிருந்தது. நழுவி கைமீது விழுந்த நீல ஆர்கண்டி சேலையை உயரத் தூக்கிக்கொண்டு,

''திடீர்னு புறப்பட வேண்டி வந்துவிட்டது. ரிசர்வேஷன் கிடைக்கலை. ராத்திரி பூராவும் உட்கார்ந்து கிட்டே பயணம் செய்யணும். நீயும் அப்படித்தானா?'' வரிசைப் பற்கள் தெரிய அழகாகச் சிரித்தாள்.

'பெரிய இடத்துப் பெண்போல தோன்றுகிறது. இருந்தாலும் முன்பின் தெரியாதவரிடம்...' கௌரி தயங்குவதை அவள் சட்டென்று புரிந்து கொண்டாள்.

''பயப்படாதே, நீ தனியா போறபோலத் தெரியுது. கூட யாரும் துணைக்கு வரலையா?'' அன்பு கனிந்த மெல்லிய குரலில் விசாரித்தாள்.

கௌரிக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டது. 'யாருமில்லாத அனாதை நான்...' பேசமுடியாது தடுமாறினாள்.

ஆதரவுடன் அவள் தோள்களைப் பற்றினாள் அந்தப் பெண்மணி.

''அப்படிச் சொல்லாதே. எல்லாம் நமது ஊர். எல்லோரும் நமது உறவினர்கள்னு நினைக்கணும். என் பேர் விநோதினி. நான் ஒரு தையல் பள்ளிக்கூடம் வச்சு நடத்தறேன். அப்போ அப்போ என்னால முடிஞ்ச உதவியை ஏழை எளியவங்களுக்குச் செய்யறேன். உன்னைக் கொஞ்ச நேரமா கவனிச்சுட்டே இருக்கேன். ரொம்ப கவலையும் பயமுமா அலைபாய்ஞ்சுக்கிட்டு நிக்கிறியே?''

''எனக்கு யாரும் இல்லைங்கிறது வாஸ்தவம்தான். என் சிநேகிதி ஒருத்தி சென்னைக்கு வரச்சொல்லி கடிதம் போட்டிருக்கா. அங்கே போய் ஏதாச்சும் வேலை கிடைக்குமான்னு பார்க்கணும்.''



விநோதி கன்னங் குழையச் சிரித்தாள். ''மெட்ராசிலே வேலை என்ன வழியெல்லாம் கொட்டிக் கிடக்கா? அப்படி நீ என்ன படிச்சிருக்கே!''

கௌரி உண்மையைச் சொன்னபோது அவள் மேலும் சிரித்தாள். ''படிப்பும் அதிகமில்லாம, கையில் ஒரு தொழிலும் இல்லாம புறப்பட்டா சென்னைப் பட்டணத்திலே வேலை சுலபமாகக் கிடைக்குமா?''

துயரமும் அச்சமும் தாங்காது கௌரி கண் கலங்கிப் போனாள்.

''பரவாயில்லை. கவலைப் படாதே நான் நடத்தற பள்ளிக் கூடத்திலே நீயும் தையல் கத்துக்கலாம். எனக்கு ரொம்பப் பேரைத் தெரியும். உனக்கு எங்கேயாவது வேலை வாங்கித் தர்றேன்'' முதுகில் லேசாகத் தட்டினாள் அவள்.

நன்றி உணர்வினால் நெஞ்சம் மகிழ்ந்து போனாள் கௌரி. வண்டியில் ஏறியவளுக்கு உட்கார்ந்த நிலையிலேயே உறக்கம் வரும் அளவுக்கு மனம் லேசாகி விட்டிருந்தது.

திருவான்மியூரில் விநோதினியின் வீடு இருந்தது. பெரிய தோட்டத்திற்குள்ளே அழகான வசதியான சிறு பங்களா முன் பக்கம் கார் ஷெட்டில் ஏழெட்டு தையல் யந்திரங்கள் சதா ஓடும் சப்தம். பங்களாவின் அலங்காரமான முன் அறையில் எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டேயிருந்தது. கருப்புக் கண்ணாடி அணிந்த விநோதினியின் மகன் அந்தக் கூட்டத்திலே எப்போதும் காணப்பட்டான். கூட்டத்திலிருந்து பேச்சும் சிரிப்புமாக வீடு கலகலத்துக் கொண்டிருந்தது.

வீட்டின் முன்புறம் ஓயாமல் வந்து போய்க் கொண்டிருந்த ஆட்டோ - டாக்சிகளின் சப்தம் வேறு. பசுமையான மரங்கள் சூழ்ந்த இடத்தில் அந்தப் பங்களா ஒரு சந்தைக் கடையைப் போலத் திகழ்ந்தது கௌரிக்கு வியப்பைக் கொடுத்தது.

சென்னை அவளுக்குப் புதிய நகரம். திக்கு திசை எதுவும் தெரியாத குழப்பம். தோழி நிர்மலாவை அவள் தனியாகப் போய்க் கண்டு பிடிப்பது சிரமம். இரண்டு நாள் அங்கே தங்கிவிட்டு, பின்னர் மெல்ல விசாரித்துக் கொண்டு தோழியின் வீட்டுக்குப் போய்விட வேண்டும். இந்தத் திட்டத்துடன்தான் அவள் அந்த பங்களாவுக்கு வந்தாள்.

வந்த அன்றே வினோதினியின் மகன் சேகரனை அவளுக்குப் பிடிக்காமல் போயிற்று. அவனது கருப்புக் கண்ணாடியும், தொங்கு மீசையும், குறுந்தாடியும், அட்டகாசமான பேச்சும் அவளுக்கு அச்சத்தைத் தந்தன.

'நமக்கென்ன, நாளை நிர்மலாவின் வீட்டுக்குப் போய்விடப் போகிறோம்' மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். பத்திரமாகக்கொண்டு வந்த பர்சுக்குள் நிர்மலாவின் விலாசமும் பணமும் இருப்பதைப் பல முறை தொட்டுப் பார்த்துக்கொண்டு இடுப்பிலேயே செருகிக் கொண்டாள்.

மூன்றாம் நாள் காலை.

சமையற்கார அம்மாள் சண்பகவல்லிக்கு ஒரே கோபம். முந்திய நாள் எஜமானியிடம் அவள் சம்பள உயர்வு கேட்டிருந்தாள். ''இப்பத்தானே உனக்கு பத்து ரூபாய் உசத்தினேன். அதுக்குள்ளே மறுபடியும்



கேட்டா?'' - வினோதினி இரவுச் சாப்பாட்டின்போது இரைந்து கத்தினாள்.

''எதுக்கு இந்த 'யூஸ்லெஸ்'ஸை வேலைக்கு வச்சிருக்கீங்க? பேசாம நிறுத்திட்டு நல்ல ஆளாப் பார்த்துப் போட்டுக்கலாம்'' சேகரன் வெடுக்கென்று கூறியது சண்பகவல்லியின் ஆத்திரத்தை மேலும் கிளப்பி விட்டது.

''இங்கிலீஷ் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டான். மடப்பயல்! இவன்தான் உதவாக்கறை. நானாவது உடம்பை வளைச்சு, உழைச்சு சோறு திங்கறேன். இவன்...? சே...'' முணு முணுத்துக் கொண்டே சமையலறைப் பாத்திரங்களை உருட்டினாள்.

கௌரிக்கு வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை. வந்த நாளிலிருந்து சண்பகவல்லிக்கு ஏதாவது உதவி செய்து கொண்டுதான் இருந்தாள். சமையலறைக்குள் நுழைந்தவளின் காதில் அந்த முணுமுணுப்பு விழத்தான் செய்தது.

''என்ன ரொம்ப அலுப்பா இருக்கீங்க?'' கௌரி புன்னகைத்தாள்.

''ஆமா, இந்த நன்றி கெட்ட வீட்டிலே வேலை செய்வதை விட...'' என்ற சண்பகவல்லி, தன் பேச்சை சட்டென்று நிறுத்திவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள், பிறகு அடிக் குரலில் கௌரியைத் தன் அருகே அழைத்தாள்.

''இதோ பாரு. நீ யாருமில்லாத அனாதைதானே? இங்கேயே தங்கப் போறியா?''

''இல்லை. என் சிநேகிதி வீட்டுக்குப் போகப் போறேன் ஏன் கேட்கிறீங்க?''

''அப்ப யாருகிட்டேயும் சொல்லாம உடனேயே கிளம்பு. ஏன்னா இது ஒரு தவறான இடம்'' கிசுகிசுத்தாள் சண்பகவல்லி.

கௌரி திடுக்கிட்டுப் போனாள். ''என்ன சொல்றீங்க?'' வியப்புடன் விழித்தாள்.

''உண்மையைத்தான் சொல்றேன். உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு. அதனால் சொல்றேன். இந்த அம்மா விநோதினிக்கு இதுதான் வேலை. ஏமாளியான பெண்களை கிடைச்ச இடத்திலிருந்து கூட்டி வந்து நைச்சியமா பேசி தன் வீட்டிலேயே தங்க வச்சுக்குவா. பிறகு அவளோட மகன் இருக்கானே அந்தக் கண்ணாடிக் காரன் அவன் பம்பாய் கல்கத்தா ஹைதராபாத்துன்னு பெண்களைக் கேட்ட இடத்துக்குத் தள்ளிவிடுவான். இப்படி ஒரு வியாபாரம். தையல் சொல்லித் தருவ தெல்லாம் வெறும் கண்துடைப்பு.

கௌரிக்குத் தலை சுற்றியது. அவள் கதைகளில் படித்திருக்கிறா... ஏமாற்றி அழைத்துச் செல்லும் பெண்களை அந்த வில்லன்கள் என்ன செய்வார்கள் என்பதை சினிமாவில் பார்த்திருக்கிறாள். இப்போது அத்தகைய விபத்து அவளுக்கும் நேரப் போகிறதா? ஐயையோ! இதிலிருந்து மீள்வது எப்படி? மேலே கேட்கப் பிடிக்காதவளாய்க் காதுகளை மூடிக்கொண்டாள்.

''நீ காதுகளை மூடிக்கிறே, நான் கண்களை மூடிக்கிட்டு மாடா உழைக்கிறேன். இரு நூறு ரூபாய் காசுக்கு என் மனசாட்சியை அடகு வச்சுட்டு உழைக்கி



றேன். ஆனா அப்பப்போ உன் மாதிரி ரொம்பவும் அறியாத பெண்களை தப்ப வைக்கிறதும் உண்டு.''

''அம்மா அப்போ எனக்கு நீங்க உதவி செய்வீங்களா?''

''செய்வேன், இந்த விநோதினியின் விஷமத்துக்கு ஒரு முடிவு வரும். ஒருநாள் ஊரே... தெரியற மாதிரி போலீஸ் வந்து புடிச்சுக்கப் போகுது... ஒழியட்டும். இப்போ நீ கிளம்பற வழியைப்பாரு. நான் சொன்னதாக யார் கிட்டேயும் மூச்சு விடாதே. இன்னிக்கு சாயந்தரம் இங்கே ஒரு பார்ட்டி நடக்கப் போகிறது. அந்தச் சமயம் பார்த்து நான் புழக்கடைக் கதவைத் திறந்து வைக்கிறேன், நீ கம்பி நீட்டு, பின்பக்கம் ஒரு ஒத்தை கேட் இருக்கும். அதன்மீது ஏறிக் குதி, கொஞ்சம் நடந்தால் பஸ் நிலையம். மயிலாப்பூர்னு சொல்லி டிக்கெட் வாங்கிக்கோ. பிறகு கடவுள் விட்ட வழி.

சண்பகவல்லி படபடவென்று தாழ்ந்த குரலில் கூறி முடித்தாள்.

அன்று முழுவதும் பொங்கிப் பொருமிய மனத்தை கட்டுப்படுத்திக்கொண்டு, ஒன்றுமே அறியாதவள்போல் நடந்துகொள்ள மிகவும் பாடுபட்டாள்.

''இன்னிக்கு நம்ம வீட்டிலே ஒரு பார்ட்டி. அந்தப் புதுப் புடவையைக் கட்டிக்கொண்டு நீயும் அதிலே வந்து சேர்ந்துக்கணும்.''

பீரோவிலிருந்த ஒரு பட்டுப் புடவையை விநோதினி எடுத்து கௌரியிடம் நீட்டினாள். கௌரி புன்னகையுடன் அதை வாங்கிக்கொண்டாள்.

மாலை நெருங்க நெருங்க அவள் நெஞ்சு வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. முன்னேற்பாடாகத் துணிப் பையை சமையலறைக்குள் பத்திரப் படுத்தி யிருந்தாள். மணிப்பர்சை வழக்கம்போல் இடுப்பில் செருகியிருந்தாள்.

ஆறு மணி அளவில் கார்களும் டாக்சிகளும் ஆட்டோக்களும் வர ஆரம்பித்தன. விநோதினி அழகான தொரு பட்டுச் சேலையில் முன்னறையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தாள். மகன் சேகரன், குளிர்பானங்கள் கொண்ட பெட்டிகளை அறைக்குள் ஒருபுறம் அடுக்கிக் கொண்டிருந்தான்.

சமுசாவைச் சுட்டு, கூடைக்குள் நிரப்பிக் கொண்டிருந்த சண்பகவல்லி கிசுகிசுத்தாள். "மணி ஆறாகப் போகிறது சரியான சமயம். பின் பக்கம் யாருமில்லை. ஓடி விடு."

நன்றிப் பெருக்கில் அவளது கையைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு, துணிப் பையுடன் சப்தமிடாது மெல்ல பின்பக்கம் வந்தாள் கௌரி. கதவை மூடிவிட்டு சண்பகவல்லி உள்ளே திரும்பி விட்டாள்.

அந்தச் சிறிய கேட்டின்மீது ஏறி, மறுபடி குதித்து ஓட்டமும் நடையுமாக வெளியேறிய கௌரிக்கு மூச்சு அடைத்தது. பயத்தில் கால்கள் தாள்ளாடின. எப்படியோ பஸ் நிலையத்தை அடைந்து விட்டாள்.

அப்போது புறப்பட்ட பஸ்ஸின் ஆட்டத்தில் கடைசி ஆசனத்தில் பொத்தென்று அவள் விழுந்ததைக் கண்டு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தவர்கள் கண்களில் அவளது கலவரத் தோற்றம் படவேயில்லை.



பர்சிலிருந்து ஒரு ரூபாய்த் தாளை உருவி, 'மயிலாப்பூர்' என்றாள்.

"குளத்திலா இறங்கணும்?" கண்டக்டர் சிரித்தபடி கேட்டதை அவள் பொருட்படுத்தவில்லை.

'கடலில் இறங்கப் போகிறாயா?' என்றால்கூட 'ஆமாம்' என்றுதான் சொல்லியிருப்பாள். அப்படிப்பட்ட தொரு பயங்கரக் கலவரம் அவளுக்குள் பரவியிருந்தது.

வளைந்து வளைந்து சென்ற பஸ் சற்றுநேரம் சென்றதும் ஒரு சினிமா கொட்டகை முன்னால் நின்றது.

"கபாலி இறங்குங்க."

கௌரி சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். எதிர் சீட்டில் ஒரு கருப்புக் கண்ணாடிக்காரன். பகீர் என்ற உணர்வில் ஆடிப் போய்விட்டாள். ஒரு வேளை சேகரனாக இருக்குமோ? சந்தேகம் பேயாக அவளை விரட்டியது. சட்டென்று பஸ் கிளம்பும் முன் கீழே இறங்கி விட்டாள்.

அப்பாடா! இனி எப்படியாவது ஒரு ரிக்ஷா பிடித்து நிர்மலா வீட்டைக் கண்டுபிடித்துவிட வேண்டும். நம்பிக்கையுடன் சற்று முன் பக்கமாக நடந்தாள்.

அங்கிருந்த பெட்டிக்கடை அருகே தெருவிளக்கின் ஒளியில் விலாசத்தைக் கண்டு பிடிக்க பர்சை எடுக்க முயன்றாள்.

"ஏய் எங்கேடி போறே? நில்லடி!" என்ற உரத்த கர்ஜனையைக் கேட்டுக் கலகலத்துப் போனாள் அவள்.

கட்டுமீசை - சிவப்பேறிய கண்கள் - இடையில் பெல்ட்டும் லுங்கியும் - ஒரு முண்டா பனியன்

தனது சுருட்டைத் தலையைச் சிலுப்பியபடி அருகே வந்தான்.

குப்பென்று சாராய வாடை.

''சீ... நீ யாரு?'' சீறினாள் அவள்.

தாலியை அறுத்துப் போட்டுட்டு நைஸா ஓடியாந்துட்டா உட்டுடுவேனா? உம்... நடடீ கயிதே!''

இதற்குள் ரசமானதொரு நாடகத்தைக் காணும் உற்சாகத்தில் கும்பல் கூடிவிட்டது.

''ஏய்யா! வீட்ல நடக்கிற சண்டையை வெளியேயும் போடறீங்க?''

''இந்தக் காலத்து பொம்பளைங்களுக்கு திமிர் ஜாஸ்தி. தாலியை கழட்டிப்பிட்டு ஓடியாந்திருக்கா.''

''போலீசைக் கூப்பிடுங்க. தெருவில் என்ன கலாட்டா?''

பலவிதமான பேச்சுக்கள். கௌரி வெலவெலத்துப் போனாள். கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல இதென்ன புதுவிதமான ஆபத்து? கடவுளே.

''புருசங்காரன் பேசறேன். என்னடி பேசாம நிக்கிறே?''

எட்டிக் கையைப் பிடிக்க வந்தவனிடமிருந்து விலகி ஓட்டமாக ஓடலானாள்.

''விடாதே, பிடி''

''ஒரு சமயம் திருடியாக இருக்கலாம் அய்யா. எதற்கும் போலீசிலே புடிச்சுக் குடுத்துடுவோம்'' என்று சிலரும் அவளைத் துரத்தினார்கள்.



அருகில் இருந்த சந்து ஒன்றில் நுழைந்து தலை தெறிக்க அவள் ஓடுவதைக் கண்டு விஷயம் புரியாத பல பாதசாரிகள் ''விடாதே, பிடி'' என்று வெறி நாயைக் கல்லால் அடிப்பவர்கள் போல பின்னாலேயே ஓடினார்கள்.

மேலே ஓட முடியாதபடி கௌரிக்குக் காலும் மனமும் சோர்ந்து போயின. மூச்சுத் திணறியது. இதயம் இரண்டாகிவிடும் போல பலத்த ஓசையுடன் அடித்துக் கொண்டது.

திடீரென்று தெரு விளக்குகள் அணைந்து போயின. அதுதான் சமயம் என்று அருகே இருந்த ஒரு வீட்டின் முன் பக்கத்துக் கதவோரம் ஒண்டிக்கொண்டு, சுவர் எழுப்பிய மறைவில் ஒளிந்து கொள்ள முயன்றாள். மூச்சுத் திணறிய நிலையில் அரை மயக்கமாகக் கதவுமேல் சாய்ந்தபோது, 'தடக்' கென்று தாழிடாது மூடப்பட்ட கதவு திறந்து கொண்டது.

தள்ளாடி உள்ளே விழப் போனவள் சமாளித்துக் கொண்டாள்.

அந்த இருளிலும் தடதடவென்ற காலடி ஓசைகளும், 'விடாதே, பிடி' என்ற கூக்குரல்களும் அவளைப் பதை பதைக்கச் செய்தன. காலடி ஓசை மிக அருகில் கேட்டதை உணர்ந்து சட்டென்று உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

சொல்லி வைத்தது போல மின் விளக்கு பளிச் சென்று எரிந்தது.

''யாரது?'' அதிகாரமான குரலில் ஒருவன் அதட்டினான்.

தன்னையறியாது 'வீல்' என்று அவள் ஓங்கி அலறி விட்டாள்.

# 3

நுங்கம்பாக்கத்தில் புதிதாக உருவாகியிருந்த அந்தக் காலனியில் அவர்கள் வீடுதான் கடைசி. நடுத்தர வர்க்கத்தினர் பெரும்பாலும் சொந்தமாக வீடு கட்டிக் கொண்டு வசித்த பகுதி. அநேக வீடுகளில் பெண்களும் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தனர். காலை பத்து மணியளவில் வீடுகளும் தெருக்களும் வெறிச்சென்றாகி அமைதியில் மூழ்கிவிடும். இரவில் கூண்டில் வந்து பறவைகள் ஒண்டிக்கொள்வதுபோல அலுவலகத்திலிருந்து திரும்பிவிடும் அவர்கள், வீட்டுக்குள் அடைந்து கொண்டனர். அடுத்த வீட்டுக்காரர் என்ன செய்கிறார்? என்று அறியும் ஆவலில் நேரத்தைக் கழிக்க முடியாத அவசரக்காரர்கள்.

ஒருவகையில் அந்தச் சூழ்நிலை கௌரிக்கு மிகவும் பிடித்திருந்தது.

அந்த வீட்டைக் கட்டியவன் கல்கத்தாவுக்கு குடியேறி விட்டான். அலுவலகத்தில் பெருந் தொகையைக் கடனாக வாங்கி, பாடுபட்டு அவர்கள் சேர்த்ததை யெல்லாம் போட்டு வாங்கிக் கொண்ட வீடு எலி வளையானாலும் தனி வளை என்பதுபோல, அவர்கள் வசிக்க சொந்தத்திலேயே ஒரு தனி வீடு கிடைத்துவிட்டது என்ற பெருமையிலே அவள் மகிழ்ந்து போயிருந்தாள்.

அதில் குடியேறி சில மாதங்கள்தான் ஆகியிருந்தது. அக்கம் பக்கத்தவர்களிடம் அவள் அதிகம் தொடர்பு வைத்துக் கொண்டதில்லை. அந்தப் பயங்கர அனுபவத்திற்குப் பின்னர் அவளுக்குத் தன்னந்தனியாக வெளியே போகக்கூட அச்சம். யாரிடமும் பேசி நட்புக் கொள்ள மிகவும் பயம்.



யாராவது சின்னம்மாவுக்கு தெரிந்தவர்களாக இருந்துவிடப் போகிறார்கள்! அவள் அங்கே கணவனுடன் வசிப்பது பெற்றோர்களுக்குத் தெரிந்துவிடுமோ என்றெல்லாம் பலவித பயங்கள்.

தான் உண்டு தன் வீடு - குழந்தைகள் உண்டு என்று ஒதுங்கி வாழ்ந்தாள். அவளைப் போலவே அண்டை வீட்டுக்காரர்களும் ஒதுங்கியே வாழ்ந்தார்கள். எத்தனை சௌகரியமான வாழ்க்கை! இல்லாவிட்டால், தேவநாதன் வெகு நேரம் கழித்து வீடு திரும்புவது பற்றிய வம்பு டமாரமாகியிருக்குமே!

இரவு பதினோரு மணி இருக்கும். அழைப்பு மணியை அவன் அழுத்தும் முன்பே ஸ்கூட்டர் சத்தம் கேட்டு அவள் எழுந்துவிட்டாள். ஜன்னல் வழியே மெல்லப் பார்த்தாள். வந்தது தேவநாதன்தான். ஸ்கூட்டரை கராஜிற்குள் தள்ளிக் கதவை மூடிக் கொண்டிருந்தான்.

வராந்தா விளக்கைப் போட்டுவிட்டு வேகமாகத் திறந்தாள். அவன் கையிலிருந்த ப்ரீப்கேஸை வாங்கிக் கொண்டாள்.

கோட்டைத் தோள்மீது போட்டுக்கொண்டு, முடி நெற்றி மீது புரள, நடை தள்ளாடியவனாக உள்ளே வந்தவனைக் கண்டு அவளுக்கு அதிர்ச்சிதான்.

குடித்திருக்கிறாரோ?... கதவைத் தாழிட்டு விட்டு உள்ளே வந்தாள் சந்தேகத்துடன்.

''சாப்பாடு வேண்டாம்'' முனகிய தேவநாதன் பரபரப்பாக உடைகளை மாற்றிக்கொண்டான்.

பையிலிருந்த மாத்திரை ஒன்றை எடுத்து, காகிதத்தைப் பிரித்து வாயில் போட்டுக்கொண்டு நீருடன்

விழுங்குவதைக் கண்டதும் அவளுக்குக் கவலை அதிகமாயிற்று.

''என்னங்க உங்களுக்கு? முகமும் கண்ணும் ஒரு மாதிரியா...''

வேகமாக அவனை நெருங்கி வந்து நெற்றிமீது கை வைத்துப் பார்த்தாள். தேவநாதன் குடித்திருக்கவில்லை. காய்ச்சலினால்தான் தள்ளாடினான்.

''அதிகப்படியான வேலை உடம்புக்கு ஏத்துக்கலை. பாத்தீங்களா? ஓவர்டைம் செய்யணும்னு கட்டாயமா? உடம்புக்கு மேலே பணம் ஒசத்தியா?'' படபடவென்று பேசிக்கொண்டே படுக்கையைத் தட்டிப் போட்டாள்.

''வழியிலேயே டாக்டரைப் பார்த்துட்டுதான் வரேன்'' திணறிக்கொண்டு படுக்கையில் தொப்பென்று சாய்ந்தான்.

''கொஞ்சம் ஹார்லிக்ஸ் கலக்கிக் கொண்டு வரேன். அதை மட்டும் எனக்காகச் சாப்பிடணும். மறுக்காதிங்க... மருந்துகளை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது.'' சொல்லிக்கொண்டே கம்பளியை எடுத்து அவன் மேலே போர்த்தினாள். மின் விசிறியை அடக்கமாக சுழலவிட்டு விட்டு, சமையலறைக்குள் விரைந்தாள்.

''அப்பாடி! நெஞ்சுக்கு இதமா இருக்கு'' சொல்லிக் கொண்டே அவள் கொடுத்த ஹார்லிக்ஸைப் பருகினான்.

மங்கலாக எரிந்த விடிவிளக்கின் ஒளியில் அவன் முகத்தைக் கவனித்தாள். காய்ச்சலில் சிவந்து விட்டிருந்ததைத் தவிர, காலையில் தெரிந்த கடுமையை அதில் காணவில்லை.



தலைவலியைக்கூட பொறுக்க முடியாத சுபாவம். காய்ச்சல் வந்துவிட்டால் கைக்குழந்தை போல தவித்து விடும் பழக்கம்.

''என்னங்க, எப்போ பிடிச்சுக் காய்ச்சல்?'' என்று கேட்டவாறே அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

''காலையில் பிடிச்சு...''

''லீவு எடுத்திட்டு வீட்டுக்கு வந்திருக்கலாமே?''

''உம்'' என்று முனகிவிட்டு அவன் திரும்பிப் படுத்துக் கொண்டான். அதற்குமேல் துருவிக் கேட்க அவளுக்குக் கொஞ்சம் அச்சமாகத்தான் இருந்தது.

ஒரு மாதகாலமாக, பேசப் பிடிக்காதவனாக இருந்தவன் ஒரு வார்த்தை பேசிவிட்டானே, போதும். முள்மேல் போட்ட சேலையை மெல்ல உருவுவதுபோல, மெல்லத்தான் விஷயத்தை விசாரிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டவளாக, தரைமீது பாயை விரித்துத் தலையைச் சாய்த்தாள்.

கொஞ்ச நேரத்தில் தேவநாதனிடமிருந்த சன்னமான குறட்டை ஒலி கேட்டது. எழுந்து மெல் போர்வையை நீக்கிவிட்டுப் பார்த்தாள். முத்துப்போ வியர்வை முகம் முழுவதும் அரும்பி நிற்க, நெற்றியை தொட்ட போது சில்லென்று இருந்தது.

இத்தனை விரைவில் காய்ச்சல் இறங்கிவிட்டதே அவளுக்கு மகிழ்ச்சி. துவாலையால் மெல்ல முகத் லிருந்து வியர்வையை ஒற்றி எடுத்தாள். கனமா போர்வையை எடுத்துவிட்டு மெல்லியதொரு விரிப்பை கழுத்துவரை போர்த்திவிட்டு மறுபடியும் பாயி தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

உறக்கம் வந்தால்தானே? இப்படியொரு காய்ச்சலின் போது அவனுக்கு எதிர்பாராதவிதமாகப் பணிவிடை செய்ய நேரிட்ட வாய்ப்புதானே - அவர்களது காதலுக்கும் திருமணத்திற்கு அஸ்திவாரமாக அமைந்தது! தனக்குள்ளே அவள் இலேசாகச் சிரித்துக் கொண்டாள்.

அந்த நினைவு நெஞ்சிலே விரிந்தது.

பெண்ணொருத்தி தன்னந்தனியே வெளியே கிளம்பி விட்டால், ஆபத்துகள் இப்படியெல்லாமா அவளைத் துரத்தும்? பதைபதைத்துப் போய் அலறிவிட்டு நின்றவள், மேலும் மிரண்டு போனாள். குரலுக்குரியவன் அந்த அறையிலிருந்து வெளிப்பட்டு அவள் நின்று கொண்டிருந்த முன்னறைக்குள் வந்தபோது மிரட்சி அதிகமாகியது. நெஞ்சு வெடித்து விடும்போல் தீவிரமாக அடித்துக்கொண்டது.

மழிக்கப்படாத தாடி மீசையுடன், முடி புரண்டு நெற்றி மீது புரள, கசங்கிய ஜிப்பாவும் பைஜாமாவுமாக எதிரே நின்ற மனிதனை அவள் நம்ம முடியுமா? ஐயையோ! வசமாக வலிய வந்து மாட்டிக்கொண்டு விட்டோமோ?

''யாரம்மா நீ? எப்படி உள்ளே வந்தே?'' தோற்றத்திற்கு நேர் எதிரான மிருதுவான குரலில் அவன் கேட்டபோதுதான் அவளுக்கு மூச்சு வந்தது.

''சென்னைக்குப் புதிசு. சிநேகிதி வீட்டைத் தேடிக் கொண்டு போகும்போது ஒரு முரடன் என்னைப் பின் தொடர்ந்து வம்பு செய்தான். கூட்டம் கூடிப் போச்சு. அப்போது விளக்கு அணைஞ்சு போனதினாலே தப்பித்துக் கொண்டு ஓடினேன். அவங்ககிட்டே அகப்படக் கூடாதுன்னு இந்த வீட்டு வாசலில் வந்து ஒளிஞ்சுக்க கதவு மேலே சாய்ஞ்சப்போ தானாகக் கதவு திறந்துக் கிட்டது. உள்ளே ஓடி வந்து கதவைச் சாத்திக்கிட்டேன். சார்... உங்களுக்கு புண்ணியமுண்டு. கொஞ்ச நேரம் இங்கே இருக்க அனுமதி கொடுத்தா...''



மேலே பேச முடியாமல் விசித்து அழத் தொடங்கினாள்.

''நீ சொல்றது உண்மைன்னு நம்பச் சொல்றியா?'' அவன் இலேசாகச் சிரித்தான்.

''சத்தியம். வேண்டுமானால் நிரூபிக்கிறேன்'' சொல்லிக் கொண்டே இடுப்பில் சொருகியிருந்த சிறு மணிப்பர்சை எடுத்தாள். சில பத்து ரூபாய் நோட்டு களுக்கு நடுவே மடித்து வைக்கப்பட்டிருந்த தோழியின் முகவரி கொண்ட கடிதத்துண்டை எடுத்து அவன் முன் நீட்டினாள்.

''இந்த முகவரிக்குப் போகணும். இப்பவே நீங்க எனக்கு துணைவந்து, அங்கே கொண்டுபோய் விட்டு விட்டால்...''

அவன் உரத்த குரலில் சிரித்தான். அடக்கமுடியாமல் பலமுறை இருமினான்.

''எனக்கு உன்னோட பேசிக் கொண்டிருக்கக்கூட தெம்பில்லை. ஒரே காய்ச்சல், மார்பில் சளி கட்டிக் கொண்டு அவஸ்தைப்படறேன். நீ சொல்றது பொய்யோ... நிஜமோ... இருக்கட்டும். இந்த வேளையிலே இளம் பெண் நீ தெருவைச் சுற்றிக் கொண்டிருப்பது ரொம்பத் தவறு. இந்த முன்னறையிலே கம்பளத்து மேலே படுத்துக்கோ. விடிஞ்ச பிறகு பேசிக்கலாம்... ஆமாம், நீ ஏதாச்சும் சாப்பிட்டியா?''

''இடம் கொடுத்து உதவறீங்களே, அதுவே போதும், நன்றி சார்'' அவனை நிமிர்ந்து பார்க்க அஞ்சியவளாக அந்த முன்னறையின் ஒரு பக்கத்திலே ஒண்டிக்கொண்டு நின்றாள்.

''நடைவிளக்கு மட்டும் எரியட்டும். மத்ததை அணைச்சுடறேன்.''

பிரகாசமாக எரிந்த முன்னறை விளக்கை அணைத்து விட்டு, அவன் தன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

குளிருக்கு ஒடுங்கிய குருவி போல அவள் சோபாவில் கால்களைக் கட்டிக் கொண்டு, விடிய விடியத் தூங்காது கம்பளத்தின்மீது உட்கார்ந்திருந்தாள்.

யார் கண்டது? நல்லவன்போல் பேசும் இந்தத் தாடிக்காரன் ஒரு அயோக்கியனாக இருந்துவிட்டால்? தூங்கக்கூடாது! ஆபத்தான நிலையில் தூக்கம் பெரிய எதிரி ஆயிற்றே! அயர்ந்துபோய், மறந்தும்கூட அவள் கண் இமைகளை ஒரு கணம்கூட மூடவில்லை.

விடியற்காலை அவளையும் அறியாது சிறிது உறங்கிப் போனாள்.

''இன்னுமா தூங்கறே? சோம்பேறிப் பெண்ணே. எழுந்திரு.''

அதட்டிய ஆண் குரலைக்கேட்டு விழித்துக் கொண்டாள்.

அவளால் நம்ப முடியவில்லை. இரவில் அச்சத்தைக் கொடுத்த அந்த தாடி - மீசை மனிதன், இப்போது மழிக்கப்பட்ட முகத்தில் - உயரமாக... வசீகரமாக மெல்லச் சிரித்தபடி நின்று கொண்டிருந்தான்.



இன்னமும் காய்ச்சல் விட்டபாடில்லை என்று சிவந்த அவனது கண்களும் முகமும் சொல்லின.

''அடுப்பு மேடை மேலே காபியும் ரொட்டித் துண்டு இரண்டும் வச்சிருக்கேன். இது என் வீடு இல்லை. என் நண்பன் தன் மனைவியுடன் வெளியூர் போயிருக்கான். வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொன்னான். மூணு நாளா தலைநிமிர முடியாதபடி காய்ச்சல். இங்கே வேலைக்குக்கூட ஆள் யாரும் கிடையாது. அதனாலே நீ காப்பி சாப்பிட்டதும் நடையைக் கட்டு. தெரிஞ்சுதா? அதே அந்த நடையின் கோடியிலே குளியலறை இருக்கு...''

சோர்வுடன், சோபாவிலே சாய்ந்துகொண்டான்.

குழாயைத் திருப்பி பச்சைத் தண்ணீரில் குளித்தாள் கௌரி. வீட்டுக்குடையவர்கள் அலமாரித் தட்டில் வைத் திருந்த சோப்பை எடுத்து, தாராளமாக உபயோகித்துக் கொண்டாள். பையிலிருந்த மாற்று உடையில் - நெற்றியில் குங்குமப் பொட்டுடன் பளிச்சென்று வெளியே வந்தவளைக் கண்டு அவனுக்குத் தாளமுடியாத வியப்பு.

கௌரவமான குடும்பத்துப் பெண்போலத் தெரியும் இவள் ஏன் இரவில் - அந்த வேளையிலே தெருவில் சுற்ற வேண்டும்?

துவைத்துப் பிழிந்த ஈரத் துணியை அவள் கொடிக் கம்பிமீது போடுவதைக் கண்டு அவன் திடுக்கிட்டான்.

''இந்தா, ஒரு ராத்திரிதான் இங்கே தூங்க இடம் கொடுத்தேன். பெரிய 'காம்ப்' போடத் திட்டமா? துணி எப்போது காயறது! எப்போ நீ இங்கிருந்து போறது?'' அதட்டினான்.

''உங்க உடம்பு குணமான பிறகு போறேன் சார். அதுவரை நீங்க செஞ்ச உதவிக்குப் பிரதியா இந்த வீட்டைக் கவனித்துக்கொண்டு உங்களையும் கவனித்துக் கொள்கிறேன். சார், என் சிநேகிதி வீட்டுக்குத் தனியே போக பயமா இருக்கு சார்? எனக்கு இந்த ஊர், தெரு, மனிதர்கள் எல்லாமே புதுசா இருக்கு, அதனாலே...''

''அடி சக்கை! ஒட்டகமும் அரேபியனும் என்கிற கதையாக இருக்கு!''

''எனக்குக்கூட அந்தக் கதை தெரியும்'' அவள் பற்கள் பளிச்சிட சிரித்தபோது அவன் மனம் கொஞ்சம் நெகிழ்ந்து போனது உண்மை.

ஒருவேளை இப்படிப் பகட்டாகப் பேசிவிட்டு, சாமான்களைச் சுருட்டிக்கொண்டு சென்றுவிடும் சாமர்த்தியமான திருடியோ? ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்...

தன்னுள்ளே எண்ணிக்கொண்டு மிகவும் எச்சரிக்கை யாகத்தான் இருந்தான்.

உடம்புக்கு முடியாமல் காய்ச்சலுடன் அவன் படுத்திருந்த அந்தப் பத்து நாட்களில்... நீண்டநாள் பழகினவள்போல் தயக்கமின்றி அவனுடன் பேசினாள். காஸ் அடுப்பை மூட்டுவது எப்படி என்று காட்டிக் கொடுத்தவுடன் அந்த வீட்டிலிருந்த சமையல் பொருள்களைத் தேடி எடுத்து, முதல் நாள் அவன் சாப்பிடக் கஞ்சி வைத்துக் கொடுத்தாள்.

அடுத்தநாள் நாவுக்கு ருசியாக காரசாரமாக ரசம் செய்து சாப்பிடச் சொல்லி உபசரித்தாள். வீட்டைச் சுத்தப்படுத்தி, சமைத்து, துணிமணிகளைத் துவைத்துக்



காய வைத்து, வேளை தவறாது மருந்துகள் சாப்பிட அவனுக்கு நினைவூட்டி... பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தாள்.

வேலைக்காரி - சமையல்காரி - நர்ஸ் என்ற எல்லா நிலையிலும் திறமையாக செயல்பட்ட அந்தப் பெண்ணை எண்ணி வியக்காமலிருக்க அவனால் முடியவில்லை.

தட்டில் சாப்பாட்டைப்போட்டு அவன் அருகே வைத்து விட்டு தரையில் உட்கார்ந்துகொண்டு அவள் தன்னைப் பற்றி எல்லாவற்றையும் சொன்னபோது அவன் மனம் முற்றிலும் மாறிப் போனது.

ஒளிவு மறைவின்றிப் பேசும் அந்தப் பெண்ணை, ஆபத்துகள் மலிந்திருக்கும் வெளிஉலகில் தனியே விரட்ட அவனுக்கு மனமே இல்லை. நண்பனது வீட்டிலே எத்தனை நாள் ஓர் இளம் பெண்ணுடன் அவன் தனியே இருக்க முடியும்?

திரும்ப அவள் பெற்றோர்களிடம் போய்விட ஏற்பாடு செய்வதாக அவன் சொன்னபோது அவள் கதிகலங்கிப் போய்விட்டாள். வீட்டுக்குத் திரும்புவதை விட சாவையே அவள் பெரிதும் விரும்பினாள் என்பதைப் புரிந்து கொண்டபோது மேலே வற்புறுத்த சங்கடப் பட்டவனாய் வாளா இருந்தான்.

ஊருக்குப் போயிருந்த நண்பன் திரும்பி வரப் போவதாகக் கடிதம் போட்டிருந்தான்.

இந்த நிலையில் அவளை நண்பன் குடும்பத் தாருக்கு என்ன விதமாக அறிமுகப்படுத்துவது?

மேலும் நெருங்கிப் பழகியபின் அவளைப் பிரிய முடியாதது போன்ற ஓர் உணர்வின் ஏக்கத்தில் தவித்தான்.

அந்த மாலைப் பொழுதை அவளால் மறக்கவே முடியாது.

உடம்பு குணமானதும் அவன் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தான். வீடு தன் சொந்தம் என்பது போல அக்கறையுடன் அதைக் கவனித்துக் கொண்டாள்.

அன்று மாலை வீடு திரும்பியவன் கையில் ஒரு பார்சல் இருந்தது.

காப்பியை பருகிவிட்டு, முன்னறையில் சிறிது நேரம் சிந்தனையோடு முன்னும் பின்னும் உலாவினான்.

''கௌரி, இங்கே வா. ஒரு முக்கிய விஷயம்'' என்று அழைத்தான்.

அடுப்படியில் வேலையாக இருந்தவள் பரபரப்புடன் ஓடி வந்தாள்.

''இந்த பார்சலைப் பிரி. உள்ளே என்ன இருக்குன்னு பார்.''

ஆவலுடன் பிரித்தாள். உள்ளே ஒரு காஞ்சிபுரம் பட்டுச் சேலையும் ஒரு ரவிக்கைத் துண்டும் இருந்தன. அருகில் ஒரு பொட்டலத்தில் ஒரு முழம் மல்லிகைப்பூ வைக்கப்பட்டிருந்தது.

''நாளை மறுநாள் என் நண்பன், தன் மனைவி குழந்தைகளுடன் திரும்பி வந்துவிடுவான். நான் இடத்தை காலி பண்ணிவிட்டு என்னுடைய அறைக்குத் திரும்பணும். அடுத்த தெருவில் ஒரு மாடியறையில்தான் நான் குடியிருக்கிறேன்... நீ கொடுத்த உன் சிநேகிதியின் முகவரிக்குச் சென்று பார்த்தேன். இப்போது அவர்கள் சென்னையில் இல்லை...''



''ஐயோ!'' பதட்டமாகக் கூவினாள் அவள்.

''இந்த நிலையில் உன்னை மறுபடியும் தனியே வெளியே அனுப்ப மனம் இல்லை. என்னுடனேயே நீ தங்கியிருக்க வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருக்கு.''

அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான்.

இன்பமான கற்பனையில் அவள் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. காது மடல்களில் குப்பென்று சிவப்பேறிக் கொண்டது. மௌனமாகத் தரையைப் பார்த்தாள்.

''உன்னை மனைவியாக ஏத்துக்க முடிவு செய்திருக்கேன்.''

''எனக்குப் போக்கிடம் வேறு இல்லை என்று அனுதாபப்பட்டு இந்த முடிவுக்கு வந்தீங்களா?'' மிகவும் துணிச்சலுடன் கேட்டுவிட்டாள்.

திடுக்கிட்டுப் போனான் அவன். ''அப்படிச் சொல்ல மாட்டேன். இந்த வீட்டுக்குள் வந்தபோது நீ எதையாவது கொண்டு போகத்தான் திட்டமிட்டுக் கொண்டு நடிக்கிறாய் என்று நினைத்தேன். இப்போது அது உண்மைன்னு புரிஞ்சு போச்சு.''

மென்மையாக முறுவலித்தான்.

''திருடிக் கொண்டு?'' திகைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆமாம், என் மனசை நீ திருடிட்டே. அதனாலே உன்னைப் பிரிஞ்சிருக்க முடியாம திண்டாடறேன். உன்னோடயே எப்பவும்கூட இருக்கணும்னா இதுதானே

ஒரேவழி. உன் சம்மதத்தைக் கேட்காமலேயே பேசிக் கொண்டு போறேன்னுதானே பார்க்கிற? உனக்கு என்னைப் பிடிச்சா, என் மனைவியா வாழ விருப்பம் இருந்தால், இந்தப் பூவைச் சூட்டிக் கொண்டு, இந்தப் பட்டுபுடவையைக் கட்டிக் கொள். புரிஞ்சுக்கிறேன். மேற்கொண்டு ஆக வேண்டியதைச் செய்கிறேன். 'உதவி செய்ததினால் வெறும் மதிப்புதான் உங்கள்மேல். கணவனாக ஏற்கும் அளவுக்கு மனசிலே ஏதும் கிடையாது'ன்னா பரிசுகளைத் தொடவேண்டாம். இங்கே உள்ள மகளிர் காப்பகத்திலே உன்னை வைத்துக் காப்பாற்ற ஏற்பாடு செய்கிறேன்.''

அவன் கூறி முடிக்குமுன், பதட்டமாக அந்தப் புடவை பரிசுடன் அடுத்த அறைக்குள் ஓடி மறைந்து விட்டாள் அவள்.

இந்த நிகழ்ச்சியை அவன் எப்போதாவது ஞாபகப்படுத்திச் சிரிப்பது உண்டு.

அவர்களது திருமணம், அருகிலிருந்த ஜம்புநாதர் கோயிலில் மிகவும் எளிமையாக நடந்தது.

முதலில் குடித்தனம் நடத்த ஒரு வாடகை வீட்டைத் தேடிக் கொண்டனர். கொஞ்ச காலத்திலே அவனுக்கு வேலை உயர்வும் சம்பள அதிகரிப்பும் கிட்டியது.

பின்னர் சுகுமார் பிறந்தான். அதற்குப்பின் ரேவதி. அவளுக்குப் பின் சொந்த வீடு, ஸ்கூட்டர்... என்று வாழ்க்கையில் வசதிகள் பெருகிக் கொண்டே போயிற்று. சில மாதங்களுக்கு முன்தான் அவனது அலுவலகத்தில் அவன் வேலை பார்த்த பகுதிக்கு மானேஜராக பதவி உயர்வும் கிட்டியது.



கை நிறைய சம்பளம். வசிக்க சொந்த வீடு. குழந்தைகள், அன்பான கணவன்... என்று மனம் நிறைந்த ஒரு வாழ்க்கை அமைந்துவிட்ட பெருமையில் அவள் பூரித்துக் கொண்டிருக்கும்போது... அவள் புரிந்துகொள்ள முடியாத ஒரு துன்பம் நிழல்போல அவர்களைத் தொடரக் காரணம்?

அவன் மனத்தை மட்டும் உறுத்திக் கொண்டிருக்கும் அந்தத் துயரத்தை அவளிடம் சொல்லிப் பகிர்ந்து கொண்டால் என்ன?

கல்யாணமாகி இத்தனை ஆண்டுகள் ஆகியும் அவள் இன்று வரை அவனைப் பற்றி - அவனது குடும்பத்தாரை பற்றித் தூண்டித் துருவி எதுவுமே கேட்டதில்லை.

எனக்கு அப்பா கிடையாது. அண்ணன், தம்பி, தங்கை என்ற உறவும் கிடையாது. அந்த வழியில் உனக்கு என் சொந்தங்களால் எந்தவிதச் சங்கடமும் ஏற்படாது. மாமியார், மாமனார், நாத்தி, மைத்துனன், ஓரகத்தி என்ற ஒருவரது குறுக்கீடும் இல்லை. நீ தனிக்காட்டு ராணி தெரிஞ்சுக்கோ.''

கல்யாணமான புதிதில் அவளது கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளிக் கொஞ்சியபோது அவன் சொன்ன தகவல் இது.

இதற்குமேல் அவள் கேட்டதில்லை. சொந்தம் என்று யாரும் அவனைத் தேடி வந்ததில்லை.

ஒரு சமயம் அலுவலகத்தில் ஏதாவது தகராறா? பண விஷயத்தில் ஏதேனும் சிக்கலா?

தன்னந்தனியாக ஓர் இளம் பெண் தன்னுடன்

நடந்து கொண்ட கண்ணியமான மனிதராயிற்றே. அவர் அலுவலகத்துப் பணத்தை மறந்தும் கூடத் தவறான எண்ணத்துடன் கையால் தொட்டிருக்கமாட்டார்.

அந்த விதமான சந்தேகங்கள் கூடாது.

வேறு என்ன காரணம் இருக்கும்?

''கௌரி!'' மெல்லிய குரலில் கணவன் அழைத்த போது விசுக்கென்று எழுந்தாள்.

''தாகமா இருக்கு. கொஞ்சம் தண்ணி கொண்டுவா'' இலேசாக இருமிவிட்டு, படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான் அவன்.

அவன் தண்ணீரைக் குடித்துவிட்டு, தம்ளரைக் கீழே வைப்பதற்காக காத்திருந்தாள். நெஞ்சிலே பரபரத்ததை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''ஏங்க, என்கிட்ட கூட சொல்லக் கூடாதா? கொஞ்ச நாளா ஒரு மாதிரியா இருக்கீங்களே? காரணம் என்ன? உங்க மனசு கஷ்டப்பட்டா அது என்னை பாதிக்கும்னு உங்களுக்குத் தெரியாதா!''

கேட்டு முடிப்பதற்குள் துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

''கௌரி! சொல்ல முடியாத ஒரு பெரிய கவலை அதனால் சொல்லலை. மேலே எதுவும் கேட்காதே. என்னாலேயே தாங்கிக்க முடியாது.''

அரற்றிபடி, சட்டென்று படுக்கைமீது ஆயாசமாகச் சாய்ந்து கொண்டான்.

மூச்சு முட்டிவிடும்போல அவள் மார்பு படபடத்தது.



## 4

பகல் உணவுக்குப் பின் அவளுக்குப் படுக்கையில் சுருண்டு கொள்ளும் பழக்கமே கிடையாது. நாள் பூராவும் ஏதாவது வீட்டு வேலையைக் கவனித்துக் கொண்டு சுறுசுறுப்பாக வளைய வருகிறவள் அவள்.

சில நாட்களாக உடல் கிழிந்த நாராக சோர்வில் தள்ளாடிப் போய்விட்டதை உணர்ந்தாள்.

மனத்தில் கவலைகள் பாரமாகிவிடும்போது உடல் அயர்ச்சியில் தளர்ந்துவிடுவது இயற்கைதானே?

அன்று பகல் உணவிற்குப் பின்னர் அயர்ச்சி தாளமாட்டாது முன்னறையில் பாயை விரித்துக்கொண்டு படுத்து விட்டாள். அவளையும் அறியாது ஆழ்ந்து உறங்கிப் போனாள்.

வாயில் அழைப்பு மணி ஓங்கி ஒலித்ததைக் கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

அதற்குள் பொறுமையில்லாது மறுபடியும் மணி ஒலிக்கவே மெள்ள வந்து ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தாள்.

அவள் மகன் சுகுமார் முதுகில் புத்தக மூட்டையும் முழங்கால் வரை தெருப் புழுதியுமாக நின்று கொண்டிருந்தான்.

கடிகாரத்தைப் பார்த்தாள். பள்ளிக்கூடம் முடிய இன்னும் அதிக நேரம் இருந்தது.

அதற்குள் இவன் தனியாக ஏன் வீட்டுக்கு ஓடிவந்திருக்கிறான்? குழந்தை ரேவதி எங்கே?

வினாடியில் பலவிதக் கவலைகள், அவசரமாகக் கதவைத் திறந்தாள்.

நெற்றிமீது விழுந்து கிடந்த முடியை ஒதுக்கிக் கொண்டு கலவரமாக விழித்தான் சுகுமார். மேல் உதட்டில் பூத்திருந்த வியர்வைத் துளிகளைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு பாதணிகளைக் கழற்றக் கீழே குனிந்தான்.

''சுகுமார், என்ன நடந்தது? தங்கச்சியை விட்டுட்டு, பள்ளிக்கூடம் முடியறதுக்குள்ளே ஓடி வந்திருக்கே?'' அதட்டலாக, பரபரப்புடன் விசாரித்தாள்.

புத்தக மூட்டையை இறக்கி மேஜைமீது போட்டுவிட்டு கைகால்களைக் கழுவ குளியலறைக்கு ஓடினான் அவன்.

''நான் கேட்கிறேன், பதில் பேசாமல் போனா என்ன அர்த்தம்?'' எரிச்சலோடு அதட்டியபடி, கதவைத் தாழிட்டுவிட்டுப் பின் தொடர்ந்தாள் கௌரி.

சுகுமார் அவசரமாகப் பள்ளி உடைகளைக் களைந்து விட்டு அம்மா முன்னதாக எடுத்து வைத்திருந்த உடுப்புகளை எடுத்து மாற்றிக் கொண்டான்.

''யாருடனாவது சண்டை போட்டுக் கொண்டு வந்துட்டியா? நிஜத்தைச் சொல்லு. தங்கச்சியைத் தனியா விட்டுட்டு ஓடி வர அப்படி என்ன அவசரம்?'' அதட்டிக் கொண்டே, அடுப்பருகில் தயாரித்து வைத்திருந்த டிபனை எடுத்து வந்தாள் கௌரி.

ஏழு வயதைத்தான் தாண்டியிருந்தான் அவன். ஆனால் பொறுப்பு உணர்ச்சியில் பதினைந்து வயதுச் சிறுவனை மிஞ்சியவன்,



கட்டுப்பாடுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள் என்றாலும் சில சமயங்களில் ரேவதி, தந்தை கொடுக்கும் செல்லத்தில் முரண்டு பிடிப்பது உண்டு.

பூரிக்கு மசாலா உருளைக் கிழங்கைச் சமைக்கா விட்டால் சாப்பிட மறுத்து அடம் செய்வாள்.

ஆனால், சுகுமார் அம்மாவுக்கு அடங்கின அன்பான பிள்ளை. கௌரியின் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேச மாட்டான். தந்தையைவிட தாயாரிடத்தில் ஒரு படி மேலான ஈர்ப்பு.

அம்மா கடையிலிருந்து சாமான்களைக் கனமாக சுமந்து கொண்டு வருவதைக் கண்டுவிட்டால், ஓடிவந்து தன் சிறு கைகளை நீட்டி பையைத் தானே வாங்கிக் கொள்வான். அம்மாவின் கஷ்டங்களைக் காணப் பொறுக்காத அன்பு மகன் அவன்.

சுகுமாரைப்பற்றி கௌரிக்கு மிகவும் பெருமை தான். புத்திசாலித்தனமும் பாசமும் மிகுந்த பிள்ளை, அதே நிலையில் வளர்ந்து ஆளானால் அவளும் அவள் கணவனும் தங்கள் வருங்காலத்தை எண்ணி கவலைப்பட வேண்டியதில்லை. பெற்றவர்களின் பிற்காலத்திற்கு சுகுமார் ஓர் ஆயுள் நிதி போன்றவன். இப்படித் தனக்குள்ளே எண்ணி எண்ணி பூரித்துப் போவாள் அவள்.

கண்களில் மிரட்சியும் காதோரத்தில் வழிந்த வேர்வையுமாக வெளியே வந்து மெல்ல தன்முன் நின்ற மகனை அவள் வியப்போடு பார்த்தாள்.

''சுகுமார். என்னப்பா நடந்தது? ஏன் பயப்படறே?'' மெல்லிய குரலில் அன்போடு கேட்டபடி அவனைத் தன் அருகே இழுத்து, அணைத்துக் கொண்டாள்.

''இன்னிக்கு எனக்கு கடைசி வகுப்பு கிடையாது. எங்க கணக்கு டீச்சருக்குக் காய்ச்சல். லீவு எடுத்திட்டார். பசங்கள்ளாம் வெறுமனே புத்தகத்தை வச்சுகிட்டு வகுப்பில் படிக்கணும்னு உத்தரவு. நான் ஹெட்மாஸ்டர் கிட்டே கேட்டுட்டு ஓடி வந்துட்டேன். மென்று விழுங்கினான் சுகுமார்.

''தங்கச்சியைத் தனியா விட்டுட்டு நீ மட்டும் தனியா வரலாமா?''

''ரேவதியை, பக்கத்துத் தெரு சாரதா பத்திரமா கூட்டி வர ஒப்புக் கொண்டிருக்கா. எனக்கு வீட்டுக்கு ஓடி வரணும் போல இருந்துச்சு. அதான் வந்திட்டேன்.''

''ஏன்? அங்கே அப்படி என்ன நடந்தது? ஒரு நாள் கூடப் பள்ளிக்கூடம் போகாம இருக்கப் பிடிக்காதே உனக்கு?''

''இன்னிக்குப் பள்ளிக்கூடத்திலே இருக்க எனக்குப் பிடிக்கலை அம்மா.''

திடுக்கிட்டுப் போன கௌரி, அவன் முகத்தை நிமிர்த்தி பரிவுடன் பார்த்தாள்.

அவனது விழிக்கடையில் துளிர்த்து மின்னிக் கொண்டிருந்த கண்ணீரைக் கண்டு அவளுக்குத் தாங்க முடியாத கலவரம்.

''சுகுமார், சட்டுனு சொல்லப்பா என்ன நடந்தது?''

''எனக்கு பயமா இருக்கும்மா வந்து... வந்து...'' திணறினான் குழந்தை.

''ரெண்டு நாளா தினம் பகல் சாப்பாட்டு நேரத்திலே எங்க பள்ளிக்கூடத்துக்கு ஒரு அம்மா வந்துகிட்டேயிருந்



தாங்க. நாங்க உட்கார்ந்து சாப்பிடற தோட்டத்திலே வந்து நின்னுகிட்டு வெகுநேரம் என்னையே பார்த்துக் கிட்டிருந்தாங்க.''

பகீர் என்ற உணர்வு வயிற்றைக் கலக்க, கௌரி அதிர்ந்து போனாள். 'பிள்ளை பிடிக்கிறவர்கள் யாராவது குழந்தையைக் குறி வச்சுக்கொண்டு காத்திருக்காங்களா?

''சொல்லுப்பா, சொல்லு சீக்கிரம், அந்தம்மா எப்படி இருந்தாங்க? உன்னாலே பார்த்தா அடையாளம் சொல்ல முடியுமா?''

பதட்டமாகக் கேட்டாள். அவள் உடல் முழுவதும் கிடுகிடுவென்று அச்சத்திலே ஆடியது.

''இன்னிக்கு எங்கிட்டே வந்து பேசினாங்க அம்மா ஒரு சாக்லெட் கட்டியைக்கூட கொடுத்தாங்க.''

''ஐயையோ நீ அதைத் தின்னுட்டியா?''

''இல்லேம்மா, வேறு யாராவது ஏதாச்சு கொடுத்தா சாப்பிடக் கூடாதுன்னு நீங்க சொல் யிருக்கீங்களே. வேண்டாம்னு மறுத்திட்டேன். அவங் நம்ப வீட்டு விலாசத்தைக் கேட்டாங்க. சட்டுனு சொல்லிட்டேன். பிறகு எனக்கு ரொம்ப பயமா போயிடுச்சு. பள்ளிக் கூடத்திலே இருக்கவே பிடிக்கலை அவங்க இங்கே வந்து உங்களுக்கு ஏதாச்சும் தொந்தர கொடுப்பாங்களோன்னு பயந்து போயிட்டேன். அம்மா. நான் நம்ம வீட்டு விலாசத்தைச் சொல்லிட்டே மன்னிச்சிடுங்க அம்மா.''

அச்சமும் கலவரமும் தாளாது குழந்தை கண் கலங் விசும்பினான்.

''அழாதே. பயப்படாம எல்லாத்தையும் சொல்லுப்பா. அந்தம்மா பார்க்க எப்படி இருந்தாங்க? யாருன்னு சொன்னாங்க?''

''முந்தா நேத்து முதல் முதலா அவங்க ஒரு காரில் வந்து தோட்டத்தில் இறங்கினாங்க. இந்த நேரத்திலே வரது யாருன்னு நான் சாப்பாட்டிலிருந்து நிமிர்ந்து பார்த்தேன். கொஞ்ச தூரத்திலே, ஒரு மரத்தடியிலே தன் சிநேகிதிகளோட ரேவதி சாப்பிட்டுகிட்டிருந்தா. அந்தம்மா உசரமா சிவப்பா இருந்தாங்க. கருப்பு கண்ணாடி போட்டு பாதி முகத்தை மறைச்சுக் கிட்டிருந்தாங்க. பரபரன்னு பள்ளிக்கூடத்துக்குள்ளார போனாங்க. பிறகு திரும்பி வந்து காரில் ஏறிப் போயிட்டாங்க. மறுபடி நேத்திக்கும் வந்தாங்க. ஆனால் உள்ளார போகலை. தோட்டத்திலே நான் சாப்பிடற இடத்துக்கிட்டே வந்து நின்னாங்க. பள்ளிக்கூடத்து ஆயாதான் என்னைக் காட்டி என்னமோ சொல்லிட்டாங்க. நான் நேத்தே அந்தம்மாளைப் பார்த்து கொஞ்சம் பயந்து போயிட்டேன்.''

கௌரியின் நெஞ்சு படபடத்தது. பிள்ளை பிடிக்க வருபவர்கள் பெரும்பாலும் பிக்சைக்காரர்களைப் போலத்தான் இருப்பார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறாள். சமீபத்தில் எங்கேயோ ஓர் ஊரில் பிச்சைக்காரி போலத் தெருவிலே போய்க் கொண்டிருந்த பெண்ணை பிள்ளை பிடிக்கிறவள் என்று ஊரார் சந்தேகித்து அடித்துக் கொன்று விட்ட துயரமானதொரு செய்தியைக்கூட பத்திரிகையில் படித்த நினைவு.

ஒரு வேளை உயர்மட்டவாசி வேடத்தில்கூட இந்தக் கூட்டம் குழந்தைகளைக் கடத்த காரும் கையுமாக



அலைகிறார்களோ? அட கஷ்டமே! இதைப் பற்றித் தலைமை ஆசிரியரிடம் பேசி எச்சரிக்கை செய்தால்...?

''இன்னிக்கு மறுபடியும் அந்தம்மா வந்தாங்க. சிவப்புச் சேலை கட்டிக்கிட்டு, தலையிலே நிறைய பூ வச்சுகிட்டு கையில் ஒரு சாக்லெட் பெட்டியைத் தூக்கிட்டு, நேரே நான் சாப்பிட்டுக்கிட்டு இருந்த இடத்துக்கு வந்தாங்க.

''வந்து, ஒரு சாக்லெட் கட்டியை எடுத்து 'தேவநாதன் மகன் சுகுமார் நீ தானே?'ன்னு சொல்லிவச்சாப்பலே கேட்டுக்கிட்டு அதை என்கிட்ட நீட்டினாங்க...' ''ஆமாம், நீங்க யாருன்னு' நான் கேட்டேன். 'சொந்தந்தான். இந்தா வாங்கிக்கோ. வீட்டு விலாசத்தை சொல்லு உங்கம்மாவைப் பார்க்கணும்' னாங்க. படபடவென்று விலாசத்தைச் சொல்லிட்டேன். ஆனால், ஏன் சொன்னோம்னு பிறகு தான் ஒரே பயமாப் போச்சு.

''அவங்க கொடுத்த சாக்லெட்டை வாங்க மறுத்திட் டேன். 'உங்களை எனக்குத் தெரியாதே அம்மா. நீங்க யாருன்னு சொல்றீங்களா?'ன்னு துணிச்சலாகக் கேட்டேன்.''

''அந்தம்மா பெரிசா சிரிச்சாங்க. அவங்க சிரிச்சதைப் பார்க்கக்கூட எனக்குப் பயமா இருந்துச்சு. 'உனக்கு ரொம்ப வேண்டப்பட்டவங்கதான். தங்கச்சி ரேவதி சாப்பிடட்டும். அதுக்காச்சும் இதைக் கொடு'ன்னு மறுபடியும் சாக்லெட்டை நீட்டினாங்க.''

''வேண்டாம்மா. நீங்க யாருன்னு சொல்லுங்கோ. அம்மாகிட்டே சொல்லணும்னு பிடிவாதமாகக் கேட்டேன்.

''நானும் உங்கம்மாளைத்தான் பார்க்கணும். பேசணும் என்னை 'ஆன்டி'ன்னு கூப்பிடுப்பா. என்ன

அப்படி ரொம்ப மிரள்றே? நான் என்ன பூச்சாண்டியா? புடிச்சிக் கிட்டுப் போயிடுவேனா! நாளைக்கு வரேன். நீ வீட்டுக்குப் போறப்போ, என் வண்டியிலே என்னோட வந்து வீட்டைக் காட்டு. உங்கம்மாகிட்டே ரொம்ப பேசணும் அப்படீன்னாங்க. அவங்க போன பிறகு என்னாலே வகுப்பிலே கவனிக்கவே முடியலை அம்மா.

''ஏன் அந்தம்மாவுக்கு உங்களைப் பார்க்கணுமாம். எதுக்காக? வீட்டிலேருந்து ஏதாச்சும் திருடத்தான் அப்படி வந்திருக்காங்களோன்னு என் மனசு அடிச்சுக்கிட்டது. அதனாலேதான் உங்களைப் பார்க்க, உதவி செய்ய, பள்ளிக்கூடம் முடியறதுக்குள்ளே ஓடி வந்திட்டேன்.''

''நாளைக்கும் அவங்க பள்ளிக் கூடத்துக்கு வந்தாக்க நான் என்ன சொல்வது? இங்கே அழைச்சிட்டு வரதான்னு கேட்கத்தான்...''

பேச முடியாது விசும்பினான் அவன்.

யார் அவள்? பிள்ளை பிடிக்கிற கூட்டத்தைச் சேர்ந்தவள் என்றால் தாயைப் பார்க்க வேண்டும் என்று முகவரி கேட்டு குழந்தையை ஏன் வற்புறுத்தவேண்டும்? அப்படி ஏமாற்றி காரில் தன்னுடன் கூட்டிச் செல்லத் திட்டமா?

'திக்திக்கென்று அச்சத்தில் நெஞ்சு துடிக்க, கௌரி அதிர்ந்து போனாள்.

''சுகுமார், நீ அந்தம்மா சொல்கிறபடி ஏதும் செஞ்சிடாதே. எக்காரணங் கொண்டும் அவங்க காரில் ஏறிடாதே. நாளைக்கு பள்ளிக்கூடத்துக்கு நானே வரேன். உங்க ஹெட்மாஸ்டர்கிட்டே அவளைக் கையும் களவுமாய்ப் பிடிச்சுக் கொடுக்கிறேன். ரேவதியை



அவளுக்குக் காட்டிக் கொடுக்கலையே? ஒருவேளை, அவள் இந்நேரம் ரேவதிகிட்டே பேசிக்கிட்டிருக்காளோ?'' பதறினாள் பெற்றவள்.

''இல்லேம்மா, ரேவதிகிட்டகூட நான் இதைப்பத்தி எச்சரிக்கை செய்துட்டுதான் வந்திருக்கேன். சாரதா கெட்டிக்காரி. பார்த்து அழைச்சிட்டு வருவா.''

ஆனாலும் அவளுக்கு மன அமைதி இருக்க வில்லை. யாரோ விஷமக்காரர்கள் அவர்களது குடும்பத்தின்மீது எதற்காகவோ குறி வைத்திருக் கிறார்கள்.

ஒருவேளை அவளது சின்னம்மாவாக இருக்குமோ? சின்னம்மாவுக்கு வயதாகிவிட்டிருக்குமே காரில் வந்து இறங்கும் அளவு காசு பணம் ஏது!

சின்னம்மா பெண்களில் யாராவது? இருக்காது அவர்கள் யாருக்கும் அவளைப் பற்றிய அக்கறை ஏது!

''சுகுமார், அந்தம்மா எப்படி இருந்தாங்கன்னு சொல்ல முடியுமா?''

''கருப்புக் கண்ணாடியைக் கழற்றி, கையில் பிடிச்சுட்டு சிரிச்சப்போ பார்த்துட்டேன் அம்மா. மறுபடியும் பார்த்தாக்கூட என்னால அடையாளம் காட்ட முடியும். உங்களை விட உசரமா, செவப்பா இருந்தாங்க. உதட்டிலே சாயம் பூசியிருந்தாங்க. சிரிச்சப்போ பல்லு வரிசையா உங்க பல்லுபோல பளிச்சினு தெரிஞ்சுதம்மா.''

அப்படியானால் அந்த ஆசாமி, அவளது மாற்றாந்தாய் பெண்களில் யாராவதாக இருக்க முடியாது. அவளது தங்கைகள் அனைவரும் கருத்த நிறத்தில் கட்டை குட்டையான தோற்றமுடையவர்கள்.

பின், அது யாராக இருக்கும்! கார் வைத்து வாழக்கூடிய மேல்மட்டத்து வாசிக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம். எதற்காக அந்தப் பெண் கௌரியைப் பார்த்துப் பேச விரும்புகிறாள்!

அதற்குமேல் அவளுக்கு யோசித்துக்கொண்டு வீட்டிலே நிற்கப் பிடிக்கவில்லை. கதவைத் தாழிட்ட வாறே, ''நீ டிபன் சாப்பிடு, யார் வந்தாலும் கதவைத் திறக்காதே. நான் போய் ரேவதியை கூட்டிட்டு வரேன்'' என்று மகனிடம் சொன்னாள்.

''இல்லேம்மா. நானும்கூட துணைக்கு வரேன்.'' அவனும் அவளுடன் ஒட்டிக் கொண்டான்.

கதவைப் பூட்டிவிட்டுக் கிளம்பினாள். பாதி வழியிலேயே மகளைக் கண்டதும் போன உயிர் திரும்பி வந்து விட்ட மகிழ்ச்சி அவளுக்கு.

குழந்தைகளுக்கு டிபன் கொடுத்தாள். தோட்டத் திற்குள் அவர்கள் ஓடி விளையாடுவதைத் தடுக்கவில்லை. அவள் உடலும் மனமும் பரபரத்துக் கொண்டிருந்தது.

யார் அவள்?... யார்?... யார்?

மறுநாள் அவள் பள்ளிக்கூடத்திற்குப் பகல் உணவு நேரத்தின் போது சென்று, அந்தப் பெண்மணியை நேரில் சந்தித்து விசாரிக்கப் போகிறாள்.

அதுவரை குழந்தைகள் அப்பாவிடம் இது பற்றி மூச்சு விடக் கூடாது. சுகுமாரிடம் மிகவும் எச்சரிக்கை செய்திருந்தாள்.

அன்று இரவும், குழந்தைகள் தூங்கிய பிறகு, வெகு நேரம் கழித்துத்தான் தேவநாதன் வீட்டுக்கு வந்தான்.



பேயறைந்து விட்டவன் போலக் கலவரத்துடன் இருந்தான்.

சாப்பிடப் பிடிக்காது - பேசப் பிடிக்காது - உடைகளை மாற்றிக் கொள்ளத் தோணாது - அப்படியே கட்டிலின்மீது பொத்தென்று சாய்ந்து விட்டான்.

அந்த நிலையில் அவள் ஏதும் அவனிடம் பேச விரும்பவில்லை.

மறுநாள், விரைவாக வீட்டு வேலைகளை முடித்து விட்டு கதவைப் பூட்டிக்கொண்டு கிளம்பிவிட்டாள்.

பள்ளிக்கூடத்து மதில் சுவருக்கு வெளியே நடை பாதையில் பஸ் நிலையத்துப் பயணிகளில் ஒருத்தியாகக் காத்துக் கொண்டு நின்றாள்.

பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்த ஒவ்வொரு வாகனத்தையும் மனிதரையும் மிரட்சியாகக் கவனித்துக் கொண்டு வெகு நேரம் நின்று கொண்டிருந்தாள்.

பகல் உணவு நேரத்தை அறிவிக்க பள்ளியின் மணி அடிக்கப்பட்டது.

தோட்டத்தில் ஒரே ஆரவாரம். கூச்சலும் கும்மாளமுமாக சீருடையில் சிட்டுக் குருவிகள் போலக் குழந்தைகள் ஓடி வந்து ஆளுக்கொரு இடத்தில் அமர்ந்து கொண்டனர்.

அப்போது ஒரு கருப்பு அம்பாசிடர் கார் தோட்டத்திற்குள் விரைவதைக் கௌரி கண்டாள்.

திக்கென்று திகில் உணர்வு நெஞ்சைக் கவ்வ அவள் சட்டென்று திரும்பி விரைவாகப் பள்ளிக்கூடத்திற்குள் புகுந்தாள்.

அவளுக்குக்கூட அந்தக் கூட்டத்தில் சட்டென்று மகனைக் கண்டு கொள்ள முடியவில்லை ஆனால் காரிலிருந்து இறங்கிய அந்த உயரமான பெண்ணுக்கு எப்படியோ தெரிந்து விட்டிருந்தது.

சொல்லி வைத்ததுபோலக் கையில் ஒரு பார்சலுடன் அவள் அந்த பெரிய அரசமரத்தின் அடியிலிருந்த சிமெண்ட மேடையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

சுகுமார் டிபன் பாக்ஸைத் திறந்து வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தான்.

பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கமுடியாமல் வேகமாக முன்னேறினாள் கௌரி.

''இந்தாங்க... நீங்க யார்? தினமும் வந்து என் மகனை எதுக்காக மிரட்டிக் கிட்டிருக்கீங்க?''

பதட்டம் மிகுந்தவளாய், தாங்க முடியாத கோபத்தில் சற்று உரக்கவே கேட்டுவிட்டாள்.

உயர்ந்த பாதணியில் இன்னும் சற்று உயரமாகத் தெரிந்த அந்தப் பெண் திரும்பினாள். ரோஜா வண்ணத்திலே சாயம் பூசிய உதடுகளில் இலேசானதொரு முறுவல் நெளிந்தது.

கண்ணை மறைத்த கருப்புக் கண்ணாடியைக் கழற்றிக்கொண்டு, கௌரியைக் காலிலிருந்து தலைவரை கூர்ந்து பார்த்தாள்.

சுகுமார் சொன்னதுபோல, அவள் பார்க்க அழகாகத் தான் இருந்தாள். தோள்மீது சரிந்து துவண்ட அமெரிக்கன் ஜார்ஜெட்டிலே ஒட்டு மொத்தமான தோற்றத்திலே பணக்காரத்தனம் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.



இந்த மேல் மட்டத்துவாசிக்கு அவளிடம் ஆக வேண்டிய வேலை என்னவாக இருக்கும்? ஊகிக்க முடியாது திகைப்பில் மௌனமாக நின்றுவிட்டாள்.

''நீ வருவேன்னு எனக்குத் தெரியும். அதனாலேதான் இப்படி உன் குழந்தை மூலம் மறைமுகமா சொல்லி வச்சேன். சுகுமாரின் தாயார்தானே?''

''ஆமாம். நீங்க யார்? எதுக்காக என்னைப் பார்க்கணும்னு குழந்தைகிட்ட சொன்னீங்களாம்? விலாசத்தை எதுக்காகக் கேட்டு வாங்கினீங்க?''

கேட்பதற்குள் கௌரிக்கு மூச்சு முட்டியது.

''இப்படி கொஞ்ச தூரத்தில்... குழந்தைகள் கேட்க முடியாத தொலைவில் நின்றுகொண்டு பேசலாமா?''

கையைக் காட்டிவிட்டு, புல்லாங்குழலை ஊதி கொண்டு நின்ற கண்ணன் சிலையருகே இருந் சிமெண்ட் ஆசனத்தை நோக்கி அவள் நகர்ந்தாள்.

சாப்பாட்டை உதறிவிட்டு எழுந்து ஓடி வந் மகனை கையமர்த்தினாள் கௌரி.

''நீ பாட்டுலே போய்ச் சாப்பிடு. நான் இந் அம்மாளைக் கவனிச்சுக்கிறேன்'' என்று அடிக்குரலி கிசுகிசுத்து விட்டு, விடுவிடென்று நடந்து அந் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''நான் யார்னு தெரிஞ்சுக்க நீ ஆசைப்படறத நியாயந்தான்.''

உதட்டை நாவால் ஈரமாக்கிக் கொண்டு கௌ நிமிர்ந்து பார்த்தாள். ஏனோ அவளுக்கு திடீரென்ற விவரம் புரியாததொரு திகில் ஏற்படத் தொடங்கி

விட்டது. ஏதோ வம்பு வழக்கு உண்டாக்கத்தான் இவள் வந்திருக்கிறாள் என்ற கலவரத்தில் மனம் பதை பதைத்தது.

''தேவநாதன் சொல்லாதது என் தவறு அல்ல. அவரைத் தேடிக் கண்டுபிடிக்கவே எனக்கு இத்தனை காலம் பிடிச்சது. பம்பாயிலிருந்து ஓடி வந்து இங்கே ஒளிஞ்சிட்டா யாருக்குமே தெரியாமப் போயிடும்னு அவர் நினைப்பு. ஆனால் உலகம் ரொம்பச் சின்னதுன்னு அவருக்குப் புரியாமப் போனதுதான் பெரிய அதிசயம்.''

''எனக்கு இன்னமும் விளங்கலை. என் கணவர் உங்களுக்குப் பணம் ஏதாச்சும் கடன் பட்டிருக்கிறாரா? அதைத் தீர்த்து முடிக்காமல் வந்துட்டார்னு கோவிச்சுக் கறீங்களா?''

''என்னிடம் அவர் பட்டிருக்கும் கடனை அத்தனை சுலபமாகத் தீர்த்துவிட முடியாது. அதனால்தான் சிரமப் பட்டு ஆள்வச்சு அவரை ஊர் ஊரா... ஆஸ்பத்திரியிலும், ஏன் பிணக்கிடங்குகளிலும்கூட... அப்பப்போ கேட்ட விவரத்தை வச்சு தேடிக்கிட்டிருந்தேன். அவ்வளவு சுலபமா நான் விஷயத்தை விட்டுடற ஆசாமி இல்லேன்னு இப்போ அவர் புரிஞ்சிகிட்டார். இங்கே அவர் எந்த ஆபிசிலே வேலை பார்க்கிறார் என்பதைக் கண்டுபிடிச்சு, நானே நேரில் பார்க்கப் போனதுபோது மனுஷன் அதிர்ந்து போய்விட்டார்.

''உங்களுக்கு கொடுக்க வேண்டிய கடன் ரொம்ப அதிகமா இருந்தாலும் சரி, நாங்க சிரமப்பட்டு எப்படியாச்சும் தீர்த்துடறோம். அதுக்காக குழந்தையை மிரட்டி விட்டீங்களே?



எங்கே வசிக்கிறார் என்பதை அவரோட ஆபீஸ்லே கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேன். ரெண்டு குழந்தைகள் இருக்கு. அதனாலே நான் மன்னிச்சு மறந்துடணும்னு என்னை தினமும் தேவநாதன் கெஞ்சிக் கொண்டுதான் இருக்கார். ஆனால் இது மன்னிக்க முடியாத குற்றம். மன்னிக்கவும் விரும்பவில்லை.''

''விவரமா சொல்லுங்க'' திகிலுடன் கெஞ்சினாள் கௌரி.

''இன்னமும் புரியலையா? அல்லது புரியாதது போல் நடிக்கிறாயா? இரண்டு குழந்தைகளுக்கு நீ தாயாகியிருக்கலாம் ஆனால்...''

''ஆனால்!''

''தேவநாதன் என் கணவர், தெரிஞ்சுக்கோ. உற்றார் உறவினர் முன்னால், கொட்டு மேளத்துடன், அக்கினி சாட்சியாக என் கழுத்திலே தாலிகட்டின கணவர்.''

பூமி நழுவி, பயங்கரமானதொரு பள்ளத்திலே தடதடவென்று விழுந்து கொண்டிருப்பது போன்றதொரு அதிர்ச்சி கௌரிக்கு.

''நீங்க சொல்வது நிஜமா?'' தொண்டையிலிருந்து வெளியே வர சிரமப்பட்ட சின்னக் குரலில் ரகசியமாகக் கேட்டாள்.

''இதோ பார்...'' சொல்லிக் கொண்டே அவள் தன் கைப்பையிலிருந்த ஒரு திருமண அழைப்பிதழையும் புகைப் படத்தையும் எடுத்து நீட்டினாள்.

படத்தில், மாலையும் கழுத்துமாக அவள் பக்கத்திலே புன்முறுவலுடன் தேவநாதன் நின்று கொண்டிருந்தான்

''பம்பாயில் ஹோட்டல் சம்யுக்தாவில் எங்கள் ரிஸப்ஷன் நடந்தபோது எடுத்த படம்'' என்றாள் அவள்.

விரல்கள் நடுங்க, ஓரத்தில் சிறிது கிழிந்து போயிருந்த விலை உயர்ந்த காகிதத்தில் அச்சிடப் பட்டிருந்த திருமண அழைப்பிதழை மெல்லப் பிரித்துப் பார்த்தாள் கௌரி.

பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னால், 'சுபயோகம் கூடிய சுபதினத்தில், பம்பாயைச் சேர்ந்த கனகசபையின் மகள் செல்வி நளினாவுக்கும். காலஞ் சென்ற சொக்க லிங்கத்தின் குமாரர் செல்வன் தேவநாதனுக்கும்...''

மேலே படிக்க முடியாது கண்கள் கலங்க, நெஞ்சு பதற திருமண அழைப்பிதழை மடித்துத் திருப்பி நளினாவின் கையில் கொடுத்தாள்.

''இதெல்லாம்... எனக்கு ஒண்ணுமே தெரியாது. அதனால்...'' கௌரியின் குரல் தாள முடியாத துக்கத்தில் உடைந்தது.

''உனக்குத் தெரியாது என்பதும் எனக்குத் தெரியும். உன்னை உன் வீட்டில் வந்து சந்திக்க விரும்பினேன். ஆனால் அது அவ்வளவு உசிதமாகப்படவில்லை. விரும்பினால் நான் என் உரிமையை அழுத்தமாகச் சொல்லிக்கொண்டு உன் வீட்டிற்குள் புகுந்திருக்க முடியும். குடும்ப கௌரவத்தை உத்தேசித்து நான் எந்தவிதமான குழப்பமும் செய்ய விரும்பவில்லை. எல்லாம் ரகசியமாக, ஊராருக்கு எட்டாத வகையில் நடந்தேறணும்னு என் திட்டம். தேவநாதனுடன் ஒரு மாத காலமாக கடித மூலமும் நேரிடையாகவும் வாதாடி தோற்றுப் போயிட்டேன். இனி உன் மூலமாக முயற்சி செய்யறதுன்னு முடிவோட வந்திருக்கேன்.''



''என்ன சொல்றீங்க?''

''சொல்றது புரியும்னு நினைக்கிறேன். சட்டப்படி அவர் என் கணவர். அதை தெரிவிக்காமல் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டது மகா தவறு. இதை நான் நீதிமன்றத்திலே நிரூபித்துவிட்டால் அவருக்குத் தண்டனை கிடைக்கும். ஒருவேளை ஏழு வருஷத்துக்குச் சிறைவாசம் கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நீ படிச்சவ தானே? பலதார விவாகச் சட்டம் கடுமையாகத் தண்டிக்கிறது. அவர்கிட்டே இதைப்பற்றி பேசி, என் கணவரை என்னோட வந்துவிடும்படி ஏற்பாடு செய்யணும். பம்பாயில் வசதியாக வாழ எங்களுக்கு வீடு... சொந்த வியாபாரம் எல்லாம் இருக்கும்போது, அவர் இப்படி உன்னையும் குழந்தைகளையும் தலையில் கட்டிக்கொண்டு ஓடாகத் தேயத் தேவையில்லை.''

அப்படியானால் இவள் பிள்ளை பிடிக்க வந்தவள் அல்ல. அவளது கணவனையே பிடித்துக் கொண்டு போக வந்திருக்கும் கிராதகி. ஐயையோ! தேவநாதன் இந்த ரகசியத்தை அவளிடம் ஏன் இதுவரை சொல்லவில்லை!

துக்கம் பொங்கி, சுமையாக நெஞ்சையடைக்க கண்களில் நீர் வழிந்தோட, பேசத் தோன்றாமல் அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''உனக்கும் உன் குழந்தைகளுக்கும் ஏதாச்சும் பண உதவி செய்திடறேன். புத்திசாலித்தனமா நடந்துக்கோ. உனக்கு உண்மை தெரியும். அதனால் அவரோட தொடர்ந்து மனைவியா இருக்கப் பிரியமில்லேன்னு அடிச்சிப் பேசிட்டு, உன் ஊரைப் பார்க்கப் புறப்படு. மத்ததை நான் கவனிச்சுக்கறேன்.''

''அப்படிச் செய்யாட்டி.''

''மறுத்தால் நாம் கோர்ட்டில் சந்திக்க நேரும். அவர் செய்த சூதை - ஏமாற்றிய விஷயத்தை அம்பலப்படுத்தி, என் உரிமைகளை நிலைநிறுத்த உங்களை கோர்ட்டுக்கு இழுத்து விடுவேன். உனக்கு நாலு நாள் அவகாசம் தருகிறேன். ஐந்தாவது நாள் பகல் இந்தப் பள்ளிக்கூடத்து வாசலிலேயே வந்து உன்னைச் சந்திப்பேன். முடிவைச் சொல்லிவிடு. நீ வராமல் இருந்தால் நான் உன் முடிவைப் புரிஞ்சுக்குவேன். ஆனால் விட்டுக் கொடுப்பேன்னு கனவு கூடக் காணாதே. நீ உரிமை இல்லாமல் வந்து ஒண்டிகிட்டிருக்கிறவ. நான் சட்டப்படி அவர் மனைவி. மறந்துடாதே. இந்தா உன் குழந்தைகளுக்கு...''

கையில் வைத்திருந்த பார்சலை கௌரியிடம் நீட்டினாள் நளினா.

''வேண்டாம் அம்மா. இதெல்லாம் எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டியது என் கணவர். என் குழந்தைகளின் தந்தை.''

சொல்லி முடிக்குமுன் துயரத்தில் விம்மி விட்டாள்.

''வேண்டாம் என்றால் அக்கறை இல்லை. ஆனால் இந்தக் கண்ணீருக்கும் கெஞ்சலுக்கும் மிஞ்சினவ நான். புரிஞ்சுக்கோ. ஒரு மாச காலமா தேவநாதன் இப்படித் தான் என் காலில் விழாத குறையாக கெஞ்சிக் கொண்டு, அழுது கொண்டு... அடம்பிடிக்கிறார். ஆனால் யாருக்கும் மசியப்போவதில்லை. நினைப்பு வச்சுக்கோ. இன்னிக்கு ஐந்தாவது நாள். இதே இடத்தில் நீ உன் முடிவை எனக்குச் சொல்லியாகணும், வராதிருந்துவிட்டால், பிறகு நீ வருத்தப்படுவே.''



படபடவென்று கூறிவிட்டு, அவள் எழுந்து சென்று காரில் ஏறிக் கொண்டாள்.

தன்னைச் சுற்றிலும் உள்ள கட்டடமும் பூமியும் அதிர்ந்து பொடியாகி, புகையாக மறைந்துவிட்டது போலவும் எங்கேயும் ஒரே இருட்டாகி விட்டது போலவும் ஒரு பயங்கர அதிர்ச்சியில் கௌரி உறைந்து போய் சிலையாக உட்கார்ந்து விட்டாள்.

## 5

தாயை இழந்த பின்னர், சின்னம்மாவிடம் கௌரி எண்ணற்ற சிறுமைகளை அனுபவித்தவள்தான். அடி, உதை, பட்டினி என்று... பலவகையான கொடுமை.

ஆனால் தேவநாதன் தனது கணவன் இல்லை வேறு ஒருத்திக்குச் சொந்தமானவன் என்ற உண்மையை அவளால் ஏற்கவே முடியவில்லை. நளினா கொடுத்த அதிர்ச்சியின் கொடுமையைத் தாளமுடியாது அவளது நெஞ்சு உடைந்துவிடும் போல் வலித்தது.

குழந்தைகளுக்குத் தனது மனப்போராட்டம் தெரியக்கூடாது என்ற கவலையில், போலியாக முறு வலித்துக் கொண்டு அவர்களுக்கு சோறு போட்டு படுக்க வைப்பதற்குள் நேரம் யுகமாகக் கனத்தது. அவளையும் மீறி பொங்கி எழுந்த அழுகை தொண்டையை அடைத்துக் கொண்டது. அடிக்கடி நெருப்பாகக் கண்ணீர்த்துளிகள் இமைகளைச் சுட்டன.

அன்று இரவும், வெகுநேரம் சென்ற பின்னர்தான் தேவநாதன் வீட்டுக்கு வந்தான். கவலை தோய்ந்த

முகத்துடன மௌனமாக சாப்பிட விரும்பாமல், அலுவலக உடைகளைக் களைந்துவிட்டு, லுங்கியைச் சுற்றிக்கொண்டு கட்டிலின் மீது சாய்ந்து விட்டான்.

இப்போதுதான் அவளுக்கு இதன் காரணம் தெரிந்து விட்டதே!

அவன் ஏதும் பேசவில்லை. அவளும் எதையும் சொல்லவில்லை.

நீலவானத்தினின்று விழுந்த நெருப்பு இடிபோல அந்தச் செய்தி அவளது உணர்வுகளைப் பொடிப் பொடியாக்கி விட்டிருந்தது. தானும் குழந்தைகளும் தனியாகி விட்டது போன்ற பிரமையில் அவள் தவித்தாள். அருகில் பாயின்மீது படுத்துக் கிடந்த மகளை இழுத்துத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

சுகுமாரின் உடல் நடுங்குவதை உணர்ந்து திடுக்கிட்டுப் போனாள். இரவு வெகு நேரம் ஆகியும் அவனும் தூங்கவில்லை!

''அம்மா, அந்த உயரமான அம்மாள் உங்ககிட்டே பேசினாங்களே, என்ன சொன்னாங்க?'' மிகவும் இரகசியமாகக் கேட்டான்.

''ஒண்ணுமில்லை. வியாபார விஷயம். உனக்குப் புரியாது கண்ணா.''

''அவங்க உங்களைக் கோவிச்சுக்கிட்ட மாதிரி பேசினாங்களே! அவங்க மூஞ்சியைப் பார்த்து நான் பயந்திட்டேன்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை நீ பேசாம தூங்கு'' அவன் முதுகை மெல்லத் தட்டிக் கொடுத்தாள்.



அவளுக்குப் பயமாகத்தான் இருந்தது. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, தேவநாதனை அவளிடமிருந்து பிரிக்க திடீரென்று நளினா எதற்குப் பம்பாயிலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறாள்?

கணவனிடம் மனம் விட்டுப் பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லையே!

அந்தப் பிடிவாதக்காரி அசைந்து கொடுக்காததன் விளைவுதானே தேவநாதனை இப்படிக் கவலை பிடித்த மனிதனாக மாற்றி விட்டிருக்கிறது? எளிதாக அந்தச் சிக்கலிலிருந்து விடுவித்துக்கொள்ள முடிந்தால் அவர் சங்கதியை அவளிடம் எப்போதோ சொல்லியிருப்பாரே!

இந்தச் சிக்கலை அவள் எப்படி சமாளிக்கப் போகிறாள்? பலவாறு எண்ணி, துயரத்தில் குமுறி, இரகசியமாகக் கண்ணீர் உகுத்தபடி, உறக்கமின்றி அவள் புரண்டு கொண்டிருந்தாள்.

நேரம் நத்தையாக நகர்ந்து மூன்று தினங்கள் ஓடிவிட்டன. நான்காவது நாள் காலை, குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பிவிட்டு, அவள் கடைத் தெருவுக்குச் சென்றாள்.

சமையலுக்குத் தேவையான சாமான்களை வாங்கி, துணிப்பையில் நிறைத்துக் கொண்டு, தூக்கமாட்டாது சுமந்து கொண்டு, அவள் பலவும் எண்ணியபடி வீட்டை நோக்கி மெல்ல நடந்து கொண்டிருந்தாள்.

நகரத்தின் அந்தப் பகுதியில் அவர்கள் வசிக்கத் தொடங்கியதிலிருந்து யாரிடமும் அவர்கள் நெருங்கிப் பழகியதில்லை. அதனால் ஆபத்துக் காலத்தில் ஆலோசனை சொல்ல நண்பர்கள் என்று யாரும் கிடையாது.

குழந்தைகளுடன் அடைக்கலம் தேடி பிறந்த வீட்டின் பக்கம் அவள் போகவே முடியாது.

வீட்டைவிட்டு வெளியேறிய பெண் - எங்கே போயிருப்பாள் என்று சின்னம்மாவோ மற்ற உறவினர்களோ தேடியதாகவே தெரியவில்லை. அவர்கள் வரைக்கும் அவள் இறந்து போனவள். ஆகவே அந்தப் பக்கம் போக முடியாது.

பின்னர்?

அவள் வேறு என்ன செய்ய முடியும்?

ஒருவேளை நளினா அவளை வீணாகப் பயமுறுத்துகிறாளோ என்னவோ?

திடீரென்று நடைபாதையில் நின்றுவிட்டாள்.

சாலை ஓரத்தில் இடது பக்கம் தெரிந்த ஒரு வீட்டின் முன்னால் தொங்கிய பெயர்ப்பலகை கண்களில் பட்டது. அது அவளது கவனத்தைக் கவர்ந்தது.

மனதிற்குள் உடனடியாக துணிவும் ஒரு யோசனையும் பிறந்தன.

வக்கீல் சந்தானம் நீதிமன்றத்துக்குக் கிளம்ப வெகு நேரம் இருந்தது. குளியல், சாப்பாடு எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு வெற்றிலையை மென்றவாறு அவர் தமது ஆபீஸ் அறையில் பைல்களைப் பார்வையிட்டபடி குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

சுவர் ஓரமாகக் கிடந்த பெஞ்சுகளில் கட்சிக்காரரர் யாரையும் காணவில்லை.

வாயிற்படியில் நிழலாடுவதைக் கண்டு 'விசுக்'கென்று நிமிர்ந்தார் சந்தானம்.



''உங்களைப் பார்க்கணும் சார். உள்ளே வரலாமா?'' தய்க்கத்துடன் கேட்டபடி கௌரி நின்றாள்.

அவர் தலையை அசைத்து உத்தரவு கொடுத்ததும், மெல்ல உள்ளே நுழைந்தாள். கையில் கனத்த பையை பெஞ்சு மீது வைத்துவிட்டு, அவர் காட்டிய பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''ஒரு பிரச்சனை சார். உங்க ஆலோசனை தேவை. அதுக்கு உங்க பீஸ்?''

அவளை ஏற இறங்கப் பார்த்தார் சந்தானம்.

இடுப்பில் நூல் சேலை, காதுகளில் முத்துத்தோடு, கையில் ஒரே ஒரு வளையல், கழுத்திலே ஒரு மெல்லிய தாலிச்சரடு... சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்.

''ஆலோசனைக்கு ஐம்பது ரூபாய் பீஸ். பிறகு கேஸ் எடுத்து நடத்தணும்னா...''

''ஆலோசனை மட்டும் போதும் சார். முன் கூட்டியே விசாரிக்காது, நேரத்தை நிர்ணயிக்காது திடுதிப்னு வந்ததுக்கு மன்னிச்சிடுங்க சார். சார் நான் ரொம்ப வசதியானவ இல்லை. அதனால்...''

பேச முடியாது தடுமாறினாள். கண்களில் நீர் திரண்டு கொண்டு வந்தது.

உதட்டை மடித்துக் கொண்டார் வக்கீல் சந்தானம்.

''முதலில் கேட்க வந்ததை சொல்லுங்க. பீஸைப் பத்தி பின்னால் பேசலாம்.''

அனுதாபத்துடன் சொன்னார்.

''எனக்குக் கல்யாணமாகி ஒன்பது வருஷம் ஆச்சு. இரண்டு குழந்தைகள். அவருக்கு ஏற்கெனவே ஒரு

மனைவி இருக்காங்கிற சங்கதி இப்பத்தான் தெரிய வந்தது.''

''அப்படியானால், உங்க திருமணம் செல்லுபடியாகாதே.''

''கோவிலில் வச்சு நடந்த கல்யாணம் சார்.''

''எங்கே வச்சு நடத்தியிருந்தாலும் சட்டப்படி அது செல்லாத விஷயம். ஒரு மனைவி உயிரோட இருக்கும் போது அவளை விவாகரத்து செய்து ஒதுக்காம, ஒரு மனிதன் ரெண்டாவது திருமணம் செய்து கொள்ள முடியாது. செய்திருந்தால் அது சட்டப்படி செல்லுபடியாகாத திருமணம். ரெண்டாவதாக வந்த பெண் இவனுடன் வாழ்ந்தாலும் கூட அவளை அவன் மனைவி என்று சட்டம் ஒப்புக் கொள்ளாது.''

''அப்படீன்னா?''

''சட்டத்தின் கண்ணோட்டத்திலே அவள் அவனது வைப்பு அவ்வளவுதான்.''

''குழந்தைகள் இருந்தால்?''

''குழந்தைகளுக்கு நியாயமான அந்தஸ்து கிடைக்காது. வைப்புக்குப் பிறந்த குழந்தைகளாகத்தான் சட்டம் கருதும்.''

''முதலில் திருமணம் செய்துகொண்ட மனைவி கணவனிடமிருந்து வெகுகாலம் பிரிந்திருந்தால்?''

''பிரிவு எத்தனை வருஷமாக இருந்தாலும், அவள் மீண்டும் வந்து உறவு அமைத்துக் கொள்ளலாம். மனைவி என்ற உரிமையைக் கொண்டாடலாம்.''

''கணவன் அவளை ஏற்க மறுத்தால்?''



''அவள் நீதிமன்றத்தில் வழக்காடலாம். தான் உயிருடன் இருக்கையில் சட்ட விரோதமாக கணவன் இன்னொரு பெண்ணை மணந்துகொண்டு அவளுடன் வாழ்கிறான் என்று நிரூபித்து, கணவனுக்குத் தண்டனை வாங்கித்தர முடியும். பெண் ஒருத்தி பொங்கி எழுந்தால் அவள் என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும். கட்டின கணவன் தன்னை ஏமாற்றிவிட்டு, இன்னொரு பெண்ணைத் திருட்டுத்தனமாகக் கல்யாணம் செய்து கொண்டான் என்பதை நிரூபிக்க முடிந்தால், நீதி அந்தக் கணவனுக்கு சிறைத் தண்டனை கொடுக்கும். அத்தனை அளவு கட்டின மனைவிக்கு இந்த விஷயத்தில் உரிமை இருக்கிறது.''

''தண்டனை மிகவும் கடுமையாக இருக்குமோ?''

''இந்தக் குற்றத்துக்காக கணவனுக்கு ஏழு வருஷம் சிறைவாசம் கொடுக்கலாம் என்று சட்டம் கூறுகிறது.''

''வேறு வழி?''

''வேறு என்ன வழி இருக்கு? மனைவியும் கணவனும் நீதிமன்றம் வரை போகாமல், தங்களுக்குள்ளேயே இந்தப் பிரச்னைக்கு முடிவு கட்டிவிட்டால் சரி, இல்லாவிட்டால் தாம்பத்திய உரிமை கோரி மனைவி அவன்மீது வழக்குத் தொடர முடியும். கட்டின மனைவியுடன் சேர்ந்து வசிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கணவனை வற்புறுத்த முடியும். தாலி கட்டிய மனைவிக்கு சட்டத்தின் ஆதரவு ரொம்பவும் பக்க பலமா இருக்கும் அம்மா. இன்னும் ஏதாவது கேட்கணுமா?''

''வேண்டாம் சார், விவரமா சொல்லிட்டீங்க. நன்றி.''

பரபரப்புடன் மணிப்பர்சைத் திறந்து துழாவினாள், கடையில் சாமான் வாங்கிய செலவுபோக ஐம்பது ரூபாய் இருந்தது.

''பெயர், முகவரி எல்லாம் சொல்லுங்க. ஆலோசனைக்கு அதிகநேரம் எடுத்துக் கொள்ளாததால் பாதி பீஸ் போதும்'' என்று கனிவுடன் சொன்னார் வக்கீல் சந்தானம்.

பணத்தை எண்ணி மேஜைமீது வைத்துவிட்டு, ரசீதுடன் அவள் வெளியே வந்தாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. குப்பென்று பூத்த வியர்வையில் ஆடை நனைந்து போயிற்று. மேனி முழுவதிலும் நடுக்கம் பரவி கால்கள் தள்ளாடுவதை உணர்ந்தாள்.

அப்படியானால் இந்தப் பிரச்சனைக்கு முடிவே கிடையாதா? அவளும் குழந்தைகளும் அனாதையாகி விடப் போகிறார்களா?

சின்னம்மா அவளை அதிகம் படிக்கவைக்க வில்லையே? பெரிய படிப்பு படித்தவர்களே வேலை கிடைக்காது திண்டாடும் பட்டிணத்தில் அவள் இரண்டு குழந்தைகளுடன் எப்படிச் சமாளிக்க முடியும்?

ஐயையோ, அவள் இனி என்ன செய்வாள்?

பலவும் எண்ணி, தனக்குள் எழுந்த துயரத்தைக் கட்டுப்படுத்த முடியாது கண்ணீரைச் சிந்திக்கொண்டு மெல்ல நடந்து வீட்டையடைந்தாள்.

வழக்கம் போலவே அவளுக்கும் கணவனுக்கும் இடையே மௌனம் நிலவியது.



தானாக முன்வந்து, அவள் தெரிந்து கொண்டதாக எதையும் சொல்லவில்லை. தேவநாதனும் வாயைத் திறக்கவில்லை.

ஐந்தாவது நாள் காலை.

குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்றபின், அவள் வீட்டைப் பூட்டிக்கொண்டு அருகிலிருந்த பராசக்தி கோயிலுக்குக் கிளம்பினாள்.

வெள்ளிக்கிழமை தோறும் மாலை வேளையில் அவள் அந்த கோயிலுக்குப் போய் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

யாரிடமும் மனம் விட்டுச் சொல்ல முடியாது முகுறிக் கொண்டிருந்த உணர்வுகளை, அம்பிகையின் சந்நிதியில் கொட்டி அழவேண்டும் போன்றதொரு தாபம் அவளுக்கு.

அவள் கோயிலுக்குள் சென்றபோது, அர்ச்சகர் தீப ஆராதனை செய்து கொண்டிருந்தார்.

இருட்டும் வெளிச்சமுமாகச் சுழன்ற கற்பூர ஜோதியில் இலேசாகத் தெரிந்த அம்பாளின் திருமுகத்தைக் கண் கொட்டாது பார்த்துக்கொண்டு நின்றாள்.

''ஜோதியை வணங்கிக்கோங்க... பிரசாதத்தை வாங்கிக்கோங்க...''

அர்ச்சகரின் குரல் அவளை விழிப்புறச் செய்தது.

உள்ளங்கையில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த சில்லறையைத் தட்டில் போட்டுவிட்டு, ஜோதியை வணங்கினாள். குங்குமப் பிரசாதத்துடன் கோயிலை

விட்டு வெளியே வந்தபோது மனம் இலேசாகி விட்டது போன்றதொரு பிரமை ஏற்பட்டது.

கண்ணாடி முன், காகிதப் பொட்டலத்தை திறந்து குங்குமத்தை விரலால் தொட்டு நெற்றிமீது பெரிய பொட்டாக வைத்துக்கொண்டபோது அவளையும் அறியாமல் கண்களில் நீர் பெருகிக் கன்னங்களில் வழிந்தது.

அந்தக் குங்குமம் அவளுக்கு நிலையானதொரு பாக்கியமாக அமையாமல் போய்விடுமோ?

அவள் என்ன தவறு செய்தாள்? அவளது குழந்தைகள் செய்த தவறு என்ன? அவர்கள் இந்தக் குழப்பத்தினால் வாழ்க்கையில் ஏன் வஞ்சிக்கப்பட வேண்டும்?

ஏன்?... ஏன்?...

திடீரென்று அவளுக்குள் ஒரு துணிவான முடிவு உருவாகியது.

நளினாவுக்கு அவள் அஞ்சப் போவதில்லை. அவள் கேட்டுக்கொண்டபடி எந்தவிதமான முடிவுடனும் அன்று அவளைப் போய்ச் சந்திக்கப் போவதில்லை.

''கோர்ட்டில் சந்திப்பேன்'' என்று அச்சுறுத்தினாளே? சந்திக்கட்டும். எத்தனை கோர்ட்டுகளில் வேண்டுமானாலும் நளினா ஏறி இறங்கட்டும். அவள் மௌனமாக பிடிவாதமாக தொடர்ந்து தேவநாதனின் அன்பு மனைவியாக வாழப் போகிறாள். நளினாவினால் ஆனதைச் செய்து கொள்ளட்டும்.

ஆவேசம்போல எழுந்த தீர்மானத்திலே கௌரி தன் கவலைகளை உதறிவிட்டு வேலைகளைக் கவனிப்பதில் முனைந்தாள்.



## 6

இரண்டு மாதகாலம் சந்தடியின்றி வேகமாக ஓடியது. தேவநாதன் வீட்டுக்கு நேரத்துடன் வரத் தொடங்கினான். கவலையில் வாடியிருந்த அவன் முகத்தில் பழைய களை மெல்ல மெல்லப் பரவி பிரகாசிக்கத் தொடங்கியது.

குழந்தைகளுடன் பழையபடி உற்சாகத்துடன் கொஞ்சி விளையாடினான். மனைவியுடன் பரிவுடனும் பாசத்துடனும் பேசினான். வீடு பழைய நிலைக்கு விரைவில் திரும்பியது.

நளினாவைப் பற்றி மறந்து, தான் - தனது குடும்பம் - கணவன் - வீடு என்ற வட்டத்திற்குள் கௌரி மறுபடியும் புகுந்து கொண்டுவிட்டாள்.

ஆனால், அது கனவல்ல என்று நிரூபிப்பதுபோல அன்று காலை தபாலில் அவளுக்கு ஒரு ரிஜிஸ்டர் கடிதம் வந்தது.

பரபரப்புடன் பிரித்தாள்.

அது ஒரு வக்கீல் நோட்டீஸ்.

''ஏற்கனவே திருமணமான தேவநாதன் என்பவருடன் மறுபடியும் திருமணம் செய்து கொண்டு வாழ்வதாகத் தெரிவதால் அவள் மீது ஏன் வழக்குத் தொடரக் கூடாது என்பதற்கு உடனடியாக சரியான விளக்கம் தெரிவிக்க வேண்டும். இல்லையென்றால் சென்னை மாநகர் சிவில் கோர்ட்டில் வழக்குத் தொடரவிருக்கிறது...'' என்று பயமுறுத்தலாக, சட்டத்திற்கே உரிய தனி மொழியில் நளினாவின் வக்கீல் செல்வகுமா

ஒரு தடவைக்குப் பல தடவை தட்டுத் தடுமாறி அந்த நோட்டீசை அவள் படித்தாள். நல்லவேளை, பெங்களூரில் கிடைத்த கான்வென்ட் படிப்பு கை கொடுத்து உதவியது. பெரிய வார்த்தைகளைப் போட்டு வக்கீல் பயங்காட்டிய அந்த அறிக்கையைப் படித்து ஓரளவு நிலைமையைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

வீட்டுக்குத் திரும்பிய தேவநாதனின் முகம் வெளிறிக் கிடந்தது.

''கௌரி, உன்னோட கொஞ்சம் தனியாகப் பேசணும்.''

சொல்லிக்கொண்டே அறைக் கதவை மெல்லச் சாத்திவிட்டு, தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடித உறையைக் கையில் எடுத்தான்.

கௌரிக்குப் புரிந்துவிட்டது. அவளுக்கு வந்தது போல அவனுக்கும் வக்கீல் நோட்டீஸ் வந்திருக்கிறது.

நளினா அன்று சொன்னதை உண்மையென்று காட்டி விட்டாள்.

அதே பயமுறுத்தல் வாசகம் கொண்டு வக்கீலின் அறிக்கை. அவனுக்கு அலுவலக முகவரிக்கு அனுப்பப் பட்டிருந்தது.

கௌரி, இவ்வளவு காலமும் உனக்கு நான் ஒரு உண்மையைச் சொல்லாமல் மறைத்து விட்டேன். அதன் விளைவுதான் இந்த நோட்டீஸ். கௌரி வந்து...'' என்று தடுமாற்றத்துடன் பேச ஆரம்பித்தான் தேவநாதன்.

''எனக்கும் இந்த மாதிரி ஒரு நோட்டீஸ் வந்திருக்கு. நீங்க சொல்லப் போகிற உண்மை எனக்கு ஏற்கெனவே தெரியும். உங்கள் மனைவி நளினாவை ரெண்டு



மாதங்களுக்கு முன்பு சந்திக்க நேர்ந்தது. அவள் எல்லாம் சொல்லி விட்டாள்.''

படபடவென்று பேசினாள் கௌரி. தேவநாதன் அயர்ந்து போய்விட்டான்.

''உண்மை தெரிந்ததாக நீ கொஞ்சம்கூட காட்டிக்கலையே ஏன்?''

வியப்பும் துயரமும் ஒரு சேரக் கேட்டான்.

''உண்மையை நீங்க எனக்கு முன்னதாகவே சொல்லலையே அது ஏன்?''

பதட்டமாகப் பதிலுக்குக் கேட்டு விட்டாள்.

அறைக்குள்ளேயே முன்னும் பின்னுமாக ஆலோசனையுடன் உலாவினான் அவன்.

''சொல்லியிருக்க வேண்டிய உண்மைதான். ஆனால் சொல்ல விரும்பலை கௌரி'' தழுதழுத்தான்.

''ஏன்?''

''உன்னை இழக்க விரும்பலை. உன்னை மனைவியா ஏத்துக்கணும் என்கிற சுயநலம்.''

ஒரு சில விநாடிகள் அமைதியாக இருந்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான் தேவநாதன்.

''ஆரம்பத்தில் அப்படிப்பட்ட எண்ணம் எனக்கு ஏற்படவேயில்லை, ஆனால் பழகத் தொடங்கின சில நாட்களில் நான் புரிஞ்சுக்கிட்டேன். உன்மேல எனக்கு அன்பு ஏற்பட்டுவிட்டது. உன்னை மனைவியாக ஏத்துக்கொண்டு உன்னோடு வாழவேணும் என்கிற ஆசையை அடக்க முடியலை. ஏன் தெரியுமா? நான் மணவாழ்க்கையில் நொந்து அடிபட்டுப் போனவன்.''

''எனக்கு அந்த உண்மையை ஆரம்பத்திலேயே சொல்லி இருக்கலாமே?''

''சொன்னால் நீ மணந்து கொள்ள மறுத்து விடலாம் என்கிற பயம். நீ இல்லாமல் வாழ முடியாது என்பது போன்றதொரு மலைப்பு எனக்கு ஏற்பட்டிருந்தது. கௌரி... விவரமா என் உணர்வுகளைச் சொல்ல முடியலை. உன்னை நான் காதலிச்சேன். உண்மையில் இந்த உலகத்தில் நான் காதலிச்ச ஒரே ஒரு பெண் நீதான் போதுமா?''

''நளினா உங்கள் மனைவி. அப்படியிருக்கும் போது...?'' கௌரி அவனை உற்றுப் பார்த்தாள்.

முகம் இறுகிப் போனான் தேவநாதன்.

''உண்மை கௌரி நளினா என் மனைவி. ஒப்புக் கொள்கிறேன். எந்த நிலையில் அவள் எனக்கு மனைவியானாள் என்பதையும் சொல்லிடறேன். என்னைப்பற்றி இதுவரை நான் எதுவுமே சொன்னதில்லை.''

''பெத்தவங்களை சின்ன வயசிலே இழந்து விட்டவன் நான். சித்தப்பாக்கிட்டே வளர்ந்தேன். நான் எம்.பி.ஏ. படிச்சு, ஒரு வேலையில் அமருவதற்குள் அவரும் போயிட்டார். நளினாவின் அப்பாவுடைய பெரிய வியாபார நிறுவனத்திலே வேலை கிடைச்சது. சேர்ந்தேன். என் திறமையில் அவர் ரொம்பவும் கவரப்பட்டார். என்னிடம் பிரியமாகப் பழகினார்: இதனால் அவரது மலபார் ஹில் பங்களாவுக்கு நான் அடிக்கடி போய் வருவது உண்டு. நளினா, அப்பாவுக்கு ஒரே மகள். படு செல்லம். பார்க்க அழகி! படித்தவள் என்றாலும் பதட்டமானவள். அகங்காரம் பிடிச்சவள்.



இதையெல்லாம் கொஞ்சம் நெருங்கிப் பழகத் தொடங்கின போதுதான் தெரிஞ்சுகிட்டேன்.''

''மெல்ல விலகிடனும் நட்பை நெருக்கமாக்கிக் கொண்டு அவதிப்படக்கூடாது என்று நான் முயலும் சமயத்தில்தான் அவள் என்னிடம் வெளிப்படையாகக் கேட்டுவிட்டாள். என்னை மிகவும் விரும்புவதாகவும், அவளை நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் தானே வலியவந்து என்னிடம் கேட்டுவிட்டாள். மகிழ்ச்சிக்குப் பதிலாக பெருத்த குழப்பமும் அச்சமும் தான் எனக்கு ஏற்பட்டது.

''எனக்கு மனைவியாக வரப்போகிறவளிடம் நான் சில தகுதிகளை எதிர்பார்த்தேன். அவைகளில் ஒன்றுகூட நளினாவிடம் கிடையாது என்பதை அறிந்துதான் நான் மெல்ல விலகத் தொடங்கியிருந்தேன். நளினாவுக்கு தான் பணக்காரி என்ற நினைப்பு அதிகமாகவே இருந்தது. எடுத்தெறிந்து பேசும் கெட்ட குணம், முன்கோபம், பிடிவாதம் - எல்லாம் அவளிடம் இருந்தது.''

''இவையெல்லாவற்றையும்விட நான் விரும்பாத மற்றொரு குணமும் அவளிடம் கூடியிருந்தது. அவர்கள் வீட்டிற்கு நெருக்கமான பழக்கம் உள்ள என்னையொத்த மற்ற வாலிபர்களுடன் அவள் சகஜமாகப் பழகியது - பேசியது எனக்குப் பிடிக்காத விஷயம். ஆணுக்கு நிகராக சரிசமமாகப் பேசுவதில் தவறு இல்லைதான். மனைவியாக ஏற்படவிருக்கும் ஒரு பெண், மற்ற ஆண்களுடன் மிக நெருக்கமாகப் பேசிப் பழகுவதை சாதாரணமாக என் போன்ற ஆண்கள் விரும்பமாட்டார்கள். ஒரு வகையான குறுகிய நோக்கம் என்று வைத்துக் கொள்ளேன். எனக்குப் பிடிக்கவில்லை. அந்த நிலையில்தான் அவள் என்னைச்

திருமணம் செய்து கொள்வதாகக் கூறியபோது நான் மறுத்து விட்டேன். உங்க அந்தஸ்துக்கு ஒத்துவராத மாப்பிள்ளை நான், இந்த எண்ணத்தைக் கை விட்டு விடுங்கன்னு தட்டிக் கழிச்சேன்.''

''அப்புறம் எப்படி மனம் மாறி அவளைக் கல்யாணம் செய்தீங்க?''

''மனம் மயங்கும்படி வற்புறுத்தப்பட்டேன். நளினாவின் தந்தை என்னைக் கூப்பிட்டு, பலவாறு பேசி வற்புறுத்தினார். எனது வருங்காலத்தையே வளமாக்கும் தகுதி தம் கையில் இருப்பதாகவும் அவர் மகளை மணந்து கொண்டால் அந்த நிறுவனத்துக்கே நான் விரைவில் தலைவனாக முடியும் என்றெல்லாம் கூறி மனத்தைக் குழப்பும் வகையில் வேப்பிலை அடித்தார். பணம் - பதவி - அந்தஸ்து - இதெல்லாம் என்னை மயக்கத்தான் செய்தன. முடிவில் அவரது வலையில் விழுந்தேன்.''

''கல்யாணமான சில மாதங்களில் நளினாவின் தந்தை இறந்து விட்டார். அதன் பிறகுதான் அவளுடைய உண்மை உருவம் வெளிப்பட்டது. அத்தனை பெரிய நிறுவனத்திற்கு அவள் தலைவியானாள். ஏற்கெனவே திமிர் பிடித்தவள் இப்போது கையில் பிடிக்க முடியவில்லை.''

''கணவன் என்ற மதிப்பே இல்லாமல் என்னை ஆட்டிப் படைக்கத் தொடங்கினாள். அன்புக்குப் பதிலாக வெறுப்புதான் என்னுள்ளே வேகமாக வளர்ந்தது. எங்களுக்கு பேச்சு வார்த்தை இல்லாத அளவுக்கு விரோதம் மூண்டது. அப்போதுதான் என்னை மேலும் மட்டம் தட்ட அவள் தன் அலுவலகத்து ஊழியர்கள் முன்னால் என்னைக் குறைத்துப் பேசிக் கண்டிக்க ஆரம்பித்தாள்.



மானேஜர் ஐயாவா? அவருக்கு வேலை என்ன தெரியும்? பணக்காரப் பெண்ணை ஏமாத்திக் கட்டிக்கிட்டு, பதவியிலே உட்கார்ந்திட்டான் மடையன் என்றெல்லாம் சொன்னார்கள். அலுவலகத்துப் பையன்கள் வரை அசிங்கமாகப் பேசத் தொடங்கிவிட்டனர்.''

''அன்பும், பண்பும், மரியாதையும் இல்லாத மனைவியோட தொடர்ந்து வாழ்வதென்றால் நான் மிருகமாகத்தான் இருக்கணும். ஆனால் மனிதனாக இருந்து ரொம்பவும் தவித்துப் போனேன். எங்களுக்குள் தினமும் சண்டை, மண்டை உடைந்தது. இந்த நிலையில் அவளுடன் நீடித்து வாழ்வதைவிட பிரிந்து விடுவதே மேல் என்று நினைத்தேன். விவாகரத்து செய்து கொள்ளலாம் என்றேன். ஆனால் அவள் மறுத்துவிட்டாள். எனக்கு வேறு வழி தோணவில்லை சொல்லாமல் கொள்ளாமல், போட்டுக் கொண்டிருந்த சட்டை பாண்டுடன் வெளியேறி விட்டேன்.

''பத்திரிகைகளில் விளம்பரம் செய்தாள். பாடுபட்டுத் தேடினாள். நான் எந்த அலுவலகத்திலும் வேலை ஏற்காது தெரிந்த நண்பன் ஒருவனுடன் கொஞ்ச காலம் ஒளிந்து வாழ்ந்தேன். பிறகு தைரியமாக ஒரு வேலையைத் தேடிக் கொண்டேன். ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு மிகவும் எளிமையாக வாழ்ந்து கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில்தான் வெளியூருக்குச் சென்ற நண்பனின் வீட்டை கவனித்துக் கொள்ள சம்மதித்து அவன் வீட்டில் தங்கியிருந்தேன். காய்ச்சல் வந்து, வேலைக்குப் போகாமல் படுத்துக் கிடந்தபோதுதான் நீ வந்தாய். அப்புறம் நடந்ததுதான் உனக்குத் தெரியுமே.''

மூச்சு விடாது எல்லாவற்றையும் சொல்லி முடித்தான் தேவநாதன்.

முழங்காலைக் கட்டிக்கொண்டு சிந்தனையுடன் கௌரி தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அருகில் வந்து தரையில் உட்கார்ந்து கொண்டான் அவன். அவளது முகத்தை நிமிர்த்தி, பரிவுடன் பார்த்தான்.

''இப்போ சொல் கௌரி, நான் உன்னை ஏமாற்ற வேணும் என்று உண்மையை மறைச்சதாக நினைக்கிறியா?'' தடுமாற்றத்துடன் கேட்டான்.

''இப்போது என்ன செய்வதாக உத்தேசம்? அதைச் சொல்லுங்கள்'' கௌரி கோபமும் துயரமுமாகக் கேட்டாள்.

''இந்த வக்கீல் நோட்டீசைத் தூக்கி குப்பைக் கூடையில் போட்டுட்டு மறந்து போகிறேன்.''

''பிரச்சினையை அவ்வளவு இலேசாக நளினா விட்டு விடுவாளா? விடமாட்டாள். சம்மன் வரும், கோர்ட்டில் நிற்க வேண்டிவரும். அதற்குப்பின்...''

திடீரென்று முகத்தைக் கரங்களால் மூடிக்கொண்டு கௌரி குமுறிக் குமுறி அழத் தொடங்கினாள்.

தேவநாதன் பதறிப் போய் விட்டான்.

''கௌரி... அழாதே என் சுயநலம் என்னைக் கோழையாக்கிவிட்டிடுச்சு. இந்த வீட்டை உன் பேரிலே எழுதிவச்சுடறேன். இது என் சொந்த சம்பாத்தியம். பாங்கில் வச்சிருக்கிற பணத்தையும் உன் கணக்குக்கு மாத்திடறேன். நளினா கோர்ட்டுக்கு இழுக்கட்டும். தண்டனை கிடைச்சா கிடைக்கட்டும். நான் அனுபவிச்



சுக்கறேன். நீயும் குழந்தைகளும் பசிக்காம இந்த வீட்டிலே சுகமா இருந்தா அது போதும் எனக்கு'' தழுதழுத்தான்.

''என் குழந்தைகளுக்கு அப்பா வேணுமே. இந்த வீடும் கொஞ்ச பணமும் இருந்திட்டா எங்க வாழ்க்கை நெறஞ்சிடுமா? சொல்லுங்க.''

''நான் வேறு என்ன செய்ய முடியும்? நளினா விஷமக்காரி, ஆத்திரக்காரி, வஞ்சம் தீர்க்க என்னை ஜெயிலில் வைக்கப் பார்ப்பாள். அத்தனை குரூரமான மனம் அவளுக்கு.

துயரத்தோடு பேசினான். அவளது கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரை மெல்லத் துடைத்துவிட்டான்.

''கௌரி, ஒண்ணுமட்டும் நீ தெரிஞ்சுக்கோ. எந்த நிலையிலும் உன்னை நான் நேசிக்கிறேன். நேசித்துக் கொண்டேயிருப்பேன். நீயும் குழந்தைகளும் எனது உயிருக்கும் மேலானவங்க. உங்க சந்தோஷத்துக்காக, நல்வாழ்வுக்காக என் உயிரைக் கேட்டாலும் மனமுவந்து கொடுத்திடுவேன்.''

'இப்படிப்பட்ட விபரீதம் இப்ப ஏன் வந்து குறுக்கிடணும்? அமைதியா சந்தோஷமா வாழ்ந்து கிட்டிருந்த நம் குடும்பம் சிதறிப் போகணும்னு இந்தக் கஷ்டம் வந்ததா? சொல்லுங்க.''

விம்மியபடி கணவனை அணைத்துக்கொண்டு அழுகையில் குலுங்கினாள் கௌரி.

''அழாதே கௌரி.''

சமாதானப்படுத்த முயன்ற தேவநாதனும் பச்சைக் குழந்தைபோல் விம்மி அழுதான்.

## 7

சில நாட்கள் கழிந்தன. தங்களுக்கு வந்த வக்கீல் நோட்டீசுக்கு கௌரியும் தேவநாதனும் மறுப்பு தெரிவிக்கவோ பதிலளிக்கவோ முயலவில்லை. கிணற்றில் போட்ட கல்லாக நாட்கள் எந்தவிதமான சலனமும் இல்லாமல் வேகமாக நகர்ந்தன.

கடைசியில் அவள் எதிர்பார்த்த அந்த நாளும் வந்து சேர்ந்தது. சிடி சிவில் கோர்ட்டில் குறிப்பிட்ட தேதி, நேரத்தில் அவர்கள் ஆஜராக வேண்டும் என்று சம்மனும் வந்தது.

நீதியை அவமதிப்பது குற்றமாயிற்றே. வேறு வழியின்றி தங்கள் சார்பில் வழக்காட வக்கீல் சந்தானத்தை அமர்த்தினான் தேவநாதன்.

அவள் வாழ்க்கையில் ஏற்கெனவே நடந்த பல திடுக்கிடும் சம்பவங்கள் போதாது என்று நீதி மன்றத்திற்கு வந்து கூண்டிலே நிற்க வேண்டிய நிர்ப்பந்தமும் கௌரிக்கு ஏற்பட்டுவிட்டது.

தன் பெயர் அழைக்கப்பட்டதும் சுற்றிலும் நின்ற யாரையும் கவனியாது அவள் கூண்டில் ஏறி நின்றாள்.

தொண்டை காய்ந்து, பேசத் தெம்பில்லாததுபோல, உணர்வுகள் தொய்ந்துபோய் அரண்டிருந்தாள். ஒன்பது ஆண்டுகள் நிம்மதியாகக் கழித்த இன்பமயமான அவர் களை திருமண வாழ்க்கைக்குச் சட்டம் முற்றுப்புள்ளி வைக்கப் போகிறதே என்ற திகிலில் அவள் உடல் முழுவதும் கிடுகிடுவென்று தடுங்கியது.



கூண்டின் ஓரத்தைக் கையால் பிடித்தபடி அவள் நின்றாள். வாதி வக்கீலின் கேள்விகள் ஆரம்பமாயின.

''உங்கள் பெயர்?'' என்று அவர் அதட்டலாகக் கேட்டதுமே அவள் அதிர்ந்து போனாள்.

கௌரி பதில் சொல்லி முடிக்குமுன் அழுகை தொண்டையை அடைத்தது.

''தேவநாதன் என்பவரை எத்தனை வருஷங்களாகத் தெரியும்?''

''பல வருஷங்களாக. சுமார் பத்து வருஷங்கள் என்று சொல்லலாம்.''

''எனது கட்சிக்காரர் நளினாவை பம்பாயில் பனிரெண்டு வருஷங்களுக்கு முன்பே தேவநாதன் திருமணம் செய்து கொண்டார் என்ற உண்மை தெரியுமா?''

''தெரியும்'' கௌரி மென்று விழுங்கினாள்.

''அப்படித் தெரிந்தும் அவரை நீங்கள் திருமணம் செய்து கொள்ள ஒப்பியது முறையா? நீங்க படிச்சபெண் தானே? பலதார விவாகம் சட்ட விரோதமான காரியம் என்பது தெரியாதா?''

''தெரியும்'' விசும்பினாள்.

''தெரிஞ்சும் அவரை ஏன் கல்யாணம் செய்துக்க ஒப்பினீங்க?''

கன்னத்தில் தெரித்து விழுந்த கண்ணீர்த் துளியை விரல்களால் தட்டிவிட்டு, கௌரி சற்றே நிமிர்ந்தாள். வக்கிலை உறுத்துப் பார்த்தாள். எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

''அவரைக் கல்யாணம் செய்து கொண்டதாக யார் சொன்னது?''

திடீரென்று அவள் குறுக்குக் கேள்வி ஒன்றைப் போட்டாள்.

வக்கிலின் முகத்திலே அசட்டுச் சிரிப்பு.

''கேள்வி கேட்கிறவன் நான். பதில் சொல்ல வேண்டியது உங்கள் கடமை. உங்களுக்கும் தேவநாதனுக் கும் எப்போது, எங்கே கல்யாணம் நடந்தது?''

''அதான் சொல்லிட்டேனே. எனக்கும் அவருக்கும் கல்யாணம் நடக்கவில்லையே!''

''அப்போ நீங்கள் அவர் மனைவியாக வாழ்ந்தது பற்றி என்ன சொல்லப் போறீங்க?''

''நான் அவரைச் சந்தித்தேன். என்னிடம் அவர் போக வர பழக்கம். அவ்வளவுதான். கல்யாணம் செய்து கொண்டு மனைவியா இருந்தால், என் கழுத்திலே தாலி இருக்குமே. பாருங்க...''

கோபத்தோடு பேசியவள், கைமீது போர்த்திக் கொண்டிருந்த சேலைத் தலைப்பை விசுக்கென்று நகர்த்தினாள்.

கருமணிகூட அணியாத கழுத்து வெறுமையாக இருந்தது.

வக்கில் முகவாயைச் சொரிந்து கொண்டார்.

''உங்களுக்கும் தேவநாதனுக்கும் திருமணம் நடக்கவில்லை என்று உண்மையாத்தான் சொல்றீங்களா?''

''உண்மைதான். எனக்கும் அவருக்கும் கல்யாணம் ஏதும் நடக்கவில்லை.''



''உங்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக் கின்றனவே! அவர்கள்?''

''தாலி கட்டிய என் கணவனுக்குப் பிறந்தவை. அவர் இறந்து போனார். எனக்கும் தேவநாதனுக்கும் சிநேகிதம் ஏற்பட்டது. அதைத்தவிர எங்களுக்கு எந்தவிதமான சொந்தமும் கிடையாது.''

முகம் சிவக்க, நெஞ்சு பதறச் சொல்லிவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டு தரையைப் பார்த்தாள்.

துயரத்தின் சுமை தாளாது நெஞ்சு கொதித்தது. நீதி தேவதையின் முன் இப்படி ஒரு பொய் சொல்லத் தேவையா?

அன்று அரசவையில் தன் கணவனுக்கு நீதி கோரி, உண்மையைப் பேச வந்த கண்ணகி மரபில் வந்த பெண் அவள்.

சரியோ... தவறோ... கடவுள் சாட்சியாகக் கோயிலில் அவள் கழுத்தில் தாலியைக் கட்டி, அன்போடு அவளுடன் அத்தனை ஆண்டுகள் வாழ்ந்த கணவன்! அவனை 'கணவன் இல்லை, வெறும் காதலன்' என்று அவள் நீதி மன்றத்திலே மதிப்புக்குரிய நீதிபதி முன்னிலையில் - எல்லோர் முன்னிலையிலும் சொல்லி விட்டாளே!

இந்தக் கொடுமைக்கு பூமி பிளந்து அவளை ஏன் விழுங்கவில்லை?

அதற்குமேல் வழக்கைத் தொடர இடம் இல்லாது போய்விட்டது.

கூண்டிலிருந்து இறங்கி விட்டாள் கௌரி. யாரையும் நிமிர்ந்து பார்க்க அவளுக்குத் துணிவு இருக்கவில்லை.

நீதிபதி முடிவில் தனது தீர்ப்பைக் கூறினார்.

''பிரதிவாதி தேவநாதனுக்கும் கௌரிக்கும் திருமணம் நடந்தது என்பது தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட வில்லை. எனவே இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன். வாதி நளினாவுடன், சட்டப்படி கணவனாக பிரதிவாதி தேவநாதன் தாம்பத்திய உரிமை என்னும் சட்டத்திற்கு உட்பட்டு, கணவனாக இருந்து வாழ்க்கையைத் திரும்பவும் நன்கு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.''

வழக்கு தள்ளுபடியானது. கோர்ட் கலைந்து விட்டது.

நீதிபதி எழுந்து தமது பிரத்தியேக அறைக்குச் சென்று விட்டார்.

தேவநாதனைச் சந்திக்காமல் ஒரு ஆட்டோவில் ஏறி விரைவாக வீட்டுக்குத் திரும்பி விட்டாள் கௌரி.

சாப்பிடத் தோன்றாது, பித்துப் பிடித்தவள்போல வெகுநேரம் தனியே முன்னறையில் தரைமீது உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

பல நினைவுகளில் சிக்கி குலுங்கி அழுதாள். பிறகு தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

பொழுது வேகமாக நகர்வதை உணர்ந்து எழுந்தாள்.

நளினாவுடன் அவளது சட்டப்படியான கணவன் தேவநாதன் வாழவேண்டும் என்று தீர்ப்பாகிவிட்டது.

இனி அவளுக்கும் குழந்தைகளுக்கும் தேவநாதன் சொந்தமற்றவன். சட்டம் கூறிவிட்டது.

தொடர்ந்து அவனது வீட்டில் அவளும் குழந்தைகளும் தங்கியிருப்பது முறையா?



எங்கே போவது?

அவளுக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது.

முரடர்களிடமிருந்து அவளுக்கு அடைக்கலம் அளித்த போது. தேவநாதன் அவளிடம் மறுநாள் சொன்ன அந்த இல்லத்தின் நினைவு பளிச்சிட்டது.

வேண்டிய துணிகளைப் பெட்டியில் அடுக்கிக் கொண்டு தனக்குத் தேவையான சில சாமான்களுடன் - குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு, அந்த அபய இல்லத்திற்குச் சென்று சரணாகதி அடைந்துவிட வேண்டும். அதுதான் சரியான வழி.

ஆதரவற்ற பெண்களையும் குழந்தைகளையும் அந்த இல்லம் அபயம் கொடுத்துக் காக்கும். பின்னர் அதன் தலைவி மூலம் எங்கேயாவது கண்ணியமான வேலையைத் தேடிக் கொள்ளலாம். வீடு கூட்டி - பத்து பாத்திரம் தேய்க்கும் வேலையானாலும் சரி: சமையல் வேலை கிடைத்தாலும் சரி, ஒப்புக்கொள்ள வேண்டியது தான். எப்படியாவது பாடுபட்டு, குழந்தைகளைப் படிக்க வைத்து ஆளாக்க வேண்டியதுதான் அவளை எதிர் நோக்கியுள்ள ஒரே கடமை.

கலங்கிய கண்களுடன், தனக்குள்ளே பலவாறாய் சிந்தித்துத் துயரப்பட்டவளாக பெட்டிக்குள் சாமான்களை எடுத்து பரபரப்பாக அடுக்கினாள்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் பள்ளிக் கூடத்திலிருந்து குழந்தைகள் வந்துவிடுவார்கள். அவர்களுக்கு என்ன பதில் சொல்வது?

தேவநாதனை இன்னமும் காணவில்லை. திடீரென்று அங்கு வந்து சேர்ந்தால் அவரை எப்படி வரவேற்பது?

துணிவுடன் கிளம்பிப் போய்விட வேண்டியதுதான் முறை.

வாயிலில் அழைப்பு மணி ஒங்கி ஒலித்ததும் அவள் திடுக்கிட்டுப் போய்விட்டாள்.

கதவைத் திறந்தாள்.

வெளியே நளினா நின்று கொண்டிருந்தாள். அவள் கையில் சில பார்சல்கள் இருந்தன.

மீண்டும் அதிர்ந்து போனாள் கௌரி.

நளினாவுக்கு அவளிடம் என்ன வேலை? எதற்காக வந்திருக்கிறாள்.

''வரலாமா?'' மெல்லியதாக முறுவலித்தபடி பதிலுக்குக் காத்திராமல் சட்டென்று உள்ளே வந்து விட்டாள் நளினா.

கையில் கொண்டு வந்திருந்த பார்சல்களை மேஜை மேல் வைத்தாள். கௌரியை காலோடு தலைவரை கூர்ந்து பார்த்தாள்.

''தேவநாதனை தண்டனையிலிருந்து காப்பாற்ற நீ பொய் சொல்லிட்டே இல்லையா? உனக்கு எத்தனை துணிச்சல்! என் பாராட்டுதல்கள்.''

சொல்லிக்கொண்டே அங்கிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

''இந்த வேளையில் இவள் இங்கே ஏன் வந்தாள்?'' குழப்பத்துடன் மௌனமாக விழித்தாள் கௌரி.

''தொண்டை காய்ஞ்சு போயிருக்கு. குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொடுப்பியா?''



மறுக்க முடியாது உள்ளே சென்று, மண் கூஜாவில் நிரப்பி வைத்திருந்த நீரை டம்ளரில் வார்த்து எடுத்து வந்தாள்.

தண்ணீரைக் குடித்தபின் டம்ளரைக் கீழே வைத்தாள் நளினா ''அப்பாடி...'' என்று பெருமூச்செறிந்தாள்.

''தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுக்கிறே; உன்னை என்னாலே புரிஞ்சுக்க முடியுது. தவிச்சு நின்ற மனிதனுக்கு தாரமா இருந்து உதவ அன்போடு முன்வந்திருக்கே. உன்னைக் குற்றம் சொல்லலை. அவரையும் குற்றம் சொல்லலை. இந்த நிலைமைக்குக் காரணம் நான்தான். காலம் தவறிப்போன விஷயம். இனி அனுதாபப்பட்டோ அடம்பிடிச்சோ பயனில்லை. இத்தனை நாழி தேவநாதனுடன்தான் பேசிக் கொண்டிருந்தேன். எத்தனை தான் சட்டம் வற்புறுத்தினாலும் இஷ்டப்படாத கணவனை எந்த மனைவியும் கட்டுப்படுத்த முடியாது. மனைவி என்ற உரிமைகளை அவளிடமிருந்து பெற முடியாது.''

''என்னைப் போன்று என் சிநேகிதி ஒருத்தி - தன்னிடமிருந்து விலகிப்போன கணவனை நீதி மன்றத்துக்கு இழுத்து, தாம்பத்திய உரிமை வழக்கு தொடர்ந்து சட்டத்தின் ஆதரவைப் பெற்றாள். 'உன் மனைவியுடன் கணவன் என்ற பொறுப்பிலிருந்து தவறாது சேர்ந்து வாழவேண்டும்' என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.''

''ஆனால் அதைச் செயலாக்குவது அத்தனை சுலபமா? சட்டத்துக்குக் கட்டுப்பட்டு அவள் கணவன் அதே வீட்டில் அவளுடன் வசித்தான். இடையே வேண்டும் என்றே ஒரு குறுக்குச் சுவர் எழுப்பத் தொடங்

கினான். மறுபடியும் நியாயம் கோரி நீதிமன்றத்துக்கு ஓடினாள் மனைவி. 'குறுக்குச் சுவர் இடிக்கப்பட வேண்டும். வீடு ஒரே வீடாக இருக்கவேண்டும்' என்று தீர்ப்புக் கிடைத்தது.''

''ஆனால் அவன் வேறு ஒரு குறுக்குச் சுவர் எழுப்பி விட்டான். மனத்தளவில் - கருத்தளவில் அவர்களுக்கு இடையே ஒரு பெரிய குறுக்குச் சுவர். எந்தச் சட்டத்தாலும் உடைக்க முடியாத பலமான சுவர்.''

''கர்நாடக இசை கேட்க அவள் ரேடியோவைத் திருப்பினால், பாப் சங்கீதத்தை காது டமாரம் வெடிக்க டேப் ரிக்கார்டரில் சப்தமாகப் போட்டு இம்சித்தான். ஒரே மேஜையில் 'உம்' என்று கூடப் பேசாது, அவள் எதிரே உட்கார்ந்து உணவை விழுங்கினான். படுக்கை அறைக்குள் அவள் வரும் முன்பே குறட்டைவிட்டு உறங்கத் தொடங்கினான்.

''அவளது உறவினர்கள் வீட்டுக்கு வந்தால், கதைப் புத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு கால்மேல் கால் போட்டுக்கொண்டு படிக்கத் தொடங்கினான். இப்படி சொல்ல முடியாத பல தொல்லைகளைக் கொடுத்து அவளிடமிருந்து தான் விலகி நிற்பதை நிமிஷத்துக்கு நிமிஷம் அழுத்தமாக உணர்த்திக் கொண்டிருந்தான். இதைவிட ஒரு சித்திரவதை ஒரு பெண்ணுக்கு வேறு என்ன இருக்க முடியும்? அன்பில்லாத கணவனை வற்புறுத்தி, மிரட்டி தன்னுடன் வாழ வைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்ட அவள், முடிவில் தானே விலகிக்கொண்டு விட்டாள்.''

இதெல்லாம் என்கிட்டே எதுக்குச் சொல்றீங்க?'' சிறிது கோபமும் வியப்புமாகக் கேட்டாள் கௌரி.



''சற்று முன்புவரை, நான் தங்கியிருந்த ஹோட்டலில் தேவநாதனுடன் எங்கள் வருங்காலத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். அவரது பேச்சிலிருந்து என் தோழிக்கு நேர்ந்த அனுபவங்கள்தான் எனக்கும் நேரப் போகிறது என்று தெளிவாகப் புரிந்தது. என்னால் அது மாதிரி சிறுமைப்பட முடியாது. அதனாலே...''

பிரமிப்புடன் அவளது முகத்தையே பார்த்தாள் கௌரி.

தேவநாதனுக்கு விடுதலை கொடுத்துடறதுன்னு முடிவு செய்திட்டேன். என்னை விட்டு ஓடி விட்டவர், வேறு ஒருத்தியைக் கட்டிக்கிட்டு வாழ்கிறார்னு கேள்விப் பட்டு கொதிச்சுப்போய், ஆத்திரத்திலே அவரை அவமானப்படுத்தி, எனக்கு உள்ள உரிமையை எடுத்துக் காட்டி அவரை ஆட்டிப் படைக்கணுங்கிற ஆவேசந்தான் இந்த வழக்குக்கே காரணம்.''

''வழக்கில்தான் ஜெயிச்சுட்டீங்களே! அப்புறம் ஏன் சலிச்சுக்கிறீங்க?''

கௌரி மெல்லிய குரலில் கேட்டாள்.

''உண்மையில் உங்க ரெண்டு பேருக்கும்தான் வெற்றி கிடைச்சிருக்கு. உயிரே போனாலும் உன்னை விடப் போவதில்லை. சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்தாலும் தண்டனை காலம் முடிஞ்சதும் உன்னோடு தான் வாழப் போவதாக தேவநாதன் ஒரே பிடிவாதமாகச் சொன்னார். ஆனால் தண்டனை கிடைக்க முடியாதபடி அவரை நீ தப்பிக்க வைத்து, நீதான் அவருடைய உண்மையான மனைவின்னு உணர்த்திட்டே. சர்க்கரைன்னு காகிதத்திலே எழுதி வாயில் தடவிக்

கொண்டால் தித்தித்து விடுமா? சட்டத்தின் அளவில் எனக்கு வெற்றி. ஆனால் நடைமுறையில் வெற்றி உங்க ரெண்டு பேருக்கும்தான். இனி தொடர்ந்து போராடுவதில் பயன் இல்லைன்னு மனத்தில் ஒரு தீர்மானம் உருவாயிடுச்சு. தாலி கட்டின கணவனுக்குத் தண்டனை வாங்கித்தர முயன்ற எனக்கு நானே தண்டனை வழங்கிக் கொள்கிறேன்.''

''குழப்பமா இருக்கு. நீங்க சொல்றது ஒண்ணும் விளங்கலையே?''

''சுருக்கமா சொல்லிட்டுப் போயிடறேன். உனக்கும் குழந்தைகளுக்கும் என் பரிசாகக் கொஞ்சம் துணிகள் வாங்கிட்டு வந்திருக்கேன். மறுக்காதே எடுத்துக்கோ. நீ தேவநாதனுக்காகச் செய்த தியாகம் என் மனத்தை ரொம்ப தொட்டுடிச்சு. கணவன் தப்பவேணும்னு ஒரே நோக்கத்தோட கோர்ட் ஏறி, 'இவர் என் கணவர் இல்லை'ன்னு பொய் சொல்ல உனக்கு அபாரமான துணிச்சல்தான். அதைப் பாராட்டறேன். தேவநாதனை வற்புறுத்தி உன் வாழ்வையும் பாழடிச்சு, என் வாழ்க்கையையும் வீணாக்கிக் கொள்வதைவிட அவரை உனக்கு விட்டுக் கொடுத்துடறதுன்னு முடிவு செய்துட்டேன். இனி அவர் உன் கணவர். உன் குழந்தைகளுக்குத் தந்தை, வருங்காலம் இனி உங்கள் இருவருக்கும் சொந்தம்.''

பேச முடியாது உணர்ச்சிவசப்பட்ட நளினா, கௌரியை தீர்க்கமாகப் பார்த்தாள்.

உன் கணவருக்கு சட்டபூர்வமாக என்னிடமிருந்து விடுதலை கிடைக்கும்.''

இப்படிச் சொன்ன நளினா, வேகமாக எழுந்து விடை பெற்றுக்கொண்டாள்.



பிடிவாதக்காரி, ராட்சசி பொல்லாதவள் என்றெல்லாம் எண்ணி மிரண்டு போயிருந்தாளே கௌரி!

முடிவில் நளினா ஒரு சராசரிப் பெண்தானா?

'ஐயோ பாவம்!' என்று வினாடியில் மனம் இரங்கிப் போயிற்று.

''அக்கா!'' என்று ஆசையுடன் அழைத்துக் கொண்டே ஓடி வந்தாள். ''ரொம்ப நன்றி... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை.''

''ஒண்ணும் சொல்ல வேண்டாம் ரெண்டு பேரும் சந்தோஷமா இருங்க. அது போதும்'' வேகமாகப் போய் விட்டாள்.

கௌரி பரபரப்பாக முகத்தைக் கழுவி, கூந்தலை வாரி முடித்து சீராக்கி, அலமாரியில் அடுக்கியிருந்த வாயில் சேலை ஒன்றை எடுத்து உடுத்திக்கொண்டாள். பீரோவில் கழற்றி வைத்திருந்த தாலிச்சரட்டை எடுத்து மகிழ்ச்சியுடன் கழுத்தில் அணிந்து கொண்டு குங்குமப் பொட்டைப் பெரிதாக வைத்துக் கொள்வதற்குள் மறுபடியும் வாயில் அழைப்பு மணி ஓசை கேட்டது.

மகிழ்ச்சியாக மலர்ந்த முகத்துடன் உள்ளே வந்த தேவநாதன். ஓடிவந்து அவளை வாரித் தன் மார்போடு அணைத்துக் கொண்டான்.

''சங்கதி தெரியுமோ?''

அவன் கேட்குமுன் அவள் செல்லமாகச் சிரித்து விட்டாள்.

''சட்டத்திற்கு முன்னால் அக்காதான் உங்க மனைவி இன்னும் கொஞ்ச காலம்வரை. ஆனால் சாமிக்கு முன் நான் உங்களுக்கு என்றும் மனைவி. சரிதானே?''

அவளை மேலும் பேசவிடாது, மகிழ்ச்சியில் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

''குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிட் டாங்க.''

அவனிடமிருந்து மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டு கதவைத் திறந்தாள் கௌரி.

''அப்பா!'' என்று உற்சாகமாகக் கூச்சலிட்டபடி ஓடி வந்து அணைத்துக் கொண்ட குழந்தைகளை வாரி எடுத்துக் கொண்டான் தேவநாதன்.

''இப்படி செல்லங்கொடுத்து கெடுக்கிறீங்களே?''

மகிழ்ச்சியில் அவள் சிரித்தபோது, வீடு முழுவதும் சலங்கை குலுங்குவது போன்ற பிரமிப்பில், தன் சிறு குடும்பத்தை அன்போடு, பரிவோடு, நெஞ்சு நெகிழ, கண்கள் பனிக்க பலமுறை பார்த்துப் பார்த்து பூரித்துப் போனான்.

★ ★ ★